ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:



மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

மூன்றாம் ஆயிரம்



First Edition: 2008

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

மூன்றாம் ஆயிரம்

பொய்கையாழ்வார் அருளிச் செய்த
முதல் திருவந்தாதி

முதல் திருவந்தாதி தனியன்
(முதலியாண்டான் அருளிச் செய்தது)

கைதை சேர் பூம்பொழில் சூழ் கச்சி நகர் வந்துதித்த *
பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு * - வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி[1] *
படிவிளங்கச் செய்தான் பரிந்து

பொய்கையாழ்வார் அருளிச் செய்த
முதல் திருவந்தாதி

2082 * வையம் தகளியா * வார்கடலே நெய்யாக *
வெய்ய கதிரோன் விளக்காக ** - செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே * சூட்டினேன் சொல் மாலை *
இடராழி நீங்குகவே[2] என்று 1

2083 என்று கடல் கடைந்தது? * எவ்வுலகம் நீரேற்றது? *
ஒன்றும் அதனை உணரேன் நான் ** - அன்று அது
அடைத்து உடைத்து * கண் படுத்த ஆழி * இது நீ
படைத்து இடந்து உண்டு உமிழ்ந்த பார் 2

2084 பாரளவும் ஓரடி வைத்து * ஓரடியும் பாருடுத்த *
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே ** - சூருருவின்
பேயளவு கண்ட * பெருமான்! அறிகிலேன் *
நீயளவு கண்ட நெறி 3

2085 நெறி வாசல் தானேயாய் நின்றானை * ஐந்து
பொறி வாசல் * போர்க்கதவம்[3] சார்த்தி ** - அறிவானாம்
ஆலமர நீழல் * அறம் நால்வர்க்கு அன்று உரைத்த *
ஆலம் அமர் கண்டத்தரன் 4

2086 அரன் நாரணன் நாமம் * ஆன்விடை புள்ளூர்தி *
உரை நூல் மறை உறையும் கோயில் ** - வரை நீர்
கருமம் அழிப்பு அளிப்புக் * கையது வேல் நேமி *
உருவம் எரி கார் மேனி ஒன்று 5

[1] அந்தாதி
[2] நீங்கவே
[3] போர்கதவம்

2087 ஒன்றும் மறந்தறியேன் * ஓத நீர் வண்ணனை நான் *
இன்று மறப்பனோ? ஏழைகாள்! ** - அன்று
கருவரங்கத்துள் கிடந்து * கை தொழுதேன் கண்டேன் *
திருவரங்க மேயான் திசை 6

2088 திசையும் * திசையுறு தெய்வமும் * தெய்வத்து
இசையும் * கருமங்கள் எல்லாம் ** - அசைவில் சீர்க்
கண்ணன் நெடுமால் * கடல் கடைந்த * காரோத
வண்ணன் படைத்த மயக்கு 7

2089 மயங்க வலம்புரி வாய் வைத்து * வானத்து
இயங்கும் * எறிகதிரோன் தன்னை ** - முயங்கு அமருள்
தேராழியால் மறைத்தது * என்? நீ திருமாலே! *
போராழிக் கையால் பொருது 8

2090 பொருகோட்டோர் ஏனமாய்ப் * புக்கிடந்தாய்க்கு * அன்று உன்
ஒரு கோட்டின் மேல் கிடந்ததன்றே ** - விரிதோட்ட
சேவடியை நீட்டித் * திசை நடுங்க விண் துளங்க *
மாவடிவின் நீ அளந்த மண் 9

2091 மண்ணும் மலையும் * மறிகடலும் மாருதமும் *
விண்ணும் விழுங்கியது மெய் என்பர் ** - எண்ணில்
அலகளவு கண்ட * சீராழியாய்க்கு * அன்று இவ்
வுலகளவும் உண்டோ? உன் வாய் 10

2092 வாய் அவனை அல்லது * வாழ்த்தாது * கை உலகம்
தாயவனை அல்லது * தாம் தொழா ** - பேய் முலை நஞ்சு
ஊணாக உண்டான் * உருவொடு பேர் அல்லால் *
காணா கண் கேளா செவி 11

2093 செவி வாய் கண் மூக்கு * உடல் என்று ஐம்புலனும் * செந்தீ
புவி கால் * நீர் விண் பூதம் ஐந்தும் ** - அவியாத
ஞானமும் வேள்வியும் * நல் அறமும் என்பரே *
ஏனமாய் நின்றாற்கு இயல்வு 12

2094 இயல்வாக * ஈந்துழாயான் அடிக்கே செல்ல *
முயல்வார் இயல் அமரர் முன்னம் ** - இயல்வாக
நீதியாலோதி * நியமங்களால் பரவ *
ஆதியாய் நின்றார் அவர் 13

2095 அவரவர் தாம் தாம் * அறிந்தவாறு ஏத்தி *
இவரிவர் எம்பெருமான் என்று ** - சுவர் மிசைச்
சார்த்தியும் * வைத்தும் தொழுவர் * உலகளந்த

மூர்த்தி உருவே முதல் 14

2096 முதலாவார் மூவரே * அம்மூவர் உள்ளும்
முதலாவான் * மூரி நீர் வண்ணன் ** - முதலாய
நல்லான் அருள் அல்லால் * நாம நீர் வையகத்து *
பல்லார் அருளும் பழுது 15

2097 பழுதே பலபகலும் * போயின என்று * அஞ்சி
அழுதேன் * அரவணை மேல் கண்டு - தொழுதேன் **
கடலோதம் கால் அலைப்பக் * கண் வளரும் * செங்கண்
அடலோத வண்ணர் அடி 16

2098 அடியும் படி கடப்பத் * தோள் திசை மேல் செல்ல *
முடியும் விசும்பு அளந்தது என்பர் ** - வடி உகிரால்
ஈர்ந்தான் * இரணியனது ஆகம் * இருஞ்சிறைப் புள்
ஊர்ந்தான் உலகளந்த நான்று 17

2099 நான்ற முலைத் தலை நஞ்சுண்டு * உறி வெண்ணெய்
தோன்ற உண்டான் * வென்றி சூழ் களிற்றை - ஊன்றி **
பொருதுடைவு[4] கண்டானும் * புள்ளின்[5] வாய் கீண்டானும் *
மருதிடை போய் மண்ணளந்த மால் 18

2100 மாலும் கருங்கடலே! * என் நோற்றாய்? * வையகம் உண்டு
ஆலினிலைத் துயின்ற ஆழியான் ** - கோலக்
கரு மேனிச் * செங்கண் மால் கண் படையுள் * என்றும்
திருமேனி நீ தீண்டப் பெற்று 19

2101 பெற்றார் தளை கழலப் * பேர்ந்து[6] ஓர் குறள் உருவாய் *
செற்றார் படி கடந்த செங்கண் மால் ** - நற்றா
மரை மலர்ச் சேவடியை * வானவர் கை கூப்பி *
நிரை மலர் கொண்டு * ஏத்துவரால்[7] நின்று 20

2102 நின்று நிலம் அங்கை * நீர் ஏற்று மூவடியால் *
சென்று திசை அளந்த செங்கண்மாற்கு ** - என்றும்
படை ஆழி புள்ளூர்தி * பாம்பணையான் பாதம் *
அடை ஆழி நெஞ்சே! அறி 21

2103 அறியும் உலகெல்லாம் * யானேயும் அல்லேன் *

---

[4] பொருதிடைவு
[5] புள்
[6] பிறந்து
[7] ஏத்துவாராம்

பொறிகொள் சிறை உவணம் ஊர்ந்தாய் ** - வெறி கமழும்
காம்பேய் மென்தோளி * கடை வெண்ணெய் உண்டாயை *
தாம்பே கொண்டு ஆர்த்த தழும்பு 22

2104 தழும்பிருந்த சார்ங்க நாண் * தோய்ந்தவாம் அங்கை *
தழும்பிருந்த தாள் சகடம் சாடி ** - தழும்பிருந்த
பூங்கோதையாள் வெருவப் * பொன்பெயரோன் மார்பு இடந்த *
வீங்கோத வண்ணர் விரல் 23

2105 விரலோடு வாய் தோய்ந்த * வெண்ணெய் கண்டு * ஆய்ச்சி
உரலோடு உறப் பிணித்த நான்று ** - குரல் ஓவாது
ஏங்கி நினைந்து * அயலார் காண இருந்திலையே? *
ஓங்கோத வண்ணா! உரை 24

2106 உரை மேல் கொண்டு * என் உள்ளம் ஓவாது * எப்போதும்
வரை மேல் * மரதகமே போல ** - திரை மேல்
கிடந்தானைக் * கீண்டானை * கேழலாய்ப் பூமி
இடந்தானை ஏத்தி எழும் 25

2107 எழுவார் விடை கொள்வார் * ஈன் துழாயானை *
வழுவா வகை நினைந்து வைகல் - தொழுவார் **
வினைச் சுடரை நந்துவிக்கும் * வேங்கடமே * வானோர்
மனச் சுடரைத் தூண்டும் மலை 26

2108 மலையால் குடை கவித்து * மாவாய் பிளந்து *
சிலையால் மராமரம் ஏழ் செற்று ** - கொலை யானைப்
போர்க்கோடு ஒசித்தனவும் * பூங்குருந்தம் சாய்த்தனவும் *
கார்க்கோடு பற்றியான் கை 27

2109 கைய வலம்புரியும் நேமியும் * கார்வண்ணத்து
ஐய! * மலர்மகள் நின் ஆகத்தாள் ** - செய்ய
மறையான் நின் உந்தியான் * மாமதிள் மூன்றெய்த *
இறையான் நின் ஆகத்து இறை 28

2110 இறையும் நிலனும் * இருவிசும்பும் காற்றும் *
அறை புனலும் செந்தீயும் ஆவான் ** - பிறை மருப்பின்
பைங்கண் மால் யானை * படு துயரம் காத்து அளித்த *
செங்கண் மால் கண்டாய் தெளி 29

2111 தெளிதாக * உள்ளத்தைச் செந்நிறீஇ * ஞானத்
தெளிதாக * நன்குணர்வார் சிந்தை ** - எளிதாகத்

தாய் நாடு கன்றே போல் * தண் துழாயான் அடிக்கே[8] *
போய் நாடிக் கொள்ளும் புரிந்து 30

2112 புரி ஒரு கை பற்றி * ஓர் பொன் ஆழி ஏந்தி *
அரி உருவும் ஆள் உருவுமாகி ** - எரி உருவ
வண்ணத்தான் மார்பிடந்த * மால் அடியை அல்லால் * மற்று
எண்ணத் தான் ஆமோ? இமை 31

2113 இமையாத கண்ணால் * இருள் அகல நோக்கி *
அமையாப் பொறி புலன்கள் ஐந்தும் - நமையாமல் **
ஆகத்து அணைப்பார் * அணைவரே * ஆயிர வாய்
நாகத்தணையான் நகர் 32

2114 நகரம் அருள் புரிந்து * நான்முகற்குப் பூ மேல் *
பகர மறை பயந்த பண்பன் ** - பெயரினையே
புந்தியால் சிந்தியாது * ஓதி உரு எண்ணும் *
அந்தியாலாம் பயன் அங்கென்? 33

2115 என் ஒருவர் மெய் என்பர் * ஏழ் உலகுண்டு * ஆலிலையில்
முன் ஒருவனாய முகில்வண்ணா! ** - நின்னுருகிப்
பேய்த் தாய் முலை தந்தாள் * பேர்ந்திலளால் * பேர் அமர்க்கண்
ஆய்த் தாய் முலை தந்தவாறு! 34

2116 ஆறிய அன்பில் * அடியார் தம் ஆர்வத்தால் *
கூறிய குற்றமாக் கொள்ளல் நீ - தேறி **
நெடியோய்! அடி * அடைதற்கன்றே * ஈரைந்து
முடியான் படைத்த முரண் 35

2117 முரணை[9] வலி * தொலைதற்கு ஆமென்றே[10] * முன்னம்
தரணி தனதாகத் தானே ** - இரணியனைப்
புண் நிரந்த வள்ளுகிரால் * பொன்னாழிக் கையால் * நீ
மண் இரந்து கொண்ட வகை 36

2118 வகையறு நுண்கேள்வி * வாய்வார்கள் * நாளும்
புகை விளக்கும் பூம்புனலும் ஏந்தி ** - திசை திசையின்
வேதியர்கள் * சென்று இறைஞ்சும் வேங்கடமே * வெண்சங்கம்
ஊதிய வாய் மால் உகந்த ஊர் 37

2119 ஊரும் வரி அரவம் * ஒண் குறவர் மால் யானை *

---

[8] அடியே
[9] முரண
[10] ஆமன்றே

பேர எறிந்த பெருமணியை ** - கார் உடைய
மின் என்று * புற்றடையும் வேங்கடமே * மேல சுரர்
எம்மெனு[11] மாலதிடம் 38

2120 இடந்தது பூமி * எடுத்தது குன்றம் *
கடந்தது கஞ்சனை முன் அஞ்ச ** - கிடந்ததுவும்
நீரோத மாகடலே * நின்றதுவும் வேங்கடமே *
பேரோத வண்ணர் பெரிது 39

2121 பெருவில் பகழிக் * குறவர் கைச் செந்தீ *
வெருவிப் புனம் துறந்த வேழம் ** - இருவிசும்பில்
மீன் வீழக் * கண்டஞ்சும் வேங்கடமே * மேல் அசுரர்
கோன் வீழக் கண்டு உகந்தான் குன்று 40

2122 குன்றனைய குற்றம் செயினும் * குணம் கொள்ளும் *
இன்று முதலாக என் நெஞ்சே! ** - என்றும்
புறன் உரையே ஆயினும் * பொன்னாழிக் கையான் *
திறன் உரையே சிந்தித்திரு 41

2123 திருமகளும் மண்மகளும் * ஆய்மகளும் சேர்ந்தால் *
திருமகட்கே தீர்ந்தவாறு என் கொல்? ** - திருமகள்[12] மேல்
பாலோதம் சிந்தப் * படநாகணைக் கிடந்த *
மாலோத வண்ணர் மனம் 42

2124 மன மாசு தீரும் * அறுவினையும் சாரா *
தனமாய தானே[13] கைகூடும் ** - புனமேய
பூந்துழாயான் அடிக்கே * போதொடு நீர் ஏந்தி *
தாம் தொழா நிற்பார் தமர் 43

2125 தமர் உகந்தது எவ்வுருவம் * அவ்வுருவம் தானே *
தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர் ** - தமர் உகந்து
எவ்வண்ணம் சிந்தித்து * இமையாது இருப்பரே *
அவ்வண்ணம் ஆழியானாம் 44

2126 ஆமே அமரர்க்கு * அறிய? அது நிற்க *
நாமே அறிகிற்போம் நல்நெஞ்சே! ** - பூமேய
மாதவத்தோன் தாள் பணிந்த * வாள் அரக்கன் நீள்முடியை *
பாதமத்தால் எண்ணினான் பண்பு 45

---

[11] எம்மென்ற / என்னென்ற / என்னென்னும்
[12] திருமுக
[13] தாமே

2127 பண் புரிந்த நான்மறையோன் * சென்னிப் பலி ஏற்ற *
வெண்புரிநூல் மார்பன் வினை தீர ** - புண் புரிந்த
ஆகத்தான் * தாள் பணிவார் கண்டீர் * அமரர் தம்
போகத்தால்[14] பூமி ஆள்வார் 46

2128 வாரி சுருக்கி * மதக் களிறு ஐந்தினையும் *
சேரி திரியாமல் செந்நிறீஇ ** - கூரிய
மெய்ஞ்ஞானத்தால் * உணர்வார் காண்பரே * மேலொரு நாள்
கைந்நாகம் காத்தான் கழல் 47

2129 கழல் ஒன்று எடுத்து * ஒரு கை சுற்றி ஓர் கை மேல் *
சுழலும் சுராசுரர்கள் அஞ்ச ** - அழலும்
செருவாழி ஏந்தினான் * சேவடிக்கே செல்ல *
மருவாழி நெஞ்சே! மகிழ்[15] 48

2130 மகிழ் அலகொன்றே போல் * மாறும் பல்யாக்கை *
நெகிழ முயல்கிற்பார்க்கு அல்லால் ** - முகிழ் விரிந்த
சோதி போல் தோன்றும் * சுடர் பொன் நெடுமுடி * எம்
ஆதி காண்பார்க்கும் அரிது 49

2131 அரிய புலன் ஐந்தடக்கி * ஆய்மலர் கொண்டு * ஆர்வம்
புரியப்[16] பரிசினால் புல்கில் ** - பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த * மாவலி பால் * வண்கை நீர்
ஏற்றானைக் காண்பது எளிது 50

2132 எளிதில் இரண்டடியும் காண்பதற்கு * என் உள்ளம்
தெளியத் * தெளிந்தொழியும் செவ்வே ** - களியில்
பொருந்தாதவனைப் * பொரல் உற்று * அரியாய்
இருந்தான் திருநாமம் எண் 51

2133 எண்மர் பதினொருவர் * ஈரறுவர் ஓரிருவர் *
வண்ண மலர் ஏந்தி வைகலும் ** - நண்ணி
ஒரு மாலையால் * பரவி ஓவாது * எப்போதும்
திருமாலைக் கை தொழுவர் சென்று 52

2134 * சென்றால் குடையாம் * இருந்தால் சிங்காசனமாம் *
நின்றால் மரவடியாம் நீள் கடலுள் ** - என்றும்
புணையாம் மணிவிளக்காம் * பூம்பட்டாம் புல்கும்
அணையாம் * திருமாற்கு அரவு 53

[14] போகத்தார்
[15] மகிழ்ந்து
[16] புரிந்த

2135 அரவம் அடல் வேழம் * ஆன் குருந்தம் புள் வாய் *
குரவை குடமுலை மற்குன்றம் ** - கரவின்றி
விட்டிறுத்து மேய்த்தொசித்துக் * கீண்டு கோத்தாடி * உண்டு
அட்டெடுத்த செங்கண் அவன் 54

2136 அவன் தமர் * எவ்வினையராகிலும் * எங்கோன்
அவன் தமரே * என்றொழிவது அல்லால் ** - நமன் தமரால்
ஆராயப்பட்டு * அறியார் கண்டீர் * அரவணை மேல்
பேராயற்கு ஆட்பட்டார் பேர் 55

2137 பேரே வரப் * பிதற்றல் அல்லால் எம் பெம்மானை *
ஆரே அறிவார்? அது நிற்க ** - நேரே
கடிக் கமலத்து உள் இருந்தும் * காண்கிலான் * கண்ணன்
அடிக் கமலம் தன்னை அயன் 56

2138 அயல் நின்ற வல்வினையை * அஞ்சினேன் அஞ்சி *
உய நின் திருவடியே சேர்வான் ** - நயம் நின்ற
நன்மாலை கொண்டு * நமோ நாரணா என்னும் *
சொல் மாலை கற்றேன் தொழுது 57

2139 தொழுது மலர் கொண்டு * தூபம் கை ஏந்தி *
எழுதும் எழுவாழி நெஞ்சே! ** - பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் * மால் அடியே கை தொழுவான் *
அந்தரம் ஒன்றில்லை அடை 58

2140 அடைந்த அருவினையோடு * அல்லல் நோய் பாவம் *
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் ** - நுடங்கிடையை
முன் இலங்கை வைத்தான் * முரண் அழிய * முன்னொரு நாள்
தன் வில் அங்கை வைத்தான் சரண் 59

2141 சரணா மறை பயந்த * தாமரையானோடு *
மரணாய மன்னுயிர்கட்கு எல்லாம் ** - அரணாய
பேராழி கொண்ட * பிரான் அன்றி மற்றறியாது *
ஓராழி சூழ்ந்த உலகு 60

2142 உலகும் உலகிறந்த ஊழியும் * ஒண்கேழ்
விலகு * கருங்கடலும் வெற்பும் ** - உலகினில்
செந்தீயும் * மாருதமும் வானும் * திருமால் தன்
புந்தியிலாய புணர்ப்பு 61

2143 புணர் மருதினூடு போய்ப் * பூங்குருந்தம் சாய்த்து *
மணம் மருவ மால் விடை ஏழ் செற்று ** - கணம் வெருவ
ஏழுலகும் தாயினவும் * எண்திசையும் போயினவும் *

சூழ் அரவப் பொங்கணையான் தோள் 62

2144 தோள் அவனை அல்லால் தொழா * என் செவி இரண்டும் *
கேள் அவனது இன்மொழியே கேட்டிருக்கும் ** - நா நாளும்
கோள் நாகணையான் * குரைகழலே கூறுவதே *
நாணாமை நள்ளேன் நயம் 63

2145 நயவேன் பிறர் பொருளை * நள்ளேன் கீழாரோடு *
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால் ** - வியவேன்
திருமாலை அல்லது * தெய்வம் என்று ஏத்தேன் *
வருமாறு என் நம்[17] மேல் வினை? 64

2146 வினையால் அடர்ப்படார் * வெந்நரகில் சேரார் *
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார் ** - நினைதற்கு
அரியானைச் * சேயானை * ஆயிரம் பேர்ச் செங்கண்
கரியானைக் கை தொழுதக்கால் 65

2147 காலை எழுந்து * உலகம் கற்பனவும் * கற்றுணர்ந்த
மேலைத் தலை மறையோர் வேட்பனவும் ** - வேலைக்கண்
ஓராழியான் அடியே * ஓதுவதும் ஓர்ப்பனவும் *
பேராழி கொண்டான் பெயர் 66

2148 பெயரும் கருங்கடலே * நோக்கும் ஆறு * ஒண்பூ
உயரும் * கதிரவனே நோக்கும் ** -உயிரும்
தருமனையே நோக்கும் * ஒண் தாமரையாள் கேள்வன் *
ஒருவனையே நோக்கும் உணர்வு 67

2149 உணர்வாரார் உன் பெருமை? * ஊழி தோறூழி *
உணர்வாரார் உன் உருவம் தன்னை? ** - உணர்வாரார்
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! * வேங்கடத்தாய்! * நால்வேதப்
பண்ணகத்தாய்! நீ கிடந்த பால்? 68

2150 பாலன் தனது உருவாய் * ஏழுலகுண்டு * ஆலிலையின்
மேல் அன்று நீ வளர்ந்த மெய் என்பர் ** - ஆல் அன்று
வேலை நீர் உள்ளதோ? * விண்ணதோ? மண்ணதோ? *
சோலை சூழ் குன்றெடுத்தாய்! சொல்லு[18] 69

2151 சொல்லுந்தனையும் தொழுமின் விழுமுடம்பு *
செல்லுந்தனையும் திருமாலை ** - நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் * தந்திரத்தால் மந்திரத்தால் *

---

[17] என்னென்

[18] சொல்

நாமத்தால் ஏத்துதிரேல் நன்று 70

2152 நன்று பிணி மூப்புக் * கையகற்றி நான்கு ஊழி *
நின்று நிலமுழுதும் ஆண்டாலும் ** - என்றும்
விடல் ஆழி நெஞ்சமே! * வேண்டினேன் கண்டாய் *
அடல் ஆழி கொண்டான் மாட்டு அன்பு 71

2153 அன்பு ஆழியானை * அணுகென்னும் நா அவன் தன் *
பண்பாழித் தோள் பரவி ஏத்தென்னும் ** - முன்பு ஊழி
காணானைக் காண் என்னும் கண் * செவி கேள் என்னும் *
பூணாரம் பூண்டான் புகழ் 72

2154 புகழ்வாய் பழிப்பாய் * நீ பூந்துழாயானை *
இகழ்வாய் கருதுவாய் நெஞ்சே![19] ** - திகழ் நீர்க்
கடலும் மலையும் * இருவிசும்பும் காற்றும் *
உடலும் உயிரும் ஏற்றான் 73

2155 ஏற்றான் புள் ஊர்ந்தான் * எயில் எரித்தான் மார்விடந்தான் *
நீற்றான் நிழல் மணிவண்ணத்தான் ** - கூற்றொரு பால்
மங்கையான் * பூமகளான் வார்சடையான் * நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு 74

2156 காப்பு உன்னை உன்னக் கழியும் * அருவினைகள்
ஆப்பு உன்னை உன்ன அவிழ்ந்தொழியும் ** - மூப்பு உன்னைச்
சிந்திப்பார்க்கு இல்லை * திருமாலே! * நின் அடியை
வந்திப்பார் காண்பர் வழி 75

2157 வழி நின்று * நின்னைத் தொழுவார் * வழுவா
மொழி நின்ற * மூர்த்தியரே ஆவர் ** - பழுதொன்றும்
வாராத வண்ணமே விண் கொடுக்கும் * மண் அளந்த
சீரான் திருவேங்கடம் 76

2158 வேங்கடமும் * விண்ணகரும் வெஃகாவும் * அஃகாத
பூங்கிடங்கின் * நீள்கோவல் பொன்னகரும் ** - நான்கு இடத்தும்
நின்றான் இருந்தான் * கிடந்தான் நடந்தானே *
என்றால் கெடுமாம் இடர் 77

2159 இடர் ஆர் படுவார்? * எழு நெஞ்சே * வேழம்
தொடர் வான் * கொடு முதலை சூழ்ந்த ** - படம் உடைய
பைந்நாகப் பள்ளியான் * பாதமே கை தொழுதும் *
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு 78

[19] என் நெஞ்சே

2160 கொண்டானை அல்லால் * கொடுத்தாரை யார் பழிப்பார்? *
மண் தா என இரந்து மாவலியை ** - ஒண் தாரை
நீர் அங்கை தோய * நிமிர்ந்திலையே? * நீள்விசும்பில்
ஆர் அங்கை தோய அடுத்து 79

2161 அடுத்த கடும் பகைஞற்கு * ஆற்றேன் என்றோடி *
படுத்த பெரும் பாழி சூழ்ந்த - விடத்தரவை **
வல்லாளன் கைக்கொடுத்த * மாமேனி மாயவனுக்கு *
அல்லாதும் ஆவரோ ஆள்? 80

2162 ஆளமர் வென்றி * அடுகளத்துள் அஞ்ஞான்று *
வாளமர் வேண்டி வரை நட்டு ** - நீள் அரவைச்
சுற்றிக் கடைந்தான் * பெயர் அன்றே? * தொல் நரகைப்
பற்றிக் கடத்தும் படை 81

2163 படையாரும் வாட்கண்ணார் * பாரசி நாள் * பைம்பூந்
தொடையலோடு * ஏந்திய தூபம் ** - இடை இடையில்
மீன் மாய * மாசூணும் வேங்கடமே * மேலொரு நாள்
மான் மாய எய்தான் வரை 82

2164 வரை குடை தோள் காம்பாக * ஆநிரை காத்து * ஆயர்
நிரை விடை ஏழ் செற்றவாறு என்னே! ** - உரவுடைய
நீராழியுள் கிடந்து * நேரா நிசாசரர் மேல் *
பேராழி கொண்ட பிரான்! 83

2165 பிரான்! உன் பெருமை * பிறர் ஆர் அறிவார்? *
உராய் உலகளந்த ஞான்று ** - வராகத்து
எயிற்று அளவு * போதாவாறு என் கொலோ? * எந்தை
அடிக்களவு போந்த படி 84

2166 படி கண்டறிதியே? * பாம்பணையினான் * புள்
கொடி கண்டறிதியே? கூறாய் ** - வடிவிற்
பொறி ஐந்தும் உள் அடக்கிப் * போதொடு நீர் ஏந்தி *
நெறி நின்ற நெஞ்சமே! நீ 85

2167 நீயும் திருமகளும் நின்றாயால் * குன்றெடுத்துப்
பாயும் * பனி மறுத்த[20] பண்பாளா ** - வாசல்[21]
கடைகழியா உள் புகாக் * காமர் பூங்கோவல் *
இடைகழியே பற்றி இனி 86

[20] மறைத்த
[21] வாயில்

2168 இனியார் புகுவார் * எழு நரக வாசல்? *
முனியாது மூரித்தாள் கோமின் ** - கனி சாயக்
கன்று எறிந்த தோளான் * கனை கழலே காண்பதற்கு *
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு 87

2169 நாடிலும் * நின் அடியே நாடுவன் * நாள் தோறும்
பாடிலும் * நின் புகழே பாடுவன் ** - சூடிலும்
பொன்னாழி ஏந்தினான் * பொன்னடியே சூடுவேற்கு *
என்னாகில் என்னே எனக்கு? 88

2170 எனக்காவார் * ஆர் ஒருவரே! * எம்பெருமான்
தனக்காவான் * தானே மற்றல்லால் ** - புனக்காயாம்
பூமேனி காணப் * பொதி அவிழும் பூவைப் பூ *
மாமேனி காட்டும் வரம் 89

2171 வரத்தால் வலி நினைந்து * மாதவ! நின் பாதம் *
சிரத்தால் வணங்கானாம் என்றே?[22] ** - உரத்தினால்
ஈரரியாய் * நேர் வலியோனாய இரணியனை *
ஓரரியாய் நீ இடந்தது ஊன் 90

2172 ஊனக்குரம்பையின் * உள் புக்கு இருள் நீக்கி *
ஞானச் சுடர்கொளீஇ நாள் தோறும் ** - ஏனத்து
உருவாய் உலகிடந்த * ஊழியான் பாதம் *
மருவாதார்க்கு உண்டாமோ வான்? 91

2173 வானாகித் தீயாய் * மறிகடலாய் மாருதமாய் *
தேனாகிப் பாலாம் திருமாலே! ** - ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க * நிறையுமே * முன்னொரு நாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு 92

2174 வயிறழல வாளுருவி * வந்தானை அஞ்ச *
எயிறிலக வாய் மடித்ததென் நீ? ** - பொறி உகிரால்
பூவடிவை ஈடழித்த * பொன்னாழிக் கையா! * நின்
சேவடி மேல் ஈடழியச் செற்று 93

2175 செற்றெழுந்து தீவிழித்துச் * சென்ற இந்த ஏழுலகும் *
மற்றிவை ஆவென்று[23] வாய் அங்காந்து ** - முற்றும்
மறையவற்குக்[24] காட்டிய * மாயவனை அல்லால் *
இறையேனும் ஏத்தாது என் நா 94

---

[22] என்னே!
[23] ஆமென்று
[24] மறையவர்க்கு

2176 நா வாயில் உண்டே * நமோ நாரணா என்று *
ஓவாது உரைக்கும் உரை உண்டே ** - மூவாத
மாக்கதிக்கண் செல்லும் * வகை உண்டே * என் ஒருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்? 95

2177 திறம்பாது என் நெஞ்சமே! * செங்கண் மால் கண்டாய் *
அறம் பாவம் என்று இரண்டும் ஆவான் ** - புறம் தான் இம்
மண் தான் * மறிகடல் தான் மாருதம் தான் * வான் தானே
கண்டாய் கடைக்கட்பிடி 96

2178 பிடி சேர் * களிறளித்த பேராளா! * உன்தன்
அடி சேர்ந்து அருள் பெற்றாள் அன்றே ** - பொடி சேர்
அனற்கு அங்கை ஏற்றான் * அவிர்சடை மேல் பாய்ந்த *
புனற்கங்கை என்னும் பேர்ப்பொன் 97

2179 பொன் திகழு மேனிப் * புரிசடை அம்புண்ணியனும் *
நின்றுலகம் தாய நெடுமாலும் ** - என்றும்
இருவரங்கத்தால் * திரிவரேலும் * ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன் 98

2180 * உளன் கண்டாய் நன்னெஞ்சே! * உத்தமன் என்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
வெள்ளத்தின் உள்ளானும் * வேங்கடத்து மேயானும் *
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர் 99

2181 * ஓரடியும் சாடுதைத்த * ஒண்மலர்ச் சேவடியும் *
ஈரடியும் காணலாம் என் நெஞ்சே! ** - ஓரடியின்
தாயவனைக் கேசவனைத் * தண்துழாய் மாலை சேர் *
மாயவனையே மனத்து வை 100

தசக அடிவரவு: வையம் வாய் நின்று புரி குன்று எளிதில் உலகும் நன்று ஆள் ஊன் அன்பு

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பூதத்தாழ்வார் அருளிச் செய்த
இரண்டாம் திருவந்தாதி

இரண்டாம் திருவந்தாதி தனியன்
(திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச் செய்தது)

என் பிறவி தீர இறைஞ்சினேன் இன்னமுதா *
அன்பே தகளி அளித்தானை * - நன்புகழ் சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் * கடல் மல்லைப்
பூதத்தார் பொன்னங்கழல்

பூதத்தாழ்வார் அருளிச் செய்த
இரண்டாம் திருவந்தாதி

2182 * அன்பே தகளியா * ஆர்வமே நெய்யாக *
இன்புருகு சிந்தை இடுதிரியா ** - நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் * நாரணற்கு *
ஞானத் தமிழ் புரிந்த நான் 1

2183 ஞானத்தால் நன்குணர்ந்து * நாரணன் தன் நாமங்கள் *
தானத்தால் மற்றவன் பேர் சாற்றினால் ** - வானத்து
அணியமரர் * ஆக்குவிக்கும் அஃதன்றே * நங்கள்
பணியமரர் கோமான் பரிசு 2

2184 பரிசு நறுமலரால் * பாற்கடலான் பாதம் *
புரிவார் புகப்பெறுவர் போலாம் ** - புரிவார்கள்
தொல்லமரர் கேள்வித் * துலங்கொளி சேர் தோற்றத்து *
நல்லமரர் கோமான் நகர் 3

2185 நகரிழைத்து நித்திலத்து * நாண்மலர் கொண்டு * ஆங்கே
திகழு மணிவயிரம் சேர்த்து ** - நிகரில்லாப்
பைங்கமலம் ஏந்திப் * பணிந்தேன் பனிமலராள் *
அங்கம் வலம் கொண்டான் அடி 4

2186 அடி மூன்றில் இவ்வுலகம் * அன்று அளந்தாய் போலும் *
அடி மூன்று இரந்து அவனி கொண்டாய் ** - படி நின்ற
நீரோத மேனி * நெடுமாலே! * நின் அடியை
யாரோத வல்லார் அறிந்து? 5

2187 அறிந்து ஐந்தும் உள்ளடக்கி * ஆய்மலர் கொண்டு * ஆர்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே ** - அறிந்து அவன் தன்
பேரோதி ஏத்தும் * பெருந்தவத்தோர் காண்பரே *
காரோத வண்ணன் கழல் 6

2188 கழல் எடுத்து வாய் மடித்துக் * கண் சுழன்று[25] * மாற்றார்
அழல் எடுத்த சிந்தையராய் அஞ்ச ** - தழல் எடுத்த
போராழி ஏந்தினான் * பொன்மலர்ச் சேவடியை[26] *
ஓராழி நெஞ்சே! உகந்து 7

2189 உகந்து உன்னை வாங்கி * ஒளி நிறங்கொள் கொங்கை *
அகம் குளிர உண்ணென்றாளாவி ** - உகந்து
முலை உண்பாய் போலே * முனிந்துண்டாய் * நீயும்
அலை பண்பால்[27] ஆனமையால் அன்று 8

2190 அன்று அது கண்டு அஞ்சாத * ஆய்ச்சி உனக்கு இரங்கி *
நின்று முலை தந்த இந்நீர்மைக்கு ** - அன்று
வரன் முறையால் நீ அளந்த * மாகடல் சூழ் ஞாலம் *
பெருமுறையால் எய்துமோ பேர்த்து? 9

2191 பேர்த்தனை * மாசகடம் பிள்ளையாய் * மண் இரந்து
காத்தனை * பல்லுயிரும் காவலனே! ** - ஏத்திய
நாவுடையேன் பூவுடையேன் * நின்னுள்ளி நின்றமையால் *
காவடியேன் பட்ட கடை 10

2192 கடை நின்று அமரர் கழல் தொழுது ** நாளும்
இடை நின்ற * இன்பத்தராவர் ** - புடை நின்ற
நீரோத மேனி * நெடுமாலே! * நின் அடியை
யாரோத வல்லார் அவர்? 11

2193 அவர் இவர் என்றில்லை * அரவணையான் பாதம் *
எவர் வணங்கி ஏத்தாதார் எண்ணில் ** - பவரும்
செழுங்கதிரோன் ஒண்மலரோன் * கண்ணுதலோன் அன்றே? *
தொழுந்தகையார் நாளும் தொடர்ந்து 12

2194 தொடரெடுத்த மால் யானை * சூழ்கயம் புக்கஞ்சி *
படரெடுத்த பைங்கமலம் கொண்டு ** - அன்று இடரடுக்க
ஆழியான் * பாதம் பணிந்தன்றே? * வானவர் கோன்
பாழி தான் எய்திற்றுப் பண்டு 13

2195 பண்டு இப்பெரும் பதியை ஆக்கி * பழி பாவம்
கொண்டு * இங்கு வாழ்வாரைக் கூறாதே ** - எண்திசையும்
பேர்த்த கரம் நான்குடையான் * பேரோதிப் பேதைகாள்! *
தீர்த்தகரராமின் திரிந்து 14

[25] சுழன்ற
[26] சேவடியே
[27] பண்பாய்

2196 திரிந்தது வெஞ்சமத்துத் * தேர் கடவி * அன்று
பிரிந்தது * சீதையை மான் பின் போய் ** - புரிந்ததுவும்
கண் பள்ளி கொள்ள * அழகியதே! * நாகத்தின்
தண் பள்ளி கொள்வான் தனக்கு 15

2197 தனக்கடிமை பட்டது * தான் அறியானேலும் *
மனத்தடைய வைப்பதாம் மாலை ** - வனத்திடரை
ஏரியாம் வண்ணம் * இயற்றும் இதுவல்லால் *
மாரியார் பெய்கிற்பார் மற்று? 16

2198 மற்றார் இயலாவர்? * வானவர் கோன் மாமலரோன் *
சுற்றும் வணங்கும் தொழிலானை ** - ஒற்றைப்
பிறை இருந்த * செஞ்சடையான் பின் சென்று * மாலைக்
குறை இரந்து தான் முடித்தான் கொண்டு 17

2199 கொண்டது உலகம் * குறள் உருவாய்க் கோள் அரியாய் *
ஒண்திறலோன் மார்வத்து உகிர் வைத்தது ** - உண்டதுவும்
தான் கடந்த ஏழுலகே * தாமரைக்கண் மால் ஒரு நாள் *
வான் கடந்தான் செய்த வழக்கு 18

2200 வழக்கன்று கண்டாய் * வலி சகடம் செற்றாய் *
வழக்கென்று நீ மதிக்க வேண்டா ** - குழக்கன்று
தீவிளவின் காய்க்கெறிந்த * தீமை திருமாலே! *
பார் விளங்கச் செய்தாய் பழி 19

2201 பழி பாவம் கையகற்றிப் * பல்காலும் நின்னை *
வழி வாழ்வார் வாழ்வராம் மாதோ ** - வழுவின்றி
நாரணன் தன் நாமங்கள் * நன்குணர்ந்து நன்கேத்தும் *
காரணங்கள்[28] தாமுடையார் தாம் 20

2202 தாம் உளரே * தம் உள்ளம் உள்ளுளதே * தாமரையின்
பூவுளதே * ஏத்தும் பொழுதுண்டே ** - வாமன்
திருமருவு * தாள் மருவு சென்னியரே * செவ்வே
அருநரகம் சேர்வதரிது 21

2203 அரியது எளிதாகும் * ஆற்றலால் மாற்றி *
பெருக முயல்வாரைப் பெற்றால் ** - கரியதோர்
வெண்கோட்டு மால் யானை * வென்றி[29] முடித்தன்றே *
தண்கோட்டு[30] மாமலரால் தாழ்ந்து 22

---

[28] தாரணங்கள்
[29] வென்று
[30] தண்தோட்டு

2204 தாழ்ந்து வரம் கொண்டு * தக்க வகைகளால் *
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும் ** - தாழ்ந்த
விளங்கனிக்குக் * கன்று எறிந்து வேற்றுருவாய் * ஞாலம்
அளந்து அடிக்கீழ்க் கொண்ட அவன் 23

2205 அவன் கண்டாய் நன்னெஞ்சே! * ஆரருளும் கேடும் *
அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான் ** - அவன் கண்டாய்
காற்றுத் தீ நீர் வான் * கருவரை மண் காரோத *
சீற்றத் தீயாவானும் சென்று 24

2206 சென்றது இலங்கை மேல் * செவ்வே தன் சீற்றத்தால் *
கொன்றது இராவணனைக் கூறுங்கால் ** - நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் * வேங்கடமே * விண்ணவர் தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து 25

2207 வந்தித்தவனை * வழி நின்ற ஐம்பூதம் *
ஐந்தும் அகத்தடக்கி ஆர்வமாய் ** - உந்திப்
படியமரர் வேலையான் * பண்டு அமரர்க்கு ஈந்த *
படியமரர் வாழும் பதி 26

2208 பதியமைந்து நாடிப் * பருத்தெழுந்த சிந்தை *
மதியுரிஞ்சி வான்முகடு நோக்கி ** - கதி[31] மிகுத்து அம்
கோல் தேடி ஓடும் * கொழுந்ததே போன்றதே *
மால் தேடி ஓடும் மனம் 27

2209 மனத்துள்ளான் வேங்கடத்தான் * மாகடலான் * மற்றும்
நினைப்பரிய * நீள் அரங்கத்து உள்ளான் ** - எனைப்பலரும்
தேவாதி தேவன் * எனப்படுவான் * முன்னொரு நாள்
மாவாய் பிளந்த மகன் 28

2210 மகனாகக் கொண்டெடுத்தாள் * மாண் பாய கொங்கை *
அகனார உண்பன் என்றுண்டு ** - மகனைத் தாய்
தேறாத வண்ணம் * திருத்தினாய் * தென் இலங்கை
நீறாக எய்தழித்தாய்! நீ 29

2211 நீ அன்று உலகளந்தாய் * நீண்ட திருமாலே! *
நீ அன்று உலகிடந்தாய் என்பரால் ** - நீ அன்று
காரோதம் முன் கடைந்து * பின் அடைத்தாய் மாகடலை *
பேரோத மேனிப் பிரான்! 30

2212 பிரான் என்று நாளும் * பெரும்புலரி என்றும் *

[31] கதிர்

குரானல் செழும்போது கொண்டு ** - வராகத்து
அணி உருவன் * பாதம் பணியும் அவர் கண்டீர் *
மணி உருவம் காண்பார் மகிழ்ந்து 31

2213 மகிழ்ந்தது சிந்தை * திருமாலே! * மற்றும்
மகிழ்ந்தது * உன் பாதமே போற்றி ** - மகிழ்ந்த
அழல் ஆழி சங்கம் * அவை பாடி ஆடும் *
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து 32

2214 துணிந்தது சிந்தை * துழாய் அலங்கல் * அங்கம்
அணிந்தவன் பேர் * உள்ளத்துப் பல்கால் ** - பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் * விறல் வேங்கடவனையே *
வாய்திறங்கள் சொல்லும் வகை 33

2215 வகையால் அவனி * இரந்தளந்தாய் பாதம் *
புகையால் நறுமலரால் முன்னே ** - மிக வாய்ந்த
அன்பாக்கி ஏத்தி * அடிமைப்பட்டேன் உனக்கு *
என் பாக்கியத்தால் இனி 34

2216 இனிதென்பர் காமம் * அதனிலும் ஆற்ற *
இனிதென்பர் தண்ணீரும் எந்தாய்! ** - இனிதென்று
காமநீர் வேளாது * நின் பெருமை வேட்பரேல் *
சேமநீராகும் சிறிது 35

2217 சிறியார் பெருமை * சிறிதின் கண் எய்தும் *
அறியாரும் தாமறியார் ஆவர் ** - அறியாமை
மண் கொண்டு மண் உண்டு * மண் உமிழ்ந்த மாயன் என்று *
எண் கொண்டு என் நெஞ்சே! இரு 36

2218 இருந்தண் கமலத்து * இருமலரின் உள்ளே *
திருந்து திசைமுகனைத் தந்தாய்! ** - பொருந்திய நின்
பாதங்கள் ஏத்திப் * பணியாவேல் * பல் பிறப்பும்
ஏதங்கள் எல்லாம் எமக்கு 37

2219 எமக்கென்று இருநிதியம் * ஏமாந்திராதே *
தமக்கென்றும் சார்வம் அறிந்து[32] ** - நமக்கென்றும்
மாதவனே என்னும் * மனம் படைத்து * மற்றவன் பேர்
ஓதுவதே நாவினால் ஓத்து 38

2220 ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே * உத்தமன் பேர்
ஏத்தும் * திறம் அறிமின் ஏழைகாள்! ** - ஓத்ததனை

[32] சார்வு என்றறிந்து

வல்லீரேல் * நன்று அதனை மாட்டீரேல் * மாதவன் பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு 39

2221 சுருக்காக வாங்கிச் * சுலாவி நின்று * ஐயார்
நெருக்கா முன் * நீர் நினைமின் கண்டீர் ** - திருப்பொலிந்த
ஆகத்தான் * பாதம் அறிந்தும் அறியாத *
போகத்தால் இல்லை பொருள் 40

2222 பொருளால் அமருலகம் * புக்கியலல் ஆகாது *
அருளால்[33] அறம் அருளும் அன்றே? ** - அருளாலே
மாமறையோர்க்கு ஈந்த * மணிவண்ணன் பாதமே *
நீ மறவேல் நெஞ்சே! நினை 41

2223 நினைப்பன் திருமாலை * நீண்ட தோள் காண *
நினைப்பார் பிறப்பொன்றும்[34] நேரார் ** - மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும் * பேரின்பம் எல்லாம் *
துறந்தார் தொழுதாரத் தோள் 42

2224 தோள் இரண்டெட்டேழும் * மூன்றும் முடி அனைத்தும் *
தாள் இரண்டும் வீழச் * சரம் துரந்தான் ** - தாள் இரண்டும்
ஆர் தொழுவார் பாதம் * அவை தொழுவதன்றே? * என்
சீர்கெழு தோள் செய்யும் சிறப்பு 43

2225 சிறந்தார்க்கு எழுதுணையாம் * செங்கண்மால் நாமம் *
மறந்தாரை மானிடமா வையேன் ** - அறம் தாங்கும்
மாதவனே! என்னும் * மனம் படைத்து * மற்றவன் பேர்
ஓதுவதே நாவினால் உள்ளு 44

2226 உளதென்று இறுமாவார் * உண்டில்லை என்று *
தளர்தல் அதன் அருகும் சாரார் ** - அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் * விண்ணோர் முடி தோயும் *
பாதத்தான் பாதம் பயின்று 45

2227 பயின்றது அரங்கம் திருக்கோட்டி * பன்னாள்
பயின்றதுவும் * வேங்கடமே பன்னாள் ** - பயின்றது
அணிதிகழும் சோலை * அணிநீர்மலையே *
மணி திகழும் வண்தடக்கை மால் 46

2228 மாலை அரி உருவன் * பாத மலர் அணிந்து *
காலை தொழுதெழுமின் கைகோலி ** - ஞாலம்

[33] அருளான்/அருளாள்
[34] பிறப்பென்றும்

அளந்து இடந்து உண்டு உமிழ்ந்த * அண்ணலை மற்றல்லால்[35] *
உளங்கிடந்த ஆற்றால் உணர்ந்து 47

2229 உணர்ந்தாய் மறை நான்கும் * ஓதினாய் நீதி *
மணந்தாய் மலர்மகள் தோள் மாலே! ** - மணந்தாய் போய்
வேயிருஞ்சாரல் * வியலிரு ஞாலம் சூழ் *
மாயிருஞ்சோலை மலை 48

2230 மலை ஏழும் * மாநிலங்கள் ஏழும் அதிர *
குலை சூழ் குரை கடல்கள் ஏழும் ** - முலை சூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை * நவின்றுண்ட நாவன் என்று *
அஞ்சாது என் நெஞ்சே! அழை 49

2231 அழைப்பன் திருமாலை * ஆங்கு அவர்கள் சொன்ன *
பிழைப்பில் பெரும் பெயரே பேசி ** - இழைப்பரிய
ஆயவனே! யாதவனே! * என்றவனை யார் முகப்பும் *
மாயவனே! என்று மதித்து 50

2232 மதிக்கண்டாய் நெஞ்சே! * மணிவண்ணன் பாதம் *
மதிக்கண்டாய் மற்றவன் பேர் தன்னை ** - மதிக்கண்டாய்
பேராழி நின்று * பெயர்ந்து கடல் கடைந்த
நீராழி வண்ணன் நிறம் 51

2233 நிறம் கரியன் * செய்ய நெடுமலராள் மார்வன் *
அறம் பெரியன் ஆரது அறிவார்? ** - மறம் புரிந்த
வாளரக்கன் போல்வானை * வானவர் கோன் தானத்து *
நீள் இருக்கைக்கு உய்த்தான் நெறி 52

2234 நெறியார் குழற்கற்றை * முன் நின்று பின் தாழ்ந்து *
அறியாது இளங்கிரி என்றெண்ணி ** - பிறியாது
பூங்கொடிக்கள் வைகும் * பொருபுனல் குன்று என்றும் *
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு 53

2235 வெற்பென்று இருஞ்சோலை * வேங்கடம் என்று இவ்விரண்டும் *
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் ** - நிற்பென்று
உளங்கோயில் * உள்ளம் வைத்து உள்ளினேன் * வெள்ளத்து
இளங்கோயில் கைவிடேல் என்று 54

2236 என்றும் மறந்தறியேன் * ஏழ்பிறப்பும் எப்பொழுதும் *
நின்று நினைப்பொழியா நீர்மையால் ** - வென்றி
அடலாழி கொண்ட * அறிவனே! * இன்பக்

[35] மற்றெல்லாம்

கடலாழி நீ அருளிக் காண் 55

2237 காணக் கழிகாதல் * கைமிக்குக் காட்டினால் *
நாணப்படும் என்றால் நாணுமே? ** - பேணிக்
கருமாலைப் * பொன்மேனி காட்டா முன் காட்டும் *
திருமாலை நங்கள் திரு 56

2238 திருமங்கை நின்றருளும் * தெய்வம் நா வாழ்த்தும் *
கருமம் கடைப்பிடிமின் கண்டீர் ** - உரிமையால்
ஏத்தினோம் பாதம் * இருந்தடக்கை எந்தை பேர் *
நால் திசையும் கேட்டீரே? நாம் 57

2239 நாம் பெற்ற நன்மையும் * நாமங்கை நன்னெஞ்சத்து *
ஓம்பி இருந்து எம்மை ஓதுவித்து ** - வேம்பின்
பொருள் நீர்மை ஆயினும் * பொன்னாழி பாடென்று *
அருள் நீர்மை தந்த அருள் 58

2240 அருள் புரிந்த சிந்தை * அடியார் மேல் வைத்து *
பொருள் தெரிந்து காண்குற்ற அப்போது ** - இருள் திரிந்து[36]
நோக்கினேன் நோக்கி * நினைந்தேனதொண்கமலம் *
ஓக்கினேன் என்னையும் அங்கு ஓர்ந்து 59

2241 ஓர் உருவன் அல்லை * ஒளி உருவம் நின் உருவம் *
ஈருருவன் என்பர் இருநிலத்தோர் ** - ஓர் உருவம்
ஆதியாம் வண்ணம் * அறிந்தார் அவர் கண்டீர் *
நீதியால் மண் காப்பார் நின்று 60

2242 நின்றதோர் பாதம் * நிலம் புதைப்ப * நீண்ட தோள்
சென்று அளந்தது என்பர் திசை எல்லாம் ** - அன்று
கருமாணியாய் * இரந்த கள்வனே! * உன்னைப்
பிரமாணித்தார் பெற்ற பேறு! 61

2243 பேறொன்று முன்னறியேன் * பெற்றறியேன் பேதைமையால் *
மாறென்று சொல்லி வணங்கினேன் ** - ஏறின்
பெருத்தெருத்தம் கோடொசியப் * பெண்ணசையின் பின் போய் *
எருத்திறுத்த நல்லாயர் ஏறு 62

2244 ஏறேழும் * வென்று அடர்த்த எந்தை * எரி உருவத்து
ஏறேறி * பட்ட விடு சாபம் ** - பாறேறி
உண்ட தலை வாய் நிறையக் * கோட்டங்கை ஒண் குருதி *
கண்ட பொருள் சொல்லின் கதை 63

[36] இரிந்து

2245 கதையும்[37] பெரும் பொருளும் கண்ணா! * நின் பேரே
இதயம் * இருந்தவையே ஏத்தில் ** - கதையும்
திருமொழியாய் நின்ற * திருமாலே! * உன்னைப்
பருமொழியால் காணப் பணி 64

2246 பணிந்தேன் திருமேனி * பைங்கமலம் கையால் *
அணிந்தேன் உன் சேவடி மேல் அன்பாய் ** - துணிந்தேன்
புரிந்தேத்தி * உன்னைப் புகலிடம் பார்த்து * ஆங்கே
இருந்தேத்தி வாழும் இது 65

2247 இது கண்டாய் நன்னெஞ்சே! * இப்பிறவி ஆவது *
இது கண்டாய் எல்லாம் நாம் உற்றது ** - இது கண்டாய்
நாரணன் பேர் ஓதி * நரகத்து அருகணையா *
காரணமும் வல்லையேல் காண் 66

2248 கண்டேன் திருமேனி * யான் கனவில் * ஆங்கவன் கைக்
கண்டேன் * கனலும் சுடராழி ** - கண்டேன்
உறு நோய் வினை இரண்டும் * ஓட்டுவித்து * பின்னும்
மறு நோய் செறுவான் வலி 67

2249 வலி மிக்க வாள் எயிற்று * வாள் அவுணர் மாள *
வலி மிக்க வாள் வரை மத்தாக ** - வலி மிக்க
வாள் நாகம் சுற்றி * மறுகக் கடல் கடைந்தான் *
கோள் நாகம் கொம்பொசித்த கோ 68

2250 கோவாகி * மாநிலம் காத்து * நங்கண் முகப்பே
மாவேகிச் செல்கின்ற மன்னவரும் ** - பூ மேவும்[38]
செங்கமல நாபியான் * சேவடிக்கே ஏழ் பிறப்பும் *
தண்கமலமேய்ந்தார் தமர் 69

2251 தமர் உள்ளம் தஞ்சை * தலை அரங்கம் தண்கால் *
தமர் உள்ளும் தண்பொருப்பு வேலை ** - தமர் உள்ளும்
மாமல்லை கோவல் * மதிள் குடந்தை என்பரே *
ஏவல்ல எந்தைக்கு இடம் 70

2252 இடங்கை வலம்புரி நின்று ஆர்ப்ப * எரிகான்று
அடங்கார் * ஒடுங்குவித்தது ஆழி ** - விடங்காலும்
தீ வாய் அரவணை மேல் * தோன்றல் திசை அளப்பான் *
பூவார் அடி நிமிர்த்த போது 71

---

[37] கதையின்

[38] வேரும்

2253 போதறிந்து வானரங்கள் * பூஞ்சுனை புக்கு * ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டு ஏத்தும் போது ** உள்ளம்! - போது
மணி வேங்கடவன் * மலர் அடிக்கே செல்ல *
அணி வேங்கடவன் பேராய்ந்து 72

2254 ஆய்ந்துரைப்பன் ஆயிரம் பேர் * ஆதிநடு வந்திவாய் *
வாய்ந்த மலர் தூவி வைகலும் ** - ஏய்ந்த
பிறைக் கோட்டுச் * செங்கண் கரி விடுத்த பெம்மான் *
இறைக்கு ஆட்படத் துணிந்த யான் 73

2255 யானே தவம் செய்தேன் * ஏழ் பிறப்பும் எப்பொழுதும் *
யானே தவம் உடையேன் எம்பெருமான்! ** - யானே
இருந்ததமிழ் நன்மாலை * இணை அடிக்கே சொன்னேன் *
பெருந்தமிழன் நல்லேன் பெரிது 74

2256 பெருகு மத வேழம் * மாப்பிடிக்கி முன் நின்று *
இருகண் இளமூங்கில் வாங்கி ** - அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் * திருவேங்கடம் கண்டீர் *
வான் கலந்த வண்ணன் வரை 75

2257 வரைச் சந்தனக் குழம்பும் * வான்கலனும் பட்டும் *
விரைப் பொலிந்த வெண்மல்லிகையும் - நிரைத்துக் கொண்டு **
ஆதிக்கண் நின்ற * அறிவன் அடி இணையே *
ஓதிப் பணிவதுறும் 76

2258 உறுங்கண்டாய் நன்னெஞ்சே! * உத்தமன் நற்பாதம் *
உறுங்கண்டாய் ஒண்கமலம் தன்னால் ** - உறுங்கண்டாய்
ஏத்திப் பணிந்தவன் பேர் * ஈரைஞ்ஞூறு எப்பொழுதும் *
சார்த்தி[39] உரைத்தல் தவம் 77

2259 தவம் செய்து * நான்முகனே பெற்றான் * தரணி
நிவந்தளப்ப * நீட்டிய பொற்பாதம் ** - சிவந்த தன்
கை அனைத்தும் * ஆரக் கழுவினான் * கங்கை நீர்
பெய்தனைத்துப் பேர் மொழிந்து பின் 78

2260 பின் நின்று * தாயிரப்பக் கேளான் * பெரும் பணைத்தோள்
முன் நின்று * தானிரப்பாள் மொய்ம்மலராள் ** - சொல் நின்ற
தோள் நலந்தான் * நேரில்லாத் தோன்றல் * அவன் அளந்த
நீள்நிலந்தான் அத்தனைக்கும் நேர் 79

2261 நேர்ந்தேன் அடிமை * நினைந்தேனதொண்கமலம் *

[39] சாற்றி

ஆர்ந்தேன் உன் சேவடி மேல் அன்பாய் ** - ஆர்ந்த
அடிக்கோலம் * கண்டவர்க்கு என் கொலோ? * முன்னைப்
படிக்கோலம் கண்ட பகல் 80

2262 பகல் கண்டேன் * நாரணனைக் கண்டேன் * கனவில்
மிகக் கண்டேன் * மீண்டு அவனை மெய்யே - மிகக் கண்டேன் **
ஊன் திகழும் நேமி * ஒளி திகழும் சேவடியான் *
வான் திகழும் சோதி வடிவு 81

2263 வடிக்கோல வாள் நெடுங்கண் * மாமலராள் * செவ்விப்
படிக்கோலம் கண்டு அகலாள் பல்நாள் ** - அடிக்கோலி
ஞாலத்தாள் * பின்னும் நலம் புரிந்தது என் கொலோ? *
கோலத்தால் இல்லை குறை 82

2264 குறையாக வெஞ்சொற்கள் * கூறினேன் கூறி *
மறையாங்கு என உரைத்த மாலை ** - இறையேனும்
ஈயுங்கொல்! என்றே * இருந்தேன் எனைப்பகலும் *
மாயன் கண் சென்ற வரம் 83

2265 வரம் கருதித் தன்னை * வணங்காத வன்மை *
உரம் கருதி மூர்க்கத்தவனை ** - நரம் கலந்த
சிங்கமாய்க் கீண்ட * திருவன் அடி இணையே *
அங்கண்மா ஞாலத்து அமுது 84

2266 அமுது என்றும் தேன் என்றும் * ஆழியான் என்றும் *
அமுது அன்று கொண்டு உகந்தான் என்றும் ** - அமுதன்ன
சொல் மாலை ஏத்தித் * தொழுதேன் சொலப்பட்ட *
நன்மாலை ஏத்தி நவின்று 85

2267 நவின்று உரைத்த நாவலர்கள் * நாண்மலர் கொண்டு * ஆங்கே
பயின்றதனால் பெற்ற பயன் என் கொல்? ** - பயின்றார் தம்
மெய்த்தவத்தால் * காண்பரிய மேக மணிவண்ணனை * யான்
எத்தவத்தால் காண்பன் கொல் இன்று? 86

2268 இன்றா அறிகின்றேன் அல்லேன் * இருநிலத்தைச்
சென்று ஆங்கு அளந்த திருவடியை ** - அன்று
கருக்கோட்டியுள் கிடந்து * கை தொழுதேன் கண்டேன் *
திருக்கோட்டி எந்தை திறம் 87

2269 திறம்பிற்று இனி அறிந்தேன் * தென்னரங்கத்து எந்தை *
திறம்பா வழி சென்றார்க்கு அல்லால் ** - திறம்பாச்
செடி நரகை நீக்கித் * தாம் செல்வதன் முன் * வானோர்
கடி நகர வாசல் கதவு 88

2270 கதவிக் கதஞ்சிறந்த[40] * கஞ்சனை முன் காய்ந்து *
அதவிப் போர் யானை ஒசித்து ** - பதவியாய்ப்
பாணியால் நீர் ஏற்றுப் * பண்டொருகால் மாவலியை *
மாணியாய்க் கொண்டிலையே மண்? 89

2271 மண்ணுலகம் ஆளேனே? * வானவர்க்கும் வானவனாய் *
விண்ணுலகம் தன்னகத்து மேவேனே? ** - நண்ணித்
திருமாலைச் * செங்கண் நெடியானை * எங்கள்
பெருமானைக் கை தொழுத பின் 90

2272 பின்னால் அருநரகம் * சேராமல் பேதுறுவீர் *
முன்னால் வணங்க முயன்மினோ ** - பல்நூல்
அளந்தானைக் * கார்க்கடல்[41] சூழ் ஞாலத்தை * எல்லாம்
அளந்தான் அவன் சேவடி 91

2273 அடியால் முன் கஞ்சனைச் செற்று * அமரர் ஏத்தும்
படியான் * கொடி மேல் புள் கொண்டான் ** - நெடியான் தன்
நாமமே * ஏத்துமின்கள் ஏத்தினால் * தாம் வேண்டும்
காமமே காட்டும் கடிது 92

2274 கடிது கொடுநரகம் * பிற்காலும் செய்கை *
கொடிதென்று அது[42] கூடா முன்னம் ** - வடிசங்கம்
கொண்டானைக் * கூந்தல்வாய் கீண்டானை * கொங்கை நஞ்சு
உண்டானை ஏத்துமினோ உற்று 93

2275 உற்று வணங்கித் தொழுமின் * உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில்வண்ணன் ** - பற்றிப்
பொருந்தாதான் மார்பு இடந்து * பூம்பாடகத்துள்
இருந்தானை * ஏத்தும் என் நெஞ்சு 94

2276 என் நெஞ்சம் மேயான் * என் சென்னியான் * தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன் ** - முன்னம் சேய்
ஊழியான் * ஊழி பெயர்த்தான் * உலகேத்தும்
ஆழியான் அத்தியூரான் 95

2277 * அத்தியூரான் புள்ளை ஊர்வான் * அணிமணியின்
துத்தி சேர் * நாகத்தின் மேல் துயில்வான் ** - முத்தீ[43]
மறையாவான் * மாகடல் நஞ்சுண்டான் தனக்கும் *

[40] கதஞ்சிறந்து
[41] அளந்தான் இக்கார்க்கடல்
[42] அவை
[43] முத்தி

இறையாவான் எங்கள் பிரான் 96

2278 எங்கள் பெருமான்! * இமையோர் தலைமகன்! நீ *
செங்கண் நெடுமால்! திருமார்பா! ** - பொங்கு
படமூக்கின் ஆயிரவாய்ப் * பாம்பணை மேல் சேர்ந்தாய் *
குடமூக்குக்[44] கோயிலாக் கொண்டு 97

2279 கொண்டு வளர்க்கக் * குழவியாய்த் தான் வளர்ந்தது *
உண்டது உலகேழும் உள்ளொடுங்க ** - கொண்டு
குடமாடிக் * கோவலனாய் மேவி * என் நெஞ்சம்
இடமாகக் கொண்ட இறை 98

2280 * இறை எம்பெருமான்! அருள் என்று * இமையோர்
முறை நின்று * மொய்ம்மலர்கள் தூவ ** - அறைகழல
சேவடியான் * செங்கண் நெடியான் * குறள் உருவாய்
மாவடிவில்[45] மண் கொண்டான் மால் 99

2281 * மாலே! நெடியோனே! கண்ணனே! * விண்ணவர்க்கு
மேலா! * வியந்துழாய்க் கண்ணியனே! ** - மேலால்
விளவின் காய் * கன்றினால் வீழ்த்தவனே! * என்தன்
அளவன்றால் யானுடைய அன்பு 100

தசக அடிவரவு: அன்பு கடை தாம் பிரான் பொருள் மதி நின்றது
இடங்கை பகல் பின்னால் திரு

பூதத்தாழ்வார் திருவடிகளே ஷரணம்

பேயாழ்வார் அருளிச் செய்த
மூன்றாம் திருவந்தாதி

மூன்றாம் திருவந்தாதி தனியன்
(குருகை காவலப்பன் அருளிச் செய்தது)

சீராரும் மாடத் திருக்கோவலூர் அதனுள் *
காரார் கருமுகிலைக் காணப் புக்கு * - ஓராத்
திருக்கண்டேன் என்று உரைத்த சீரான் கழலே *
உரைக் கண்டாய் நெஞ்சே! உகந்து

[44] குடமூக்கில்
[45] மாவலியை

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

பேயாழ்வார் அருளிச் செய்த
மூன்றாம் திருவந்தாதி

2282 * திருக்கண்டேன் * பொன் மேனி கண்டேன் * திகழும்
அருக்கனணி நிறமும் கண்டேன் ** - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் * புரி சங்கம் கைக்கண்டேன் *
என்னாழி வண்ணன் பால் இன்று 1

2283 இன்றே கழல் கண்டேன் * ஏழ் பிறப்பும் யான் அறுத்தேன் *
பொன் தோய் வரை மார்பில் பூந்துழாய் ** - அன்று
திருக்கண்டு கொண்ட * திருமாலே! * உன்னை
மருக்கண்டு கொண்டென் மனம் 2

2284 மனத்துள்ளான் * மாகடல் நீர் உள்ளான் * மலராள்
தனத்துள்ளான் * தண்துழாய் மார்பன் ** - சினத்துச்
செருநருகச் செற்று உகந்த * தேங்கோத வண்ணன் *
வரு நரகம் தீர்க்கும் மருந்து 3

2285 மருந்தும் பொருளும் * அமுதமும் தானே *
திருந்திய செங்கண்மால் ஆங்கே ** - பொருந்தியும்[46]
நின்று உலகம் உண்டு உமிழ்ந்தும் * நீர் ஏற்றும் மூவடியால் *
அன்று உலகம் தாயோன் அடி 4

2286 அடி வண்ணம் தாமரை * அன்று உலகம் தாயோன் *
படி வண்ணம் பார்க்கடல்[47] நீர் வண்ணம் ** - முடி வண்ணம்
ஓராழி வெய்யோன் * ஒளியும் அஃதன்றே *
ஆராழி கொண்டாற்கு அழகு 5
2287 அழகன்றே ஆழியாற்கு * ஆழி நீர் வண்ணம் *
அழகன்றே அண்டங்கடத்தல் ** - அழகன்றே
அங்கை நீர் ஏற்றாற்கு * அலர் மேலோன் கால் கழுவ *
கங்கை நீர் கான்ற கழல் 6

2288 கழல் தொழுதும் வா நெஞ்சே! * கார்க்கடல் நீர் வேலை *
பொழில் அளந்த புள்ளூர்திச் செல்வன் ** - எழில் அளந்தங்கு
எண்ணற்கு அரியானை * எப்பொருட்கும் சேயானை *
நண்ணற்கு அரியானை நாம் 7

2289 நாமம் பல சொல்லி * நாராயணா என்று *
நாமங்கையால் தொழுதும் நன்னெஞ்சே! - வா ** மருவி
மண்ணுலகம் உண்டு உமிழ்ந்த * வண்டறையும் தண்துழாய் *

---
[46] பொருந்திய
[47] பாற்கடல்

கண்ணனையே காண்க நங்கண் 8

2290 கண்ணும் கமலம் * கமலமே கைத்தலமும் *
மண்ணளந்த பாதமும் மற்றவையே ** - எண்ணில்
கருமா முகில் வண்ணன் * கார்க்கடல் நீர் வண்ணன் *
திருமாமணிவண்ணன் தேசு 9

2291 தேசும் திறலும் * திருவும் உருவமும் *
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும் - பேசில் **
வலம் புரிந்த வான்சங்கம் * கொண்டான் பேரோத *
நலம் புரிந்து சென்றடையும் நன்கு 10

2292 நன்கோதும் * நால் வேதத்துள்ளான் * நறவிரியும்
பொங்கோதருவிப் புனல் வண்ணன் ** - சங்கோதப்
பாற்கடலான் * பாம்பணையின் மேலான் * பயின்று உரைப்பார்
நூற்கடலான் நுண்ணறிவினான் 11

2293 அறிவென்னும் தாள் கொளுவி * ஐம்புலனும் தம்மில் *
செறிவென்னும் திண் கதவம் செம்மி ** - மறை என்றும்
நன்கோதி * நன்குணர்வார் காண்பரே * நாள் தோறும்
பைங்கோத வண்ணன் படி 12

2294 படிவட்டத் தாமரை * பண்டுலகம் நீர் ஏற்று *
அடிவட்டத்தால் அளப்ப நீண்ட - முடிவட்டம் **
ஆகாயம் ஊடறுத்து * அண்டம் போய் நீண்டதே *
மாகாயமாய் நின்ற மாற்கு 13

2295 மாற்பால் மனம் சுழிப்ப * மங்கையர் தோள் கை விட்டு *
நூற்பால் மனம் வைக்க நொய்விதாம் ** - நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் * விண்ணோர் முடி தோயும் *
பாதத்தான் பாதம் பணிந்து 14

2296 பணிந்து உயர்ந்த பௌவப் * படுதிரைகள் மோத *
பணிந்த பணமணிகளாலே - அணிந்து ** அங்கு
அனந்தன் அணைக் * கிடக்கும் அம்மான் * அடியேன்
மனம் தன் அணைக் கிடக்கும் வந்து 15

2297 * வந்துதைத்த வெண்திரைகள் * செம்பவள வெண்முத்தம் *
அந்தி விளக்கும் அணி விளக்காம் ** - எந்தை
ஒருவல்லித் தாமரையாள் * ஒன்றிய சீர் மார்வன் *
திருவல்லிக்கேணியான் சென்று 16

2298 சென்ற நாள் செல்லாத * செங்கண் மால் எங்கள் மால் *
என்ற நாள் என்னாளும் நாளாகும் ** - என்றும்
இறவாத எந்தை * இணை அடிக்கே ஆளாய் *
மறவாது வாழ்த்துக என் வாய் 17

2299 வாய் மொழிந்து வாமனனாய் * மாவலி பால் * மூவடி மண்
நீ அளந்து கொண்ட நெடுமாலே! ** - தாவிய நின்
எஞ்சா இணை அடிக்கே * ஏழ் பிறப்பும் ஆளாகி *
அஞ்சாதிருக்க அருள் 18

2300 அருளாது ஒழியுமே? * ஆலிலை மேல் * அன்று
தெருளாத * பிள்ளையாய்ச் சேர்ந்தான் ** - இருளாத
சிந்தையராய்ச் சேவடிக்கே * செம்மலர் தூய்க் கை தொழுது *
முந்தையராய் நிற்பார்க்கு முன் 19

2301 முன் உலகம் * உண்டு உமிழ்ந்தாய்க்கு * அவ்வுலகம் ஈரடியால் *
பின் அளந்து கோடல் பெரிதொன்றே? ** - என்னே!
திருமாலே! * செங்கண் நெடியானே! * எங்கள்
பெருமானே! நீ இதனைப் பேசு 20

2302 பேசுவார் * எவ்வளவு பேசுவர் * அவ்வளவே
வாச மலர்த் துழாய் மாலையான் ** - தேசுடைய
சக்கரத்தான் * சங்கினான் சார்ங்கத்தான் * பொங்கரவ
வக்கரனைக் கொன்றான் வடிவு 21

2303 வடிவார் முடிகோட்டி * வானவர்கள் * நாளும்
கடியார் மலர் தூவிக் காணும் - படியானை **
செம்மையால் உள்ளுருகிச் * செவ்வனே நெஞ்சமே! *
மெய்ம்மையே காண விரும்பு 22

2304 விரும்பி விண் மண் அளந்த * அஞ்சிறைய வண்டார் *
சுரும்பு தொளையில் சென்றூத ** - அரும்பும்
புனந்துழாய் மாலையான் * பொன்னங்கழற்கே *
மனம் துழாய் மாலாய் வரும் 23

2305 வருங்கால் இருநிலனும் * மால் விசும்பும் காற்றும் *
நெருங்கு தீ நீர் உருவும் ஆனான் ** - பொருந்தும்
சுடராழி * ஒன்றுடையான் சூழ் கழலே * நாளும்
தொடராழி நெஞ்சே! தொழுது 24

2306 தொழுதால் பழுதுன்டே? * தூநீர் உலகம் *

முழுதுன்டு மொய்குழலாள் ஆய்ச்சி ** - விழுதுண்ட[48]
வாயானை * மால் விடை ஏழ் செற்றானை * வானவர்க்கும்
சேயானை நெஞ்சே! சிறந்து 25

2307 சிறந்த என் சிந்தையும் * செங்கண் அரவும் *
நிறைந்த சீர் நீள் கச்சி உள்ளும் ** - உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் * வேளுக்கைப் பாடியுமே *
தாம் கடவார் தண்துழாயார் 26

2308 ஆரே துயருழந்தார் * துன்புற்றாராண்டையார்? *
காரே மலிந்த கருங்கடலை ** - நேரே
கடைந்தானைக் * காரணனை நீரணை மேல் * பள்ளி
அடைந்தானை நாளும் அடைந்து 27

2309 அடைந்தது அரவணை மேல் * ஐவர்க்காய் * அன்று
மிடைந்தது * பாரத வெம்போர் ** - உடைந்ததுவும்
ஆய்ச்சி பால் மத்துக்கே * அம்மனே! வாள் எயிற்றுப் *
பேய்ச்சி பால் உண்ட பிரான் 28

2310 பேய்ச்சி பால் உண்ட * பெருமானைப் பேர்ந்தெடுத்து *
ஆய்ச்சி முலை கொடுத்தாள் அஞ்சாதே ** - வாய்த்த
இருளார் திருமேனி * இன்பவளச் செவ்வாய் *
தெருளா மொழியானைச் சேர்ந்து 29

2311 சேர்ந்த திருமால் * கடல் குடந்தை வேங்கடம் *
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பும்[49] ** - வாய்ந்த
மறை பாடகம் அனந்தன் * வண்துழாய்க் கண்ணி *
இறை பாடியாய இவை 30

2312 இவையவன் கோயில் * இரணியனது ஆகம் *
அவை செய்து அரி உருவம் ஆனான் ** - செவி தெரியா
நாகத்தான் * நால் வேதத்து உள்ளான் * நறவேற்றான்
பாகத்தான் பாற்கடல் உளான் 31

2313 பாற்கடலும் வேங்கடமும் * பாம்பும் பனிவிசும்பும் *
நூற்கடலும் நுண்ணூல தாமரை மேல் ** - பாற்பட்டு
இருந்தார் மனமும் * இடமாகக் கொண்டான் *
குருந்தொசித்த கோபாலகன் 32

2314 பாலகனாய் * ஆலிலை மேல் பைய * உலகெல்லாம்

---

[48] இழுதுண்ட
[49] விசும்பு

மேல் ஒரு நாள் * உண்டவனே! மெய்ம்மையே ** - மாலவனே!
மந்தரத்தால் * மாநீர்க் கடல் கடைந்து * வானமுதம்
அந்தரத்தார்க்கு ஈந்தாய் நீ அன்று 33

2315 அன்று இவ்வுலகம் * அளந்த அசைவே கொல்? *
நின்று இருந்து வேளுக்கை நீள்நகர்வாய் ** - அன்று
கிடந்தானைக் * கேடில் சீரானை * முன் கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமே! காண் 34

2316 காண் காண் என * விரும்பும் கண்கள் * கதிரிலகு
பூண்தார் * அகலத்தான் பொன்மேனி ** - பாண்கண்
தொழில் பாடி * வண்டறையும் தொங்கலான் * செம்பொன்
கழல் பாடி யாம் தொழுதும் கை 35

2317 கைய கனலாழி * கார்க்கடல்வாய் வெண்சங்கம் *
வெய்ய கதை சார்ங்கம் வெஞ்சுடர்வாள் ** - செய்ய
படை பரவை பாழி * பனி நீருலகம் *
அடி அளந்த மாயர் அவர்க்கு[50] 36

2318 அவற்கு அடிமைப்பட்டேன் * அகத்தான் புறத்தான் *
உவர்க்கும் கருங்கடல் நீர் உள்ளான் ** - துவர்க்கும்
பவளவாய்ப் பூமகளும் * பன்மணிப் பூணாரம் *
திகழும் திருமார்பன் தான் 37

2319 தானே தனக்கு உவமன் * தன் உருவே எவ்வுருவும் *
தானே தவவுருவும் தாரகையும் ** - தானே
எரி சுடரும் மால் வரையும் * எண்திசையும் * அண்டத்து
இருசுடரும் ஆய இறை 38

2320 இறையாய் நிலனாகி * எண்திசையும் தானாய் *
மறையாய் மறைப் பொருளாய் வானாய் ** - பிறை வாய்ந்த
வெள்ளத்தருவி * விளங்கொலி நீர் வேங்கடத்தான் *
உள்ளத்தின் உள்ளே உளன் 39

2321 உளன் கண்டாய் நல்நெஞ்சே! * உத்தமன் என்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
விண்ணொடுங்கக் கோடுயரும் * வீங்கருவி வேங்கடத்தான் *
மண்ணொடுங்கத் தான் அளந்த மன் 40

2322 மன்னு மணி முடி நீண்டு * அண்டம் போய் எண்திசையும் *
துன்னு பொழில் அனைத்தும் சூழ் கழலே ** - மின்னை

[50] மாயன் அவற்கு

உடையாகக் கொண்டு * அன்று உலகளந்தான் * குன்றம்
குடையாக ஆ காத்த கோ 41

2323 கோவலனாய் * ஆநிரைகள் மேய்த்துக் குழல் ஊதி *
மாவலனாய்க் கீண்ட மணிவண்ணன் ** - மேவி
அரி[51] உருவம் ஆகி * இரணியனது ஆகம் *
தெரியுகிரால் கீண்டான் சினம் 42

2324 சினமா மத களிற்றின் * திண்மருப்பைச் சாய்த்து *
புனமேய பூமி அதனை ** - தனமாகப்
பேரகலத்து உள்ளொடுக்கும் * பேரார மார்வனார் *
ஓரகலத்து உள்ளது உலகு 43

2325 உலகமும் * ஊழியும் ஆழியும் * ஒண்கேழ்
அலர் கதிரும் * செந்தீயும் ஆவான் ** - பல கதிர்கள்
பாரித்த * பைம்பொன் முடியான் அடி இணைக்கே *
பூரித்து என் நெஞ்சே! புரி 44

2326 புரிந்து மத வேழம் * மாப்பிடியோடு ஊடி *
திரிந்து சினத்தால் பொருது ** - விரிந்த சீர்
வெண்கோட்டு * முத்துதிர்க்கும் வேங்கடமே * மேலொரு நாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை 45

2327 மலை முகடு மேல் வைத்து * வாசுகியைச் சுற்றி *
தலை முகடு தான் ஒரு கை பற்றி ** - அலை முகட்டு
அண்டம் போய் நீர் தெறிப்ப * அன்று கடல் கடைந்தான் *
பிண்டமாய் நின்ற பிரான் 46

2328 நின்ற பெருமானே! நீர் ஏற்று * உலகெல்லாம்
சென்ற பெருமானே! * செங்கண்ணா! ** - அன்று
துரகவாய் கீண்ட * துழாய் முடியாய்! * நங்கள்
நரகவாய் கீண்டாயும் நீ 47

2329 நீயன்றே நீர் ஏற்று * உலகம் அடி அளந்தாய்? *
நீயன்றே நின்று நிரை மேய்த்தாய்? ** - நீயன்றே
மாவாயுரம் பிளந்து * மாமருதினூடு போய் *
தேவாசுரம் பொருதாய் செற்று? 48

2330 செற்றதுவும் * சேரா இரணியனை * சென்றேற்றுப்
பெற்றதுவும் * மாநிலம் பின்னைக்காய் ** - முற்றல்
முரியேற்றின் * முன்னின்று மொய்ம்பொழித்தாய்! * மூரிச்

[51] எரி

சுரியேறு சங்கினாய்! சூழ்ந்து 49

2331 சூழ்ந்த துழாய் அலங்கல் * சோதி மணி முடி மால் *
தாழ்ந்த அருவித் தடவரைவாய் ** - ஆழ்ந்த
மணி நீர்ச் சுனை வளர்ந்த * மாமுதலை கொன்றான் *
அணி நீல வண்ணத்தவன் 50

2332 அவனே அருவரையால் * ஆநிரைகள் காத்தான் *
அவனே அணி மருதம் சாய்த்தான் ** - அவனே
கலங்காப் பெருநகரம் * காட்டுவான் கண்டீர் *
இலங்காபுரம் எரித்தான் எய்து 51

2333 எய்தான் மராமரம் * ஏழும் இராமனாய் *
எய்தான் அம்மான் மறியை[52] ஏந்திழைக்காய் ** - எய்ததுவும்
தென்னிலங்கைக் கோன் வீழ * சென்று குறள் உருவாய் *
முன்னிலங்கைக் கொண்டான் முயன்று 52

2334 முயன்று தொழு நெஞ்சே! * மூரி நீர் வேலை *
இயன்றமரத்து ஆலிலையின் மேலால் ** - பயின்றங்கோர்
மண்ணலங்கொள் வெள்ளத்து * மாயக் குழவியாய் *
தண்ணலங்கல் மாலையான் தாள் 53

2335 தாளால் சகடம் * உதைத்துப் பகடுந்தி *
கீளா மருதிடை போய்க் கேழலாய் ** - மீளாது
மண்ணகலம் கீண்டு * அங்கோர் மாதுகந்த மார்வற்கு *
பெண்ணகலம் காதல் பெரிது 54

2336 பெரிய வரை மார்பில் * பேராரம் பூண்டு *
கரிய முகிலிடை மின் போல ** - தெரியுங்கால்[53]
பாணொடுங்க * வண்டறையும் பங்கயமே * மற்றவன் தன்
நீள் நெடுங்கண் காட்டும் நிறம் 55

2337 நிறம் வெளிது செய்து * பசிது கரிதென்று *
இறை உருவம் யாம் அறியோம் எண்ணில் ** - நிறைவுடைய[54]
நாமங்கை தானும் * நலம் புகழ வல்லளே? *
பூமங்கை கேள்வன் பொலிவு 56

2338 பொலிந்திருண்ட கார்வானில் * மின்னே போல் தோன்றி *
மலிந்து திருவிருந்த மார்வன் ** - பொலிந்த[55]

[52] மரிய
[53] திரியுங்கால்
[54] நிறமுடைய

கருடன் மேல் கொண்ட * கரியான் கழலே *
தெருடன் மேல் கண்டாய் தெளி 57

2339 தெளிந்த சிலாதலத்தின் * மேல் இருந்த மந்தி *
அளிந்த கடுவனையே னோக்கி ** - விளங்கிய
வெண்மதியம் * தாவென்னும் வேங்கடமே * மேலொரு நாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு 58

2340 வாழும் வகை அறிந்தேன் * மை போல் நெடுவரைவாய் *
தாழும் அருவி போல் தார் கிடப்ப ** - சூழும்
திருமாமணிவண்ணன் * செங்கண்மால் * எங்கள்
பெருமான் அடி சேரப் பெற்று 59

2341 பெற்றம் பிணை மருதம் * பேய்முலை மாச்சகடம் *
முற்றக்காத்தூடு போய் உண்டுதைத்து ** - கற்றுக்
குணிலை * விளங்கனிக்குக் கொண்டு எறிந்தான் * வெற்றிப்
பணிலம் வாய் வைத்து உகந்தான் பண்டு 60

2342 * பண்டெல்லாம் வேங்கடம் * பாற்கடல் வைகுந்தம் *
கொன்டங்கு உறைவார்க்குக் கோயில் போல் ** - வண்டு
வளங்கிளரும் நீள்சோலை * வண்பூங்கடிகை *
இளங்குமரன் தன் விண்ணகர் 61

2343 விண்ணகரம் வெஃகா * விரிதிரைநீர் வேங்கடம் *
மண்ணகரம் மாமாட வேளுக்கை ** - மண்ணகத்த
தென் குடந்தை * தேனார் திருவரங்கம் தென்கோட்டி *
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு 62

2344 தாழ் சடையும் நீள்முடியும் * ஒண்மழுவும் சக்கரமும் *
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் ** - சூழும்
திரண்டருவி பாயும் * திருமலை மேல் எந்தைக்கு *
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து 63

2345 இசைந்த அரவமும் * வெற்பும் கடலும் *
பசைந்தங்கமுது படுப்ப[56] ** - அசைந்து
கடைந்த வருத்தமோ? * கச்சி வெஃகாவில் *
கிடந்து இருந்து நின்றதுவும் அங்கு? 64

2346 அங்கற்கிடரின்றி[57] * அந்திப் பொழுதத்து *

[55] பொலிந்து
[56] படைப்ப
[57] அங்கக்கிடறின்றி

மங்க இரணியனது ஆகத்தை ** - பொங்கி
அரி உருவமாய்ப் பிளந்த * அம்மானவனே *
கரி உருவம் கொம்பொசித்தான் காய்ந்து 65

2347 காய்ந்திருளை மாற்றிக் * கதிரிலகு மாமணிகள் *
ஏய்ந்த பணக்கதிர் மேல் வெவ்வுயிர்ப்ப ** - வாய்ந்த
மது கைடவரும் * வயிறுருகி மாண்டார் *
அது கேடவர்க்கு இறுதியாங்கு 66

2348 ஆங்கு மலரும் * குவியுமாலுந்திவாய் *
ஓங்கு கமலத்தின் ஒண்போது[58] ** - ஆங்கைத்
திகிரி சுடர் என்றும் * வெண்சங்கம் * வானில்
பகரு மதியென்றும் பார்த்து 67

2349 பார்த்த கடுவன் * சுனை நீர் நிழல் கண்டு *
பேர்த்தோர் கடுவன் எனப் பேர்ந்து ** - கார்த்த
களங்கனிக்குக் * கை நீட்டும் வேங்கடமே * மேல் நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு 68

2350 வெற்பென்று * வேங்கடம் பாடும் * வியந்துழாய்
கற்பென்று சூடும் * கருங்குழல் மேல் ** - மல் பொன்ற
நீண்ட தோள் மால் கிடந்த * நீள் கடல் நீராடுவான் *
பூண்ட நாள் எல்லாம் புகும் 69

2351 புகுமதத்தால் * வாய் பூசிக் கீழ் தாழ்ந்து * அருவி
உகு மதத்தால் * கால் கழுவிக் கையால் ** - மிகு மதத் தேன்
விண்ட மலர் கொண்டு * விறல் வேங்கடவனையே *
கண்டு வணங்கும் களிறு 70

2352 களிறு முகில் குத்தக் * கை எடுத்தோடி *
ஒளிறு மருப்பொசிகை யாளி - பிளிறி
விழ ** கொன்று நின்றதிரும் * வேங்கடமே * மேல் நாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று 71

2353 குன்று ஒன்றினாய * குறமகளிர் கோல்வளைக் கை *
சென்று விளையாடும் தீங்கழை போய் ** - வென்று
விளங்கு மதி கோள் விடுக்கும் * வேங்கடமே * மேலை
இளங்குமரர் கோமான் இடம் 72

2354 இடம் வலம் ஏழ் பூண்ட * இரவித் தேர் ஓட்டி *
வடமுக வேங்கடத்து மன்னும் ** - குடம் நயந்த

[58] கமலத்தினதொண்போது

கூத்தனாய் நின்றான் * குரைகழலே கூறுவதே *
நாத்தன்னால் உள்ள நலம் 73

2355 நலமே வலிது கொல்? * நஞ்சூட்டுவன் பேய் *
நிலமே புரண்டு போய் வீழ ** - சலமே தான்
வெங்கொங்கை உண்டானை * மீட்டாய்ச்சி ஊட்டுவான் *
தன் கொங்கை வாய் வைத்தாள் சார்ந்து 74

2356 சார்ந்தகடு தேய்ப்பத் * தடாவிய கோட்டுச்சி வாய் *
ஊர்ந்தியங்கும் வெண்மதியின் ஒண்முயலை ** - சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் * திருமலையே * ஆயன்
புனவேங்கை நாறும் பொருப்பு 75

2357 பொருப்பிடையே நின்றும் * புனல் குளித்தும் * ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா ** - விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை * மெய்ம்மலர்[59] தூய்க் கை தொழுதால் *
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து 76

2358 ஆய்ந்த அருமறையோன் * நான்முகத்தோன் நன்குறங்கில் *
வாய்ந்த குழவியாய் வாள் அரக்கன் ** - ஏய்ந்த
முடிப்போது * மூன்றேழ் என்றெண்ணினான் * ஆர்ந்த
அடிப்போது நங்கட்கு அரண் 77

2359 அரணாம் நமக்கு என்றும் * ஆழி வலவன் *
முரணாள் வலம் சுழிந்த[60] மொய்ம்பன் ** - சரணா மேல்
ஏது கதி? ஏது நிலை? * ஏது பிறப்பு? என்னாதே *
ஓது கதி மாயனையே[61] ஓர்த்து 78

2360 ஓர்த்த மனத்தராய் * ஐந்தடக்கி ஆராய்ந்து *
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம் ** - கார்த்த
விரையார் நறுந்துழாய் * வீங்கோத மேனி *
நிரையார மார்வனையே நின்று 79

2361 நின்று எதிராய * நிரைமணித்தேர் வாணன் தோள் *
ஒன்றிய ஈரைஞ்ஞூறு உடன் துணிய ** - வென்றிலங்கும்
ஆர் படுவான் * நேமி அரவணையான் * சேவடிக்கே
நேர் படுவான் தான் முயலும் நெஞ்சு 80

2362 நெஞ்சால் * நினைப்பரியனேலும் * நிலைப் பெற்று என்

[59] மென்மலர்
[60] சுழித்த
[61] மாதவனையே

நெஞ்சமே! பேசாய் * நினைக்குங்கால் ** - நெஞ்சத்துப்
பேராது நிற்கும் * பெருமானை என் கொலோ? *
ஓராது நிற்பது உணர்வு 81

2363 உணரில் உணர்வரியன் * உள்ளம் புகுந்து *
புணரிலும் காண்பரியன் உண்மை ** - இணரணையக்
கொங்கணைந்து வண்டறையும் * தண்துழாய்க் கோமானை *
எங்கணைந்து காண்டும் இனி? 82

2364 இனியவன் மாயன் * என உரைப்பரேலும் *
இனியவன் காண்பரியனேலும் ** - இனியவன்
கள்ளத்தால் மண் கொண்டு * விண் கடந்த பைங்கழலான் *
உள்ளத்தின் உள்ளே உளன் 83

2365 உளனாய * நான்மறையின் உட்பொருளை * உள்ளத்து
உளனாகத் * தேர்ந்து உணர்வரேலும் ** - உளனாய
வண்தாமரை நெடுங்கண் * மாயவனை யாவரே? *
கண்டார் உகப்பர் கவி 84

2366 கவியினார் கைபுனைந்து * கண்ணார் கழல் போய் *
செவியினார் கேள்வியராய்ச் சேர்ந்தார் ** - புவியினார்
போற்றி உரைக்கப் * பொலியுமே? * பின்னைக்கா
ஏற்றுயிரை அட்டான் எழில் 85

2367 எழில் கொண்டு[62] * மின்னுக்கொடி எடுத்து * வேகத்
தொழில் கொண்டு * தான் முழங்கித் தோன்றும் ** - எழில் கொண்ட
நீர் மேக மன்ன * நெடுமால் நிறம் போல *
கார் வானம் காட்டும் கலந்து 86

2368 கலந்து மணி இமைக்கும் கண்ணா! * நின் மேனி
மலர்ந்து * மரதகமே காட்டும் ** - நலந்திகழும்
கொந்தின்வாய் வண்டறையும் * தண்துழாய்க் கோமானை *
அந்தி வான் காட்டும் அது 87

2369 அது நன்று இது தீதென்று * ஐயப்படாதே *
மது நின்ற தண்துழாய் மார்வன் ** - பொது நின்ற *
பொன்னங்கழலே தொழுமின் * முழு வினைகள்
முன்னம் கழலும் முடிந்து 88

2370 முடிந்த பொழுதில் குறவாணர் * ஏனம்
படிந்துழுசால் * பைந்தினைகள்வித்த ** - தடிந்தெழுந்த

---

[62] கொண்ட

வேய்ங்கழை போய் * விண் திறக்கும் வேங்கடமே * மேலொரு நாள்
தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு 89

2371 சிலம்பும் செறிகழலும் * சென்றிசைப்ப * விண்ணாறு
அலம்பிய சேவடி போய் ** அண்டம் - புலம்பிய தோள்
எண்திசையும் சூழ * இடம் போதாது என் கொலோ? *
வண்டுழாய் மால் அளந்த மண் 90

2372 மண் உண்டும் * பேய்ச்சி முலை உண்டும் ஆற்றாதாய் *
வெண்ணெய் விழுங்க வெகுண்டு ** ஆய்ச்சி - கண்ணிக்
கயிற்றினால் கட்டத் * தான் கட்டுண்டு இருந்தான் *
வயிற்றினோடு ஆற்றா மகன் 91

2373 மகன் ஒருவர்க்கு அல்லாத * மாமேனி மாயன் *
மகனாம் அவன் மகன் தன் காதல் - மகனை **
சிறை செய்த வாணன் தோள் * செற்றான் கழலே *
நிறை செய்து என் நெஞ்சே! நினை 92

2374 நினைத்து உலகில் ஆர் தெளிவார்? * நீண்ட திருமால் *
அனைத்துலகும் உள் ஒடுக்கி ஆல் மேல் ** - கனைத்துலவு
வெள்ளத்தோர் பிள்ளையாய் * மெள்ளத் துயின்றானை *
உள்ளத்தே வை நெஞ்சே! உய்த்து 93

2375 உய்த்து உணர்வென்னும் * ஒளி கொள் விளக்கேற்றி *
வைத்து அவனை நாடி வலைப்படுத்தேன் ** - மெத்தெனவே
நின்றான் இருந்தான் * கிடந்தான் என் நெஞ்சத்து *
பொன்றாமை மாயன் புகுந்து 94

2376 புகுந்து இலங்கும் * அந்திப் பொழுதத்து * அரியாய்
இகழ்ந்த * இரணியனது ஆகம் ** - சுகிர்ந்தெங்கும்
சிந்தப் பிளந்த * திருமால் திருவடியே *
வந்தித்து என் நெஞ்சமே! வாழ்த்து 95
2377 வாழ்த்திய வாயராய் * வானோர் மணிமகுடம் *
தாழ்த்தி வணங்கத் தழும்பாமே ** - கேழ்த்த
அடித் தாமரை * மலர் மேல் மங்கை மணாளன் *
அடித் தாமரையாமலர் 96

2378 அலர் எடுத்த உந்தியான் * ஆங்கு எழிலாய *
மலர் எடுத்த மாமேனி மாயன் ** - அலர் எடுத்த
வண்ணத்தான் * மாமலரான் வார் சடையான் * என்றிவர்கட்கு
எண்ணத் தான் ஆமோ? இமை 97

2379 இமம் சூழ் மலையும் * இருவிசும்பும் காற்றும் *

அமஞ்சூழ்ந்தற விளங்கித் தோன்றும் ** - நமன் சூழ்
நரகத்து * நம்மை நணுகாமல் காப்பான் *
துரகத்தை வாய் பிளந்தான் தொட்டு 98

2380 * தொட்ட படை எட்டும் * தோலாத வென்றியான் *
அட்டபுயகரத்தான் அஞ்ஞான்று ** - குட்டத்துக்
கோள் முதலை துஞ்சக் * குறித்தெறிந்த சக்கரத்தான் *
தாள் முதலே நங்கட்குச் சார்வு 99

2381 * சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் * தண்துழாய்த்
தார்வாழ் * வரை மார்பன் தான் முயங்கும் ** - காரார்ந்த
வானமருமின்னிமைக்கும் * வண்தாமரை நெடுங்கண் *
தேனமரும் பூ மேல் திரு 100

தசக அடிவரவு: திரு நன்கு பேசுவார் இவை மன்னும் அவனே
பண்டு களிறு நெஞ்சால் மண்ணுண்டும் நான்முகன்

பேயாழ்வார் திருவடிகளே ஷரணம்

திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த
நான்முகன் திருவந்தாதி

நான்முகன் திருவந்தாதி தனியன்
(ஸ்ரீராமப் பிள்ளை அருளிச் செய்தது)

நாராயணன் படைத்தான் நான்முகனை * நான்முகனுக்கு
ஏரார் சிவன் பிறந்தான் என்னும் சொல் * - சீரார்
மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே! * மொய்பூ
மழிசைப் பரன் அடியே வாழ்த்து

திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த
நான்முகன் திருவந்தாதி

2382 * நான்முகனை * நாராயணன் படைத்தான் * நான்முகனும்
தான் முகமாய்ச் * சங்கரனைத் தான் படைத்தான் ** - யான் முகமாய்
அந்தாதி மேலிட்டு * அறிவித்தேன் ஆழ்பொருளை *
சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து 1

2383 தேருங்கால் தேவன் * ஒருவனே என்று உரைப்பர் *
ஆரும் அறியார் அவன் பெருமை ** - ஓரும்
பொருள் முடிவும் இத்தனையே * எத்தவம் செய்தார்க்கும் *
அருள் முடிவது ஆழியான் பால் 2

2384 பாலில் கிடந்ததுவும் * பண்டரங்கம் மேயதுவும் *
ஆலில் துயின்றதுவும் ஆர் அறிவார்? ** - ஞாலத்து
ஒரு பொருளை * வானவர் தம் மெய்ப்பொருளை * அப்பில்
அருபொருளை யான் அறிந்தவாறு 3

2385 ஆறு சடைக் கரந்தான் * அண்டர் கோன் தன்னோடும் *
கூறுடையன் என்பதுவும் கொள்கைத்தே ** - வேறொருவர்
இல்லாமை * நின்றானை எம்மானை * எப்பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன் தொகுத்து 4

2386 தொகுத்த வரத்தனாய்த் * தோலாதான் மார்வம் *
வகிர்த்த வளையுகிர் தோள் மாலே! ** - உகத்தில்
ஒரு நான்று நீ உயர்த்தி * உள் வாங்கி நீயே[63] *
அருநான்கும் ஆனாய் அறி 5

2387 அறியார் சமணர் * அயர்த்தார் பவுத்தர் *
சிறியார் சிவப்பட்டார் செப்பில் ** - வெறியாய
மாயவனை மாலவனை * மாதவனை ஏத்தார் *
ஈனவரே ஆதலால் இன்று 6

2388 இன்றாக * நாளையே ஆக * இனிச் சிறிதும்
நின்றாக * நின் அருள் என் பாலதே ** - நன்றாக
நான் உன்னை * அன்றி இலேன் கண்டாய் * நாரணனே!
நீ என்னை அன்றி இலை 7

2389 இலை துணை மற்று என் நெஞ்சே! * ஈசனை வென்ற *
சிலை கொண்ட செங்கண் மால் சேரா ** - குலை கொண்ட
ஈரைந்தலையான் * இலங்கையை ஈடழித்த *
கூரம்பன் அல்லால் குறை 8

2390 குறை கொண்டு நான்முகன் * குண்டிகை நீர் பெய்து *
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி ** - கறை கொண்ட
கண்டத்தான் * சென்னி மேல் ஏறக் கழுவினான் *
அண்டத்தான் சேவடியை ஆங்கு 9

2391 ஆங்காரவாரம் * அது கேட்டு * அழல் உமிழும்

[63] வாங்கினையே

பூங்கார் அரவணையான் பொன்மேனி ** - யாம் காண
வல்லமே அல்லமே? * மாமலரான் வார்சடையான் *
வல்லரே அல்லரே? வாழ்த்து 10

2392 வாழ்த்துக வாய் * காண்க கண் கேட்க செவி * மகுடம்
தாழ்த்தி * வணங்குமின்கள் தண்மலரால் ** - சூழ்த்த
துழாய் மன்னு நீள்முடி * என் தொல்லை மால் தன்னை *
வழா வண்கை கூப்பி மதித்து 11

2393 மதித்தாய்போய் நான்கின் * மதியார் போய் வீழ *
மதித்தாய் மதிகோள் விடுத்தாய் ** - மதித்தாய்
மடுக் கிடந்த * மாமுதலை கோள் விடுப்பான் * ஆழி
விடற்கிரண்டும் போய் இரண்டின் வீடு 12

2394 வீடாக்கும் * பெற்றி அறியாது * மெய் வருத்திக்
கூடாக்கி * நின்றுண்டு கொண்டுழல்வீர்! ** - வீடாக்கும்
மெய்ப்பொருள் தான் * வேத முதற்பொருள் தான் * விண்ணவர்க்கு
நற்பொருள் தான் நாராயணன் 13

2395 நாராயணன் என்னை ஆளி * நரகத்துச்
சேராமல் * காக்கும் திருமால் ** தன் - பேரான
பேசப் பெறாத * பிணச் சமயர் பேசக் கேட்டு *
ஆசைப்பட்டு ஆழ்வார் பலர் 14

2396 பல தேவர் ஏத்தப் * படி கடந்தான் பாதம் *
மலர் ஏற விட்டிறைஞ்சி வாழ்த்த - வலராகில் **
மார்க்கண்டன் கண்ட வகையே * வரும் கண்டீர் *
நீர்க்கண்டன் கண்ட நிலை 15

2397 நிலை மன்னும் என் நெஞ்சம் * அந்நான்று * தேவர்
தலை மன்னர் * தாமே மாற்றாக ** - பல மன்னர்
போர் மாள * வெங்கதிரோன் மாயப் பொழில் மறைய *
தேராழியால் மறைத்தாரால் 16

2398 ஆல நிழற்கீழ் * அற நெறியை * நால்வர்க்கு
மேலை உகத்துரைத்தான் * மெய்த்தவத்தோன் ** - ஞாலம்
அளந்தானை * ஆழிக் கிடந்தானை * ஆல் மேல்
வளர்ந்தானைத் தான் வணங்குமாறு 17

2399 மாறாய தானவனை * வள்ளுகிரால் * மார்விரண்டு
கூறாகக் * கீறிய கோள் அரியை ** - வேறாக
ஏத்தி இருப்பாரை * வெல்லுமே * மற்றவரைச்

சார்த்தி[64] இருப்பார் தவம் 18

2400 தவம் செய்து * நான்முகனால் பெற்ற வரத்தை *
அவம் செய்த ஆழியாய்[65] அன்றே ** - உவந்து எம்மைக்
காப்பாய் நீ * காப்பதனை ஆவாய் நீ * வைகுந்தம்
ஈப்பாயும் எவ்வுயிர்க்கும் நீ 19

2401 நீயே உலகெல்லாம் * நின் அருளே நிற்பனவும் *
நீயே தவத் தேவ தேவனும் ** - நீயே
எரி சுடரும் மால் வரையும் * எண்திசையும் * அண்டத்து
இருசுடரும் ஆய இவை 20

2402 இவையா! பிலவாய் * திறந்தெரி கான்ற *
இவையா! எரி வட்டக் கண்கள் ** - இவையா!
எரி பொங்கிக் காட்டும் * இமையோர் பெருமான் *
அரி பொங்கிக் காட்டும் அழகு 21

2403 அழகியான் தானே * அரியுருவன் தானே *
பழகியான் தாளே பணிமின் ** - குழவியாய்த்
தான் ஏழுலகுக்கும் * தன்மைக்கும் தன்மையனே *
மீனாய் உயிரளிக்கும் வித்து 22

2404 வித்து மிட வேண்டுங்கொல்லோ? * விடை அடர்த்த *
பத்தி உழவன் பழம்புனத்து ** - மொய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன * கருமால் திருமேனி *
நீர் வானம் காட்டும் நிகழ்ந்து 23

2405 நிகழ்ந்தாய் * பால் பொன் பசுப்புக் * கார்வண்ணம் நான்கும்
இகழ்ந்தாய் * இருவரையும் வீயப் - புகழ்ந்தாய் **
சினப் போர்ச் சுவேதனைச் * சேனாபதியாய் *
மனப் போர் முடிக்கும் வகை 24

2406 வகையால் மதியாது * மண் கொண்டாய் * மற்றும்
வகையால் * வருவது ஒன்றுண்டே ** - வகையால்
வயிரம் குழைத்துண்ணும் * மாவலி தான் என்னும் *
வயிர வழக்கொழித்தாய் மற்று 25

2407 மற்றுத் தொழுவார் * ஒருவரையும் யான் இன்மை *
கற்றைச் சடையான் கரிக் கண்டாய் ** - எற்றைக்கும்
கண்டு கொள் கண்டாய் * கடல் வண்ணா! * யான் உன்னைக்

[64] சாற்றி
[65] ஆழியான்

கண்டு கொள்கிற்குமாறு 26

2408 மால் தான் புகுந்த * மட நெஞ்சம்[66] * மற்றதுவும்
பேறாகக் * கொள்வனோ? பேதைகாள்! ** - நீறாடி
தான் காண மாட்டாத * தாரகலச் சேவடியை *
யான் காண வல்லேற்கு இது 27

2409 இது இலங்கை ஈடழியக் * கட்டிய சேது *
இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்[67] ** - இது இலங்கை
தான் ஒடுங்க வில் நுடங்கத் * தண்தார் இராவணனை *
ஊன் ஒடுங்க எய்தான் உகப்பு 28

2410 உகப்புருவன் தானே * ஒளி உருவன் தானே *
மகப்புருவன் தானே மதிக்கில் ** - மிகப்புருவம்
ஒன்றுக்கு ஒன்று * ஓசனையான் வீழ * ஒரு கணையால்
அன்றிக்கொண்டு எய்தான் அவன் 29

2411 அவன் என்னை ஆளி * அரங்கத்து அரங்கில் *
அவன் என்னை எய்தாமல் காப்பான் ** - அவன் என்னது
உள்ளத்து * நின்றான் இருந்தான் கிடக்குமே *
வெள்ளத்தரவணையின் மேல் 30

2412 மேல் நான்முகன் * அரனை இட்ட விடு சாபம் *
தான் நாரணன் ஒழித்தான் தாரகையுள்[68] ** - வானோர்
பெருமானை * ஏத்தாத பேய்காள்! * பிறக்கும்
கருமாயம் பேசின் கதை 31

2413 கதைப் பொருள் தான் * கண்ணன் திருவயிற்றின் உள்ள *
உதைப்பளவு போது போக்கின்றி ** - வதைப் பொருள் தான்
வாய்ந்த குணத்துப் * படாதது அடைமினோ *
ஆய்ந்த குணத்தான் அடி 32

2414 அடிச் சகடம் சாடி * அரவாட்டி * யானை
பிடித்தொசித்துப் * பேய் முலை நஞ்சுண்டு ** - வடிப் பவள
வாய்ப் பின்னை தோளிக்கா * வல்லேற்று எருத்திறுத்து *
கோப்பின்னுமானான் குறிப்பு 33

2415 குறிப்பு எனக்குக் * கோட்டியூர் மேயானை ஏத்த *
குறிப்பு எனக்கு நன்மை பயக்க ** - வெறுப்பனோ?

---

[66] நெஞ்சன்
[67] வீழ்த்தது
[68] தாரணியுள்

வேங்கடத்து மேயானை * மெய்வினை[69] நோய் எய்தாமல் *
தான் கடத்தும் தன்மையான் தாள் 34

2416 * தாளால் உலகம் * அளந்த அசைவே கொல்? *
வாளா கிடந்தருளும் வாய்திறவான் ** - நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை * மாவல்லிக்கேணியான் *
ஐந்தலைவாய் நாகத்தணை 35

2417 நாகத்தணைக் குடந்தை * வெஃகா திருவெவ்வுள் *
நாகத்தணை அரங்கம் பேரன்பில் ** - நாகத்
தணைப் பாற்கடல் கிடக்கும் * ஆதி நெடுமால் *
அணைப்பார் கருத்தனாவான் 36

2418 வானுலவு தீவளி * மாகடல் மாபொருப்பு *
தான் உலவு வெங்கதிரும் தண்மதியும் ** - மேல் நிலவு
கொண்டல் பெயரும் * திசை எட்டும் சூழ்ச்சியும் *
அண்டந்திருமாலகைப்பு 37

2419 அகைப்பில் மனிசரை * ஆறு சமயம்
புகைத்தான் * பொருகடல் நீர் வண்ணன் ** - உகைக்கு மேல்
எத்தேவர் வாலாட்டும் * எவ்வாறு செய்கையும் *
அப்போதொழியும் அழைப்பு 38

2420 அழைப்பன் * திருவேங்கடத்தானைக் காண *
இழைப்பன் * திருக்கூடல் கூட ** - மழைப்பேர்
அருவி * மணி வரன்றி[70] வந்திழிய * யானை
வெருவி அரவொடுங்கும் வெற்பு 39

2421 வெற்பென்று * வேங்கடம் பாடினேன் * வீடாக்கி
நிற்கின்றேன் * நின்று நினைக்கின்றேன் ** - கற்கின்ற
நூல் வலையில் பட்டிருந்த * நூலாட்டி கேள்வனார் *
கால் வலையில் பட்டிருந்தேன் காண் 40

2422 காணலுறுகின்றேன் * கல்லருவி முத்துதிர *
ஓண விழவில் ஒலி அதிர ** - பேணி
வருவேங்கடவா! * என் உள்ளம் புகுந்தாய் *
திருவேங்கடம் அதனைச் சென்று 41

2423 சென்று வணங்குமினோ * சேணுயர் வேங்கடத்தை *
நின்று வினை கெடுக்கும் நீர்மையால் ** - என்றும்

[69] வெவ்வினை
[70] வரண்டி

கடிக்கமல நான்முகனும் * கண் மூன்றத்தானும் *
அடிக்கமலம் இட்டு ஏத்தும் அங்கு 42

2424 மங்குல் தோய் சென்னி * வடவேங்கடத்தானை *
கங்குல் புகுந்தார்கள் * காப்பணிவான் ** - திங்கள்
சடையேற வைத்தானும் * தாமரை மேலானும் *
குடையேறத் தாம் குவித்துக் கொண்டு 43

2425 கொண்டு குடங்கால் * மேல் வைத்த குழவியாய் *
தண்ட அரக்கன் தலை தாளால் - பண்டெண்ணி **
போம் குமரன் நிற்கும் * பொழில் வேங்கட மலைக்கே *
போம் குமரருள்ளீர்! புரிந்து 44

2426 புரிந்து மலர் இட்டுப் * புண்டரீகப் பாதம் *
பரிந்து படுகாடு நிற்ப ** - தெரிந்தெங்கும்
தான் ஓங்கி நிற்கின்றான் * தண்ணருவி வேங்கடமே *
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு 45

2427 வைப்பன் மணி விளக்கா * மாமதியை * மாலுக்கென்று
எப்பொழுதும் * கை நீட்டும் யானையை ** - எப்பாடும்
வேடு வளைக்கக் * குறவர் வில் எடுக்கும் வேங்கடமே *
நாடு வளைத்தாடுது[71] மேல் நன்று 46

2428 நன்மணி வண்ணனூர் * ஆளியும் கோளரியும் *
பொன்மணியும் முத்தமும் பூமரமும் ** - பன்மணி நீ
ரோடு பொருதுருளும் * கானமும் வானரமும் *
வேடுமுடை வேங்கடம் 47

2429 வேங்கடமே * விண்ணோர் தொழுவதுவும் * மெய்ம்மையால்
வேங்கடமே * மெய்வினை நோய் தீர்ப்பதுவும் ** - வேங்கடமே
தானவரை வீழத் * தன் ஆழிப் படை தொட்டு *
வானவரைக் காப்பான் மலை 48

2430 மலையாமை மேல் வைத்து * வாசுகியைச் சுற்றி *
தலையாமை தான் ஒரு கை பற்றி ** - அலையாமல்
பீறக் கடைந்த * பெருமான் திருநாமம் *
கூறுவதே யாவர்க்கும் கூற்று 49

2431 கூற்றமும் சாரா * கொடுவினையும் சாரா * தீ
மாற்றமும் சாரா வகை அறிந்தேன் ** - ஆற்றங்
கரைக் கிடக்கும் * கண்ணன் கடல் கிடக்கும் * மாயன்
உரைக் கிடக்கும் உள்ளத்து எனக்கு 50

[71] வளைத்தாடு

2432 எனக்காவார் ஆர் ஒருவரே? * எம்பெருமான்
தனக்காவான் * தானே மற்றல்லால் ** - புனக்காயா
வண்ணனே! * உன்னைப் பிறர் அறியார் * என் மதிக்கு
விண் எல்லாம் உண்டோ விலை? 51

2433 விலைக்கு ஆட்படுவர் * விசாதி ஏற்றுண்பர் *
தலைக்காட்பலி திரிவர் தக்கோர் ** - முலைக் கால்
விடம் உண்ட வேந்தனையே * வேறா ஏத்தாதார் *
கடமுண்டார்[72] கல்லாதவர் 52

2434 கல்லாதவர் இலங்கை கட்டழித்த * காகுத்தன்
அல்லால் * ஒரு தெய்வம் யானிலேன் ** - பொல்லாத
தேவரைத் * தேவர் அல்லாரை * திருவில்லாத்
தேவரைத் தேறேல்மின் தேவு 53

2435 தேவராய் * நிற்கும் அத்தேவும் * அத்தேவரில்
மூவராய் நிற்கும் * முது புணர்ப்பும் ** - யாவராய்
நிற்கின்றதெல்லாம் * நெடுமால் என்று ஓராதார் *
கற்கின்றதெல்லாம் கடை 54

2436 கடை நின்றமரர் கழல் தொழுது * நாளும்
இடை நின்ற * இன்பத்தராவர் ** - புடை நின்ற
நீரோத மேனி * நெடுமாலே! * நின் அடியை
யார் ஓத வல்லார் அவர்? 55

2437 அவர் இவர் என்றில்லை * அனங்க வேள் தாதைக்கு *
எவரும் எதிர் இல்லை கண்டீர் ** - உவரிக்
கடல் நஞ்சமுண்டான் கடன் என்று * வாணற்கு
உடன் நின்று தோற்றான் ஒருங்கு 56

2438 ஒருங்கிருந்த நல்வினையும் * தீவினையும் ஆவான் *
பெருங்குருந்தம் சாய்த்தவனே பேசில் ** - மருங்கிருந்த
வானவர் தாம் தானவர் தாம் * தாரகை தான் * என்னெஞ்சம்
ஆனவர் தாம் அல்லாததென்? 57

2439 என்னெஞ்ச மேயான் * இருள் நீக்கி எம்பிரான் *
மன்னஞ்ச முன்னொரு நாள் மண் அளந்தான் ** - என்னெஞ்ச
மேயானை * இல்லா விடை ஏற்றான் * வெவ்வினை தீர்த்து
ஆயனுக்கு ஆக்கினேன் அன்பு 58

2440 அன்பாவாய் * ஆரமுதம் ஆவாய் * அடியேனுக்கு

[72] கடனுண்டார்

இன்பாவாய் * எல்லாமும் நீயாவாய் ** - பொன்பாவை
கேள்வா! * கிளரொளி என் கேசவனே! * கேடின்றி
ஆள்வாய்க்கு அடியேன் நானாள் 59

2441 ஆட்பார்த்து உழி தருவாய் * கண்டு கொள் என்றும் * நின்
தாட்பார்த்து உழி தருவேன் தன்மையை ** - கேட்பார்க்கு
அரும்பொருளாய் * நின்ற அரங்கனே! * உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம் 60

2442 மனக்கேதம் சாரா * மதுசூதன் தன்னை *
தனக்கே தான் தஞ்சமாக் கொள்ளில் **- எனக்கே தான்
இன்றொன்றி நின்று உலகை * ஏழ் ஆணை ஓட்டினான் *
சென்றொன்றி நின்ற திரு 61

2443 திரு நின்ற பக்கம் * திறவிதென்று ஓரார் *
கரு நின்ற கல்லார்க்கு உரைப்பர் ** - திருவிருந்த
மார்வன்[73] * சிரீதரன் தன் வண்டுலவு தண் துழாய் *
தார் தன்னைச் சூடித் தரித்து 62

2444 தரித்திருந்தேனாகவே * தாரா கணப் போர் *
விரித்துரைத்த வெந்நாகத்துன்னை ** - தெரித்தெழுதி
வாசித்தும் கேட்டும் * வணங்கி வழிபட்டும் *
பூசித்தும் போக்கினேன் போது 63

2445 போதான * இட்டிறைஞ்சி ஏத்துமினோ * பொன் மகரக்
காதானை * ஆதிப்பெருமானை ** - நாதானை
நல்லானை நாரணனை * நம் ஏழ் பிறப்பு அறுக்கும்
சொல்லானை * சொல்லுவதே சூது 64

2446 சூதாவது என் நெஞ்சத்து எண்ணினேன் * சொல் மாலை
மாதாய * மாயவனை[74] மாதவனை ** - யாதானும்
வல்லவா * சிந்தித்திருப்பேற்கு * வைகுந்தத்து
இல்லையோ சொல்லீர் இடம்? 65

2447 இடமாவது * என் நெஞ்சம் இன்றெல்லாம் * பண்டு
பட நாகணை * நெடிய மாற்கு ** - திடமாக
வையேன் * மதி சூடி தன்னோடு * அயனை நான்
வையேன் ஆட்செய்யேன் வலம் 66

2448 வலமாக * மாட்டாமை தானாக * வைகல்

[73] மார்பின்
[74] மாலவனை

குலமாக * குற்றம் தானாக ** - நலமாக
நாரணனை நாபதியை[75] * ஞானப் பெருமானை *
சீரணனை ஏத்தும் திறம் 67

2449 திறம்பேன்மின் கண்டீர் * திருவடி தன் நாமம் *
மறந்தும் புறந்தொழா மாந்தர் ** - இறைஞ்சியும்
சாதுவராய்ப் * போதுமின்கள் என்றான் * நமனும் தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு 68

2450 செவிக்கு இன்பம் ஆவதுவும் * செங்கண்மால் நாமம் *
புவிக்கும் புவி அதுவே கண்டீர் ** - கவிக்கு
நிறை பொருளாய்[76] * நின்றானை நேர்பட்டேன் * பார்க்கில்
மறைப் பொருளும் அத்தனையே தான் 69

2451 தான் ஒருவனாகித் * தரணி இடந்து எடுத்து *
ஏனொருவனாய் எயிற்றில் தாங்கியதும் ** - யான் ஒருவன் *
இன்றா அறிகின்றேன் அல்லேன் * இருநிலத்தைச்
சென்றாங்கடிப்படுத்த சேய் 70

2452 சேயன் அணியன் * சிறியன் மிகப் பெரியன் *
ஆயன் துவரைக் கோனாய் நின்ற - மாயன் ** அன்று
ஓதிய * வாக்கதனைக் கல்லார் * உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞானமில் 71

2453 இல்லறம் இல்லேல்[77] * துறவறம் இல்லென்னும் *
சொல்லறம் அல்லனவும் சொல்லல்ல ** - நல்லறம்
ஆவனவும் * நால்வேத மாத்தவமும் * நாரணனே
ஆவது ஈதன்று என்பாரார்? 72

2454 ஆரே அறிவார்? * அனைத்துலகும் உண்டு உமிழ்ந்த *
பேராழியான் தன் பெருமையை ** - கார் செறிந்த
கண்டத்தான் * எண்கண்ணான் காணான் * அவன் வைத்த
பண்டைத் தானத்தின் பதி 73

2455 பதிப் பகைஞற்கு[78] ஆற்றாது * பாய் திரை நீர்ப் பாழி *
மதித்தடைந்த வாளரவந்தன்னை ** - மதித்தவன் தன்
வல்லாகத் தேற்றிய * மாமேனி மாயவனை *
அல்லது ஒன்று ஏத்தாது என் நா 74

---

[75] நம்பதியை
[76] நிறைப் பொருளாய்
[77] அல்லேல்
[78] பகைஞர்க்கு

2456 நாக்கொண்டு * மானிடம் பாடேன் * நலமாகத்
தீக்கொண்ட * செஞ்சடையான் சென்று ** என்றும் - பூக்கொண்டு
வல்லவாறு * ஏத்த மகிழாத * வைகுந்தச்
செல்வனார் சேவடி மேல் பாட்டு 75

2457 பாட்டும் முறையும் * படுகதையும் பல்பொருளும் *
ஈட்டிய தீயும் இருவிசும்பும் ** - கேட்ட
மனுவும் * சுருதி மறை நான்கும் * மாயன்
தன மாயையில் பட்டதற்பு 76

2458 தற்பென்னைத் * தான் அறியானேலும் * தடங்கடலைக்
கற்கொண்டு தூர்த்த கடல் வண்ணன் ** - எற்கொண்ட
வெவ்வினையும் நீங்க * விலங்கா மனம் வைத்தான் *
எவ்வினையும் மாயுமால் கண்டு 77

2459 கண்டு வணங்கினார்க்கு * என்னாங்கொல்? * காமன் உடல்
கொண்ட * தவத்தாற்கு உமை உணர்த்த ** - வண்டலம்பும்
தாரலங்கல் நீள்முடியான் * தன் பெயரே கேட்டிருந்து * அங்
காரலங்கல் ஆனமையால் ஆய்ந்து 78

2460 ஆய்ந்து கொண்டு * ஆதிப் பெருமானை * அன்பினால்
வாய்ந்த * மனத்து இருத்த வல்லார்கள் ** - ஏய்ந்த தம்
மெய்குந்தமாக * விரும்புவரே * தாமும் தம்
வைகுந்தம் காண்பார் விரைந்து 79

2461 விரைந்து அடைமின் மேலொரு நாள் * வெள்ளம் பரக்க *
கரந்துலகம் காத்தளித்த கண்ணன் ** - பரந்துலகம் *
பாடின ஆடின கேட்டு * படு நரகம்
வீடின வாசற்கதவு 80

2462 கதவு மனம் என்றும் * காணலாம் என்றும் *
குதையும் வினை ஆவி தீர்ந்தேன் ** - விதையாக
நல்தமிழை வித்தி * என் உள்ளத்தை நீ விளைத்தாய் *
கற்ற மொழியாகிக் கலந்து 81

2463 கலந்தான் என் உள்ளத்துக் * காமவேள் தாதை *
நலந்தானும் ஈதொப்பதுண்டே? ** - அலர்ந்தலர்கள்
இட்டேத்தும் * ஈசனும் நான்முகனும் * என்றிவர்கள்
விட்டேத்த மாட்டாத வேந்து 82

2464 வேந்தராய் விண்ணவராய் * விண்ணாகித் தண்ணளியாய் *
மாந்தராய் மாதாய் மற்றெல்லாமாய் ** - சார்ந்தவர்க்குத்
தன்னால் தான் நேமியான் * மால்வண்ணன் தான் கொடுக்கும் *

பின்னால் தான் செய்யும் பிதிர் 83

2465 பிதிரும் மனமிலேன் * பிஞ்ஞகன் தன்னோடு
எதிர்வன் * அவன் எனக்கு நேரான் ** - அதிரும்
கழற்கால மன்னனையே * கண்ணனையே * நாளும்
தொழக்[79] காதல் பூண்டேன் தொழில் 84

2466 தொழில் எனக்குத் * தொல்லை மால் தன் நாமம் ஏத்த *
பொழுது எனக்கு மற்றதுவே போதும் ** - கழிசினத்த
வல்லாளன் * வானரக்[80] கோன் வாலி மதனழித்த *
வில்லாளன் நெஞ்சத்துளன் 85

2467 உளன் கண்டாய் நன்னெஞ்சே! * உத்தமனென்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
தன்னொப்பான் தானாய் * உளன் காண் தமியேற்கு[81] *
என்னொப்பார்க்கு ஈசனிமை 86

2468 இமையப் பெருமலை போல் * இந்திரனார்க்கு இட்ட *
சமய விருந்துண்டு ஆர் காப்பார்? ** - சமயங்கள்
கண்டான் அவை காப்பான் * கார்க்கண்டன் நான்முகனோடு *
உண்டான் உலகோடு உயிர் 87

2469 உயிர் கொண்டு உடல் ஒழிய * ஓடும் போதோடி *
அயர்வென்ற தீர்ப்பான் பேர் பாடி ** - செயல் தீரச்
சிந்தித்து * வாழ்வாரே வாழ்வார் * சிறு சமயப்
பந்தனையார் வாழ்வேல் பழுது 88

2470 பழுதாகாது ஒன்றறிந்தேன் * பாற்கடலான் பாதம் *
வழுவா வகை நினைந்து வைகல் - தொழுவாரை **
கண்டிறைஞ்சி வாழ்வார் * கலந்த வினை கெடுத்து *
விண் திறந்து வீற்றிருப்பார் மிக்கு 89

2471 வீற்றிருந்து * விண்ணாள வேண்டுவார் * வேங்கடத்தான்
பால்திருந்த வைத்தாரே பல்மலர்கள் ** - மேல் திருந்த
வாழ்வார் * வருமதி பார்த்து அன்பினராய் * மற்றவர்க்கே
தாழ்வாய் இருப்பார் தமர் 90

2472 தமர் ஆவர் யாவர்க்கும் * தாமரை மேலார்க்கும் *
அமரர்க்கும் ஆடரவத்தார்க்கும்[82] ** - அமரர்கள்

---

[79] தொழும்
[80] வானரர்
[81] தமியேற்கும்
[82] ஆடரவார்த்தாற்கும்

தாள் தாமரை * மலர்கள் இட்டு இறைஞ்சி * மால் வண்ணன்
தாள் தாமரை அடைவோம் என்று 91

2473 என்றும் மறந்தறியேன் * என் நெஞ்சத்தே வைத்து *
நின்றும் இருந்தும் நெடுமாலை ** - என்றும்
திருவிருந்த மார்பன் * சிரீதரனுக்கு ஆளாய் *
கருவிருந்த நாள் முதலாக் காப்பு 92

2474 காப்பு மறந்தறியேன் * கண்ணனே என்றிருப்பன் *
ஆப்பு அங்கொழியவும் பல்லுயிர்க்கும் ** - ஆக்கை
கொடுத்தளித்த * கோனே! குணப் பரனே! * உன்னை
விடத் துணியார் மெய் தெளிந்தார் தாம் 93

2475 மெய் தெளிந்தார் என் செய்யார்? * வேறானார் நீறாக *
கை தெளிந்து காட்டிக் களப்படுத்து ** - பை தெளிந்த
பாம்பின் அணையாய்! * அருளாய் அடியேற்கு *
வேம்பும் கறியாகுமேன்று 94

2476 * ஏன்றேன் அடிமை * இழிந்தேன் பிறப்பு இடும்பை *
ஆன்றேன் அமரர்க்கு அமராமை ** - ஆன்றேன்
கடன் நாடும் மண்ணாடும் * கைவிட்டு * மேலை
இட நாடு காண இனி 95

2477 * இனி அறிந்தேன் * ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் *
இனி அறிந்தேன் எம்பெருமான்! உன்னை ** - இனி அறிந்தேன்
காரணன் நீ கற்றவை நீ * கற்பவை நீ * நற்கிரிசை
நாரணன் நீ நன்கறிந்தேன் நான் 96

தசக அடிவரவு: நான்முகன் வாழ்த்துக இவை மேல் காணல் எனக்கு
மனக்கேதம் சேயன் கதவு தமராவார் பொய்ந்நின்ற

திருமழிசை ஆழ்வார் திருவடிகளே சரணம்

நம்மாழ்வார் அருளிச் செய்த
ருக் வேத ஸாரமான

திருவிருத்தம்

திருவிருத்தம் தனியன்

கிடாம்பியாச்சான்[83] அருளிச் செய்தது

கரு விருத்தக் குழி நீத்த பின் காமக் கடுங்குழி வீழ்ந்து *
ஒரு விருத்தம் புக்கு உழலுறுவீர்! உயிரின் பொருள்கட்கு[84] *
ஒரு விருத்தம் புகுதாமல் குருகையர் கோன் உரைத்த *
திருவிருத்தத்து ஓரடி கற்றிரீர் திருநாட்டகத்தே

நம்மாழ்வார் அருளிச் செய்த
ருக் வேத ஸாரமான
திருவிருத்தம்

தாமான தன்மையில் அருளிச் செய்தது

2478 * பொய்ந்நின்ற ஞானமும் * பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் *
இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை ** உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்! இமையோர் தலைவா! *
மெய்ந்நின்று கேட்டருளாய் * அடியேன் செய்யும் விண்ணப்பமே 1

தலைவியின் வேறுபாடு கண்ட தோழி வியந்து உரைத்தல்

2479 செழுநீர்த் தடத்துக் * கயல் மிளிர்ந்தால் ஒப்ப * சேய் அரிக்கண்
அழுநீர் துளும்ப அலமருகின்றன ** வாழியரோ
முழுநீர் முகில் வண்ணன் கண்ணன் விண்ணாட்டவர் மூதுவராம் *
தொழுநீர் இணை அடிக்கே * அன்பு சூட்டிய சூழ் குழற்கே 2

பிரிவாற்றாத தலைவி நெஞ்சழிந்து உரைத்தல்

2480 குழற் கோவலர் மடப்பாவையும் * மண்மகளும் திருவும் *
நிழற் போல்வனர் கண்டு நிற்குங்கொல்? மீளுங்கொல்? ** தண்ணந்துழாய்
அழற் போல் அடுஞ்சக்கரத்து அண்ணல் விண்ணோர் தொழக் கடவும் *
தழற் போல் சினத்த * அப்புள்ளின் பின் போன தனி நெஞ்சமே 3

தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு ஆற்றாது வருந்திக் கூறுதல்

2481 தனி நெஞ்சம் முன்னவர் * புள்ளே கவர்ந்தது * தண்ணந்துழாய்க்கு
இனி நெஞ்சம் இங்குக் கவர்வது யாமிலம் ** நீ நடுவே
முனி வஞ்சப்[85] பேய்ச்சி முலை சுவைத்தான் முடி சூடு துழாய்ப் *
பனி நஞ்ச மாருதமே! * எம்மதாவி பனிப்பு இயல்வே? 4

[83] சீராமப்பிள்ளை அல்லது ஆளவந்தார் என்றும் சிலர் கூறுவர்
[84] பொருளுக்கு
[85] நஞ்சப்

வாடைக்கு நலிந்த தலைவியின் மாமை கண்டு தோழி இரங்குதல்

2482 பனிப்பு இயல்வாக * உடைய தண்வாடை * இக்காலம் இவ்வூர்ப்
பனிப்பு இயல்வெல்லாம் * தவிர்ந்து எரி வீசும் ** அந்தண்ணந்துழாய்
பனிப் புயல் சோரும் தடங்கண்ணி மாமைத் திறத்துக் கொலாம்? *
பனிப் புயல் வண்ணண் * செங்கோல் ஒரு நான்று தடாவியதே 5

தலைவியின் எழில் கண்டு வியந்த தலைவன் வார்த்தை

2483 தடாவிய அம்பும் * முரிந்த சிலைகளும் போக விட்டு *
கடாயின கொண்டு ஒல்கும் வல்லி ஈதேனும் ** அசுரர் மங்கக்
கடாவிய வேகப் பறவையின் பாகன் மதன செங்கோல் *
நடாவிய கூற்றம் கண்டீர் * உயிர் காமின்கள் ஞாலத்துள்ளே 6

கால மயக்கு

2484 ஞாலம் பனிப்பச் செறித்து * நன்னீர் இட்டுக்கால் சிதைந்து *
நீல வல்லேறு பொரா நின்ற வானமிது ** திருமால்
கோலம் சுமந்து பிரிந்தார் கொடுமை குழறு * தண் பூம்
காலங்கொலோ? அறியேன் * வினையாட்டியேன் காண்கின்றவே 7

தலைவன் பொருள்வயில் பிரிதலைக் குறிப்பால் அறிந்த தலைவி தோழிக்கு உரைத்தல்

2485 காண்கின்றனகளும் * கேட்கின்றனகளும் காணில் * இந்நாள்
பாண்குன்ற நாடர் * பயில்கின்றன ** இதெல்லாம் அறிந்தோம்
மாண்குன்றம் ஏந்தித் தண் மாமலை வேங்கடத்து உம்பர் நம்பும் *
சேண்குன்றம் சென்று * பொருள் படைப்பான் கற்றதிண்ணனவே 8

தலைவன் தலைவியின் நீங்கலருமை கூறுதல்

2486 திண் பூஞ்சுடர் நுதி நேமி அஞ்செல்வர் * விண்ணாடு அனைய
வண்பூ மணிவல்லி * ஆரே பிரிபவர் தாம்? ** இவையோ
கண் பூங்கமலம் கருஞ்சுடராடி வெண்முத்து அரும்பி *
வண்பூங்குவளை * மட மான் விழிக்கின்ற மாயிதழே 9

மதியுடம்படுக்கலுற்ற தலைவன் குறையுற உரைத்தல்

2487 மாயோன் வட திருவேங்கட நாட * வல்லிக் கொடிகாள்!
நோயோ உரைக்கிலும் * கேட்கின்றிலீர் உரையீர் ** நுமது
வாயோ? அது அன்றி வல்வினையேனும் கிளியும் எள்கும்
ஆயோ? * அடும் தொண்டையோ? * அறையோ! இது அறிவரிதே 10

பிறிவாற்றாத தலைவியின் வேறுபாடு கண்டு தலைவன் உரைத்தல்

2488 அரியனயாம் இன்று காண்கின்றன * கண்ணன் விண்ணனையாய்!
பெரியன காதம் * பொருட்கோ பிரிவென ** ஞாலம் எய்தற்கு
உரியன ஒண்முத்தும் பைம்பொன்னும் ஏந்தி ஓரோ குடங்கைப் *
பெரியன கெண்டைக் குலம் * இவையோ வந்து பேர்கின்றவே 11

தலைவி நெஞ்சொடு கலாய்த்துத் தன் ஆற்றாமை கூறுதல்

2489 பேர்கின்றது மணி மாமை * பிறங்கி அள்ளல் பயலை *
ஊர்கின்றது கங்குல் ஊழிகளே ** இதெல்லாம் இனவே
ஈர்கின்ற சக்கரத்து எம்பெருமான் கண்ணன் தண்ணந்துழாய் *
சார்கின்ற நன்னெஞ்சினார் * தந்து போன தனி வளமே 12

பிரிவாற்றாத தலைவி இருளுக்கும் வாடைக்கும் இரங்குதல்

2490 தனி வளர் செங்கோல் நடாவு * தழல் வாய் அரசவியப்
பனி வளர் செங்கோல் * இருள் வீற்றிருந்தது ** பார் முழுதும்
துனி வளர் காதல் துழாயைத் துழாவு தண்வாடை தடிந்து *
இனி வளை காப்பவர் ஆர்? * எனை ஊழிகள் ஈர்வனவே 13

நலம் பாராட்டு

2491 ஈர்வன வேலும் அஞ்சேலும் * உயிர் மேல் மிளிர்ந்து இவையோ
பேர்வனவோ வல்ல * தெய்வ நல்வேள் கணை ** பேரொளியே
சோர்வன நீலச் சுடர் விடு மேனி அம்மான் * விசும்பூர்
தேர்வன * தெய்வமன்னீர கண்ணோ? இச்செழும் கயலே 14

தோழி தலைவனது கருத்தறிந்து உரைத்தல்

2492 கயலோ நும கண்கள்? என்று * களிறு வினவி நிற்றீர் *
அயலோர் அறியிலும் ஈதென்ன வார்த்தை? ** கடல் கவர்ந்த
புயலோடு உலாம் கொண்டல் வண்ணன் புன வேங்கடத்து எம்மொடும் *
பயலோவிலீர் * கொல்லை காக்கின்ற நாளும் பல பலவே 15

தலைவனைப் பிரிந்த தலைவி பாங்கியை நோக்கி இருள் வியந்துரைத்தல்

2493 பல பல ஊழிகள் ஆயிடும் * அன்றி ஓர் நாழிகையைப்
பல பல கூறிட்ட கூறாயிடும் ** கண்ணன் விண்ணனையாய்!
பல பல நாள் அன்பர் கூடிலும் நீங்கிலும் யாம் மெலிதும் *
பல பல சூழலுடைத்து * அம்ம! வாழி இப்பாயிருளே 16

தலைவி கடலை நோக்கித் தேர்வழி தூரல் என்றல்

2494 இருள் விரிந்தால் அன்ன * மாநீர்த் திரை கொண்டு வாழியரோ *
இருள் பிரிந்தார் அன்பர் தேர் வழி தூரல் ** அரவணை மேல்
இருள் விரி நீலக் கருநாயிறு சுடர் கால்வது போல் *
இருள் விரி சோதி * பெருமான் உறையும் எறிகடலே! 17

கால மயக்கு (நம்பிள்ளை நிர்வாஹம்)
கார் கண்டு நலிந்த தலைவியின் ஆற்றாமை கண்டு பாங்கி இரங்குதல் (வாதிகேஸரி ஜீயர் நிர்வாஹம்)

2495 கடல் கொண்டு எழுந்தது வானம் * அவ்வானத்தை அன்றிச் சென்று *
கடல் கொண்டு ஒழிந்த அதனால் இது ** கண்ணன் மண்ணும் விண்ணும்
கடல் கொண்டு எழுந்த அக்காலம் கொலோ? புயல் காலம் கொலோ? *
கடல் கொண்ட கண்ணீர் * அருவி செய்யா நிற்கும் காரிகையே[86] 18

செவிலி பழிக்கு இரங்குதல்; பாங்கி இரங்குதலுமாம்

2496 காரிகையார் நிறை காப்பவர் யார் என்று * கார் கொண்டு இன்னே
மாரிகை ஏறி * அறை இடும் காலத்தும் ** வாழியரோ
சாரிகைப் புள்ளர் அந்தண்ணந்துழாய் இறை கூயருளார் *
சேரிகை ஏரும் * பழியாய் விளைந்தது என் சின்மொழிக்கே 19

வெறி விலக்கு

2497 சின்மொழி நோயோ கழி பெருந்தெய்வம் * இந்நோய் இனதென்று
இன்மொழி கேட்கும் * இளந்தெய்வம் அன்றிது ** வேல! நில் நீ
என் மொழி கேண்மின் என் அம்மனைமீர்! * உலகு ஏழும் உண்டான்
சொல் மொழி * மாலை அந்தண்ணந்துழாய் கொண்டு சூட்டுமினே 20

ஏறுகோள் கூறி வரைவுகடாதல்

2498 [87]சூட்டு நன்மாலைகள் * தூயன ஏந்தி * விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி * அந்தூபம் தரா நிற்கவே அங்கு ** ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணை தொடுவுண்ணப் போந்திமில் ஏற்றுவன் கூன் *
கோட்டிடை ஆடினை கூத்து * அடல் ஆயர் தம் கொம்பினுக்கே 21

தோழி தலைவனை நகையாடுதல்

2499 கொம்பார் தழைகை * சிறு நாண் எறிவிலம் * வேட்டை கொண்டாட்டு
அம்பார் களிறு * வினவுவது ஐயர் ** புள் ஊரும் கள்வர்
தம் பாரகத்து என்றும் ஆடாதன தம்மில் கூடாதன *

---

[86] காரிகைக்கே
[87] இது திருமஞ்சன காலத்தில் சேவிக்கப்படுவது

வம்பார் வினாச் சொல்லவோ * எம்மை வைத்தது இவ்வான் புனத்தே 22

தலைவன் குரையுற உரைத்தல்

2500 புனமோ? புனத்தயலே * வழி போகும் அருவினையேன் *
மனமோ? மகளிர்! நும் காவல் சொல்லீர் ** புண்டரீகத்து அங்கேழ்
வனமோர் அனைய கண்ணான் கண்ணன் வாணாடு அமரும் * தெய்வத்
தினமோர் அனையீர்களாய் * இவையோ நும் இயல்வுகளே? 23

பிரிவு ஆற்றாத தலைவியின் ஈடுபாடு கண்ட செவிலி இரங்குதல்

2501 இயல்வு ஆயின * வஞ்ச நோய் கொண்டு உலாவும் * ஓரோ குடங்கைக்
கயல் பாய்வன * பெரு நீர்க் கண்கள் தம்மொடும் ** குன்றம் ஒன்றால்
புயல்வாயின நிரை காத்த புள்ளூர்திகள் ஊரும் துழாய்க் *
கொயல்வாய் மலர் மேல் * மனத்தொடு என்னாங்கொல் எங்கோல்
வளைக்கே? 24

தலைமகனது தாரில் ஈடுபட்ட தலைவி ஆற்றாது கூறுதல்

2502 எங்கோல் வளை முதலாக் * கண்ணன் மண்ணும் விண்ணும் அளிக்கும் *
செங்கோல் வளைவு விளைவிக்குமால் ** திறல் சேர் அமரர்
தங்கோனுடைய தங்கோன் உம்பர் எல்லாயவர்க்கும் தங்கோன் *
நங்கோன் உகக்கும் துழாய் * என் செய்யாது இனி நானிலத்தே? 25

நகர் காட்டுதல்

2503 நானிலம் வாய்க் கொண்டு * நன்னீர் அறம் என்று கோது கொண்ட *
வேனிலம் செல்வன் சுவைத்துமிழ் பாலை ** கடந்த பொன்னே!
கால்நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகாவுது * அம்பூந்
தேனிளம்[88] சோலை அப்பாலது * எப்பாலைக்கும் சேமத்ததே 26

தலைவி தார் பெற்று மகிழ்தல்

2504 சேமம் செங்கோன் அருளே * செருவாரும் நட்பு ஆகுவர் என்று *
ஏமம் பெற வையம் சொல்லும் மெய்யே ** பண்டு எல்லாம் அறை கூய்
யாமங்கள் தோறு எரி வீசும் நம் கண்ணன் அந்தண்ணந்துழாய்த் *
தாமம் புனைய * அவ்வாடை ஈதோ வந்து தண் என்றதே 27

தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி இரங்குதல்

---

[88] தேனலம்

2505 தண்ணன் துழாய் வளை கொள்வது யாம் இழப்போம் * நடுவே
வண்ணன் துழாவி * ஓர் வாடை உலாவும் ** வள்வாய் அலகால்
புள்ளந்துழாமே பொரு நீர்த் திருவரங்கா! அருளாய் *
எண்ணம் துழாவும் இடத்து * உளவோ பண்டும் இன்னன்னவே? 28

தலைவி அன்னத்தை வெறுத்துரைத்தல்

2506 இன்னன்ன தூது எம்மை * ஆளற்றப் பட்டிரந்தாள் இவள் என்று *
அன்னன்ன சொல்லாப் பெடையொடும் போய் வரும் ** நீலம் உண்ட
மின்னன்ன மேனிப் பெருமான் உலகில் பெண் தூது செல்லா *
அன்னன்ன நீர்மை கொலோ? * குடிச் சீர்மையில் அன்னங்களே ! 29

தலைவி அன்னங்களையும் வண்டானங்களையும் தூது வேண்டுதல்

2507 அன்னம் செல்வீரும் * வண்டானம் செல்வீரும் தொழுது இரந்தேன் *
முன்னம் செல்வீர்கள் மறவேன்மினோ ** கண்ணன் வைகுந்தனோடு
என் நெஞ்சினாரைக் கண்டால் என்னைச் சொல்லி * அவரிடை நீர்
இன்னம் செல்லீரோ? * இதுவோ தகவென்று இசைமின்களே! 30

தூது செல்லாத மேகங்களைக் குறித்துத் தலைவி இரங்குதல்

2508 இசைமின்கள் தூது என்று இசைத்தால் இசையிலம் * என் தலை மேல்
அசைமின்கள் என்றால் அசையுங்கொலாம்? ** அம்பொன் மாமணிகள்
திசைமின் மிளிரும் திருவேங்கடத்துவன் தாள் * சிமய
மிசை * மின் மிளிரிய போவான் வழிக் கொண்ட மேகங்களே ! 31

தலைவி போலி கண்டு உரைத்தல்

2509 மேகங்களோ! உரையீர் * திருமால் திருமேனி ஒக்கும் *
யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு பெற்றீர்? ** உயிர் அளிப்பான்
மாகங்கள் எல்லாம் திரிந்து நன்னீர்கள் சுமந்து * நுந்தம்
ஆகங்கள் நோவ * வருத்தும் தவமாம் அருள் பெற்றதே 32

தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி தலைவனை வெறுத்துரைத்தல்

2510 அருளார் திருச்சக்கரத்தால் * அகல் விசும்பும் நிலனும் *
இருளார் வினை கெடச் செங்கோல் நடாவுதிர் ** ஈங்கோர் பெண்பால்
பொருளோ எனும் இகழ்வோ? இவற்றின் புறத்தாள் என்று எண்ணோ? *
தெருளோம் அரவணையீர்! * இவள் மாமை சிதைக்கின்றதே 33

கூடலிழைத்து வருந்தும் தலைவி நிலையைப் பாங்கி தலைவற்கு உணர்த்தல்

2511 சிதைக்கின்ற தாழி என்று * ஆழியைச் சீறி * தன் சீறடியால்[89]
உதைக்கின்ற நாயகன் * தன்னொடு மாலே! ** உனது தண்தார்
ததைக்கின்ற தண்ணந்துழாய் அணிவான் அதுவே மனமாய்ப் *
பதைக்கின்ற மாதின் திறத்து * அறியேன் செயற்பாலதுவே 34

தலைவி மாலைக்கு ஆற்றாமையின் மேல் வாடைக்கு இரங்குதல்

2512 பால்வாய்ப் பிறைப் பிள்ளை * ஒக்கலைக் கொண்டு * பகல் இழந்த
மேல்பால் திசைப் பெண் * புலம்புறு மாலை ** உலகளந்த
மால்பால் துழாய்க்கு மனம் உடையார்க்கு நல்கிற்றை எல்லாம் *
சோல்வான் புகுந்து * இதுவோர் பனிவாடை துழாகின்றதே 35

தோழி தலைவன் கொடுமை கூறுதல்

2513 துழா நெடுஞ்சூழ் இருள் என்று * தந்தண்[90] தாரது பெயரா *
எழா நெடு ஊழி எழுந்த இக்காலத்தும் ** ஈங்கு இவளோ!
வழா நெடுந்துன்பத்தள் என்று இரங்கார் அம்மனோ! * இலங்கைக்
குழா நெடு மாடம் * இடித்த பிரானார் கொடுமைகளே! 36

நற்றாய் தன் மகள் சென்ற சுரத்தருமை கூறி இரங்குதல்

2514 கொடுங்கால் சிலையர் * நிரை கோள் உழவர் கொலையில் வெய்ய *
கடுங்கால் இளைஞர் துடி படும் கவ்வைத்து ** அருவினையேன்
நெடுங்காலமும் கண்ணன் நீள் மலர்ப் பாதம் பரவிப் பெற்ற *
தொடுங்கால் ஒசியும் இடை * இளமான் சென்ற சூழ் கடமே 37

தலைவனைப் பிரிந்த தலைவி போலி கண்டு மகிழ்தல்

2515 கடம் ஆயினகள் கழித்து * தன்[91] கால் வன்மையால் பல நாள்
தடம் ஆயின புக்கு * நீர் நிலை நின்ற தவம் இது கொல்? **
குடமாடி இம்மண்ணும் விண்ணும் குலுங்க உலகளந்து *
நடமாடிய பெருமான் * உருவொத்தன நீலங்களே 38

தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்கு கூறுதல்

2516 நீலத் தடவரை மேல் * புண்டரீக நெடுந்தடங்கள்
போல * பொலிந்து எமக்கு எல்லா இடத்தவும் ** பொங்கு முந்நீர்
ஞாலப் பிரான் விசும்புக்கும் பிரான் மற்றும் நல்லோர் பிரான் *
கோலம் கரிய பிரான் * எம்பிரான் கண்ணின் கோலங்களே 39

[89] சீரடியால்
[90] தன் தண்
[91] தம்

இருள் கண்டிரங்கிய தலைவி தோழிக்கு வரைவு விருப்புரைத்தல்

2517 கோலப் பகள் களிறு * ஒன்று கல்புய்ய * குழாம் விரிந்த
நீலக் கங்குல் * களிறெல்லாம் நிறைந்தன[92] ** நேரிழையீர் !
ஞாலப் பொன் மாதின் மணாளன் துழாய் நங்கள் சூழ்குழற்கே *
ஏலப்புனைந்து என்னைமார் * எம்மை நோக்குவது என்று கொலோ? 40

வாடைக்கு வருந்திய தலைமகள் வார்த்தை

2518 என்றும் புன் வாடை * இது கண்டறிதும் * இவ்வாறு வெம்மை
ஒன்றும் உருவும் சுவடும் தெரியிலம் ** ஓங்கசுரர்
பொன்றும் வகை புள்ளை ஊர்வான் அருள் அருளாத இந்நாள் *
மன்றில் நிறை பழி தூற்றி * நின்று என்னை[93] வன்காற்று அடுமே 41

தலைவி தலைவனது கண்ணழகில் ஈடுபட்டு வியந்துரைத்தல்

2519 வன்காற்று அறைய * ஒருங்கே மறிந்து கிடந்து அலர்ந்த *
மென்கால் கமலத் தடம் போள் பொலிந்தன ** மண்ணும் விண்ணும்
என்காற்கு அளவின்மை காண்மின் என்பான் ஒத்து வான் நிமிர்ந்த *
தன்காற்[94] பணிந்த என்பால் * எம்பிரான தடங்கண்களே 42

தலைவனது உருவெழில் உரைத்த தலைமகள் வார்த்தை

2520 கண்ணும் செந்தாமரை * கையும் அவை அடியோ அவையே *
வண்ணம் கரியதோர் மால் வரை போன்று ** மதி விகற்பால்
விண்ணும் கடந்து உம்பர் அப்பால் மிக்கு மற்று எப்பால் யவர்க்கும் *
எண்ணும் இடத்ததுவோ? * எம்பிரானது எழில் நிறமே 43

தலைவி தலைவனது பெருமை உரைத்தல்

2521 நிறமுயர் கோலமும் * பேரும் உருவும் இவை இவையென்று *
அறமுயல் ஞானச் சமயிகள் பேசிலும் ** அங்கு அங்கெல்லாம்
உறவுயர் ஞானச் சுடர் விளக்காய் நின்றதன்றி ஒன்றும் *
பெற முயன்றார் இல்லையால் * எம்பிரான பெருமையையே 44

தலைவி தலைவனது நீரிடை உதவியை நினைந்து உரைத்தல்

2522 பெரும் கேழலார் தம் * பெருங்கண் மலர்ப் புண்டரீகம் * நம் மேல்

---

[92] நிரந்தன
[93] எம்மை
[94] தன்பால்

ஒருங்கே பிறழ வைத்தார் இவ்வகாலம் ** ஒருவர் நம் போல்
வருங்கேழ்பவர் உளரே? தொல்லை வாழியம் சூழ் பிறப்பு *
மருங்கே வரப் பெறுமே? * சொல்லு வாழி மட நெஞ்சமே! 45

நெஞ்சை தூது விட்ட தலைவி இரங்குதல்

2523 மட நெஞ்சம் என்றும் தமது என்றும் * ஓர் கருமம் கருதி
விட நெஞ்சை உற்றார் விடவோ அமையும் ** அப்பொன் பெயரோன்
தடநெஞ்சம் கீண்ட பிரானார் தமது அடிக்கீழ் விடப் * போய்த்
திடநெஞ்சமாய் * எம்மை நீத்து இன்று தாறும் திரிகின்றதே 46

பிரிவாற்றாது வருந்தும் தலைவி நிலை கண்டு செவிலி இரங்குதல்

2524 திரிகின்றது வடமாருதம் * திங்கள் வெந்தீ முகந்து *
சொரிகின்றது அதுவும் அது ** கண்ணன் விண்ணூர் தொழவே
சரிகின்றது சங்கம் தண்ணந்துழாய்க்கு வண்ணம் பயலை *
விரிகின்றது முழு மெய்யும் * என்னாங்கொல் என் மெல்லியற்கே? 47

நன்னிமித்தம் கண்டு தான் ஆறி இருத்தலைத் தலைவி தோழிக்குக் கூறுதல்

2525 மெல்லியல் ஆக்கைக் கிருமி * குருவில் மிளிர் தந்து ஆங்கே
செல்லிய செல்கைத்து * உலகை என் காணும்? ** என்னாலும் தன்னைச்
சொல்லிய சூழல் திருமால் அவன் கவி யாது கற்றேன் *
பல்லியின் சொல்லும் சொல்லா * கொள்வதோ உண்டு பண்டு பண்டே 48

இருளுக்கு ஆற்றாத தலைவி தோழிக்குக் கூறுதல்

2526 பண்டும் பல பல * வீங்கிருள் காண்டும் * இப்பாயிருள் போல்
கண்டும் அறிவதும் * கேட்பதும் யாமிலம் ** காள வண்ண
வண்டுண் துழாய்ப் பெருமான் மதுசூதனன் தாமோதரன் *
உண்டும் உமிழ்ந்தும் கடாய * மண்ணேரன்ன ஒண்ணுதலே! 49

தலைவன் மீண்டு வருகையில் பாகனொடு கூறுதல்

2527 ஒண்ணுதல் மாமை * ஒளி பயவாமை * விரைந்து நந்தேர்
நண்ணுதல் வேண்டும் * வலவ! கடாகின்று ** தேன் நவின்ற
விண் முதல் நாயகன் நீள்முடி வெண்முத்த வாசிகைத்தாய் *
மண் முதல் சேர்வுற்று * அருவி செய்யா நிற்கும் மாமலைக்கே 50

கடலோசைக்கு ஆற்றாத தலைவி இரங்குதல்

2528 மலை கொண்டு மத்தா அரவால் சுழற்றிய மாயப் பிரான் *
அலை கண்டு கொண்ட அமுதம் கொள்ளாது கடல் ** பரதர்

விலை கொண்டு தந்த சங்கம் இவை வேரித் துழாய் துணையாத் *
துலை கொண்டு தாயம் கிளர்ந்து * கொள்வான் ஒத்து அழைக்கின்றதே 51

கால மயக்கு

2529 அழைக்கும் கருங்கடல் * வெண்திரைக் கைக்[95] கொண்டு போய் * அலர் வாய்
மழைக்கண் மடந்தை * அரவணை ஏற ** மண்மாதர் விண்வாய்
அழைத்துப் புலம்பி முலை மலை மேல் நின்றும் ஆறுகளாய் *
மழைக் கண்ண நீர் * திருமால் கொடியான் என்று வார்கின்றதே! 52

கட்டுவிச்சி கூறுதல்

2530 வாராயின முலையாள் இவள் * வானோர் தலைமகனாம் *
சீராயின தெய்வ நன்னோய் இது ** தெய்வத் தண்ணந்துழாய்த்
தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் * கீழ்
வேராயினும் * நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே 53

வண்டு விடுதூது

2531 வீசும் சிறகால் பறத்திர் * விண்ணாடு நுங்கட்கு எளிது *
பேசும்படி அன்ன பேசியும் போவது ** நெய் தொடுவுண்டு
ஏசும்படி அன்ன செய்யும் எம் ஈசர் விண்ணோர் பிரானார் *
மாசில் மலரடிக் கீழ் * எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே! 54

நலம் பாராட்டு

2532 வண்டுகளோ! வம்மின் * நீர்ப்பூ நிலப்பூ மரத்தில் ஒண்பூ *
உண்டு களித்து உழல்வீர்க்கு ஒன்று உரைக்கியம் ** ஏனம் ஒன்றாய்
மண் துகளாடி வைகுந்தம் அன்னாள் குழல்வாய் விரை போல் *
விண்டுகள் வாரும் * மலர் உளவோ நும் வியலிடத்தே? 55

தலைவன் இரவிடைக் கலந்தமையைத் தலைவி தோழிக்கு உரைத்தல்

2533 வியலிடம் உண்ட பிரானார் விடுத்த திருவருளால் *
உயலிடம் பெற்று உய்ந்தம் அஞ்சலம் தோழி! ** ஓர் தண்தென்றல் வந்து
அயலிடை யாரும் அறிந்திலர் அம்பூந்துழாயின் இன்தேன் *
புயலுடை நீர்மையினால் * தடவிற்று என் புலன்[96] கலனே 56

தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்

---

[95] வெண்டிரைக்கே
[96] பொலன்

2534 புலக்குண்டலப்[97] * புண்டரீகத்த போர்க் கெண்டை * வல்லி ஒன்றால்
விலக்குண்டு உலாகின்று * வேல் விழிக்கின்றன ** கண்ணன் கையால்
மலக்குண்டு அமுதம் சுரந்த மறி கடல் போன்றவற்றால் *
கலக்குண்ட நான்று கண்டார் * எம்மை யாரும் கழறலரே 57

தோழி தலைவன் பெருமையை உரைத்துத் தலைவியை ஆற்றுதல்

2535 கழல் தலம் ஒன்றே நில முழுதாயிற்று * ஒரு கழல் போய்
நிழல் தர * எல்லா விசும்பும் நிறைந்தது ** நீண்ட அண்டத்து
உழறலர் ஞானச் சுடர் விளக்காய் உயர்ந்தோரை இல்லா *
அழறலர் தாமரைக் கண்ணன் * என்னோ இங்கு அளக்கின்றதே? 58

இரவு நீடுதற்கு ஆற்றாத தலைவியைப் பற்றிச் செவிலி இரங்குதல்

2536 அளப்பரும் தன்மைய * ஊழியம் கங்குல் * அந்தண்ணந்துழாய்க்கு
உளப்பெரும் காதலின் * நீளிய வாயுள ** ஓங்கு முந்நீர்
வளப்பெரு நாடன் மதுசூதனன் என்னும் வல்வினையேன் *
தளப்பெரு நீள் முறுவல் * செய்ய வாய தட முலையே 59

தலைமகள் இளமைக்குச் செவிலி இரங்குதல்

2537 * முலையோ முழு முற்றும் போந்தில * மொய்பூம் குழல் குறிய
கலையோ அரையில்லை * நாவோ குழறும் ** கடல் மண்ணெல்லாம்
விலையோ என மிளிரும் கண் இவள் பரமே? * பெருமான்
மலையோ * திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகமே 60

தோழி தலைவனது நீர்மையைத் தலைவிக்குக் கூறுதல்

2538 வாசகம் செய்வது நம் பரமே? * தொல்லை வானவர் தம்
நாயகன் * நாயகரெல்லாம் தொழும் அவன் ** ஞால முற்றும்
வேயகம் ஆயினும் சோரா வகை * இரண்டே அடியால்
தாயவன் * ஆய்க்குலமாய் வந்து தோன்றிற்று நம் இறையே 61

தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்

2539 இறையோ இரக்கினும் * ஈங்கோர் பெண்பால் எனவும் இரங்காது *
அறையோ! என நின்றதிரும் கருங்கடல் ** ஈங்கு இவள் தன்
நிறையோ இனி உன் திருவருளால் அன்றிக் * காப்பரிதால்
முறையோ? * அரவணை மேல் பள்ளி கொண்ட முகில் வண்ணனே 62

---

[97] பொலக்குண்டலப்

தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிதல்

2540 வண்ணம் சிவந்துள * வானாடு அமரும் குளிர் விழிய *
தண்மென் கமலத்தடம் போல் பொலிந்தன ** தாம் இவையோ
கண்ணன் திருமால் திருமுகம் தன்னொடும் காதல் செய்தேற்கு *
எண்ணம் புகுந்து * அடியேனொடு இக்காலம் இருக்கின்றதே 63

தலைவன் பேர் கூறித் தரித்திருத்தலைத் தலைவி தோழிக்குக் கூறி இரங்கல்

2541 இருக்கார் மொழியால் * நெறி இழுக்காமை * உலகளந்த
திருத்தாள் இணை * நிலத் தேவர் வணங்குவர் ** யாமும் அவா
ஒருக்கா வினையொடும் எம்மொடும் நொந்து கனியின்மையின் *
கருக்காய் கடிப்பவர் போல் * திருநாமச் சொல் கற்றனமே 64

தலைமகள் நோக்கில் ஈடுபட்ட தலைவன் பாங்கனொடு கூறுதல்

2542 கற்றுப் பிணை மலர்க் * கண்ணின் குலம் வென்று * ஓரோ கருமம்
உற்றுப் பயின்று * செவியொடு உசாவி ** உலகம் எல்லாம்
முற்றும் விழுங்கி உமிழ்ந்த பிரானார் திருவடிக் கீழ் *
உற்றும் உறாதும் * மிளிர்ந்த கண்ணாய் எம்மை உண்கின்றவே 65

தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்

2543 உண்ணாது உறங்காது * உணர்வுறும் எத்தனை யோகியர்க்கும் *
எண்ணாய் மிளிரும் இயல்வினவாம் ** எரி நீர் வளி வான்
மண்ணாகிய எம்பெருமான் தனது வைகுந்தம் அந்நாள் *
கண்ணாய் அருவினையேன் * உயிராயின காவிகளே 66

தலைவன் பாங்கனுக்குத் தன் வலியழிவு உரைத்தல்

2544 காவியும் நீலமும் * வேலும் கயலும் பல பல என்று *
ஆவியின் தன்மை அளவல்ல பாரிப்பு ** அசுரைச்[98] செற்ற
மாவியம் புள் வல்ல மாதவன் கோவிந்தன் வேங்கடம் சேர் *
தூவியம் பேடை அந்நாள் * கண்களாய துணை மலரே 67

கால மயக்கு

2545 மலர்ந்தே ஒழிந்தில * மாலையும் மாலைப்பொன் வாசிகையும் *
புலம் தோய் தழைப் பந்தர் தண்டுற நாற்றி ** பொருகடல் சூழ்
நிலம் தாவிய எம்பெருமான் தனது வைகுந்தமன்னாய்! *
கலந்தார் வர எதிர் கொண்டு * வன்கொன்றைகள் கார்த்தனவே 68

[98] அசுரர்ச்

மாலைக்கு இரங்கிய தலைவியைத் தோழி ஆற்றுதல்

2546 காரேற்றிருள் செகிலேற்றின் * சுடருக்கு உளைந்து * வெல்வான்
போரேற்றெதிர்ந்தது * புன் தலை மாலை ** புவனி எல்லாம்
நீரேற்று அளந்த நெடிய பிரான் அருளா விடுமே? *
வாரேற்றிள முலையாய்! * வருந்தேல் உன் வளைத் திறமே 69

தலைவி இரவின் நெடுமைக்கு இரங்குதல்

2547 வளைவாய்த் திருச்சக்கரத்து * எங்கள் வானவனார் முடி மேல் *
தளைவாய் நறுங்கண்ணித் தண்ணன் துழாய்க்கு வண்ணம் பயலை **
விளைவான் மிக வந்து நாள் திங்கள் ஆண்டு ஊழி நிற்க * எம்மை
உளைவான் புகுந்து * இது ஓர் கங்குல் ஆயிரம் ஊழிகளே 70

செவிலி வெறுத்தலைத் தலைவி தோழியர்க்கு உரைத்தல்

2548 ஊழிகளாய் உலகேழும் உண்டான் என்றிலம் * பழங்கண்டு
ஆழி * களாம் பழ வண்ணம் என்றேற்கு ** அஃதே கொண்டு அன்னை
நாழிவளோ என்னும் ஞாலம் உண்டான் வண்ணம் சொல்லிற்று என்னும் *
தோழிகளோ! உரையீர் * எம்மை அம்மனை சூழ்கின்றவே 71

இருளுக்கு ஆற்றாத தலைவி இளம்பிறை கண்டு தளர்ந்து உரைத்தல்

2549 சூழ்கின்ற கங்குல் * சுருங்கா இருளின் கருந்திணிம்பை *
போழ்கின்ற திங்கள் அம்பிள்ளையும் போழ்க ** துழாய் மலர்க்கே
தாழ்கின்ற நெஞ்சத்து ஒரு தமியாட்டியேன் மாமைக்கு இன்று *
வாழ்கின்றவாறு இதுவோ? * வந்து தோன்றிற்று வாலியதே 72

பிறையுடை மாலைக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சிக்குப் பாங்கி இரங்குதல்

2550 வால் வெண்ணிலவு உலகாரச் சுரக்கும் வெண்திங்கள் என்னும் *
பால் விண் சுரவி சுரமுதிர் மாலை ** பரிதி வட்டம்
போலும் சுடர் அடலாழிப் பிரான் பொழில் ஏழளிக்கும் *
சால்பின் தகைமை கொலாம்? * தமியாட்டி தளர்ந்ததுவே 73

தலைவனது தார்மணம் கொண்டு வரும் தென்றலைத் தலைவி மகிழ்ந்து உரைத்தல்

2551 தளர்ந்தும் முறிந்தும் * வரு திரைப் பாயல் * திரு நெடுங்கண்
வளர்ந்தும் அறிவுற்றும் * வையம் விழுங்கியும் ** மால் வரையைக்
கிளர்ந்துமறி தரக் கீண்டெடுத்தான் முடி சூடு துழாய் *
அளைந்துண் சிறு பசுந்தென்றல் * அந்தோ! வந்து உலாகின்றதே 74

மதியுடம்படுக்கலுற்ற தலைவன் தலைவி தோழியரைப் பதிவினாதல்

2552 உலாகின்ற கெண்டை ஒளி அம்பு * எம் ஆவியை ஊடுருவக்
குலாகின்ற வெஞ்சிலை வாள் முகத்தீர்! ** குனி சங்கிடறிப்
புலாகின்ற வேலைப் புணரி அம்பள்ளி அம்மான் * அடியார்
நிலாகின்ற வைகுந்தமோ? * வையமோ? நும் நிலை இடமே 75

மாலை பெறாது வருந்தும் தலைவி மதிக்கு வருந்தி நெஞ்சொடு கூறுதல்

2553 இடம் போய் விரிந்து * இவ்வுலகளந்தான் எழிலார் தண்துழாய் *
வடம் போதினையும் மட நெஞ்சமே! ** நங்கள் வெள்வளைக்கே
விடம் போல் விரிதல் இது வியப்பே? வியன் தாமரையின் *
தடம் போது ஒடுங்க * மெல்லாம்பல் அலர்விக்கும் வெண்திங்களே 76

தலைவி மாலைப் பொழுது கண்டு வருந்துதல்

2554 திங்களம்பிள்ளை புலம்ப * தன் செங்கோல் அரசு பட்ட
செங்களம் பற்றி * நின்றெள்கு புன்மாலை ** தென்பால் இலங்கை
வெங்களம் செய்த நம் விண்ணோர் பிரானார் துழாய் துணையா *
நங்களை மாமை கொள்வான் * வந்து தோன்றி நலிகின்றதே 77

பிரிவாற்றாத தலைவி தலைவன் ஆற்றலைக் கருதி நெஞ்சழிந்து இரங்குதல்

2555 நலியும் நரகனை வீட்டிற்றும் * வாணன் திண்தோள் துணித்த
வலியும் பெருமையும் * யாம் சொல்லும் நீர்த்தல்ல ** மை வரை போல்
பொலியும் உருவிற் பிரானார் புனை பூந்துழாய் மலர்க்கே *
மெலியும் மட நெஞ்சினார் * தந்து போயின வேதனையே 78

தலைவனைப் பிரியாத மகளிரது சிறப்பைக் கூறித் தலைவி இரங்குதல்

2556 வேதனை * வெண்புரி நூலனை * விண்ணோர் பரவ நின்ற
நாதனை * ஞாலம் விழுங்கும் அநாதனை ** ஞாலந்தத்தும்
பாதனைப் பாற்கடல் பாம்பணை மேல் பள்ளி கொண்டு அருளும் *
சீதனையே தொழுவார் * விண்ணுளாரிலும் சீரியரே 79

பிரிவாற்றாத தலைவி மாலைப் பொழுது கண்டு இரங்குதல்

2557 சீர் அரசாண்டு தன் செங்கோல் * சில நாள் செலீஇக்கழிந்த *
பார் அரசு ஒத்து மறைந்தது நாயிறு ** பாரளந்த
பேரரசே! எம் விசும்பரசே! எம்மை நீத்து வஞ்சித்த *
ஓரரசே! அருளாய் * இருளாய் வந்து உறுகின்றதே 80

வெறி விலக்குவிக்க நினைந்த தோழி இரங்குதல்

2558 உருகின்ற கன்மங்கள் * மேலன ஓர்ப்பிலராய் * இவளைப்
பெருகின்ற தாயர் * மெய் நொந்து பெறார் கொல்? ** துழாய் குழல் வாய்த்
துறுகின்றிலர் தொல்லை வேங்கடமாட்டவும் சூழ்கின்றிலர் *
இருகின்றதால் இவள் ஆகம் * மெல்லாவி எரி கொள்ளவே 81

உருவெளிப்பாடு கண்ட தலைவி தலைவன் கண்ணழகுக்கு இரங்குதல்

2559 எரி கொள் செந்நாயிறு * இரண்டுடனே உதயம் மலை வாய் *
விரிகின்ற வண்ணத்த எம்பெருமான் கண்கள் ** மீண்டு அவற்றுள்
எரி கொள் செந்தீ வீழசுரரைப் போல எம்போலியர்க்கும் *
விரிவ சொல்லீர் இதுவோ? * வையம் முற்றும் விளரியதே 82

அன்றிலின் குரலுக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சி கண்டு தோழி இரங்குதல்

2560 விளரிக் குரல் அன்றில் * மென்படை மேகின்ற முன்றில் பெண்ணை *
முளரிக் குரம்பை இது இதுவாக ** முகில் வண்ணன் பேர்
கிளரிக் கிளரிப் பிதற்றும் மெல்லாவியும் நைவும் எல்லாம் *
தளரில் கொலோ? அறியேன் * உய்யலாவது இத்தையலுக்கே 83

தலைவி தலைவனைக் காண விரைதல்

2561 தையல் நல்லார்கள் * குழாங்கள் குழிய குழுவின் உள்ளும் *
ஐய நல்லார்கள் குழிய விழவினும் ** அங்கு அங்கெல்லாம்
கைய பொன்னாழி வெண்சங்கொடும் காண்பான் அவாவுவன் நான் *
மைய வண்ணா! மணியே! * முத்தமே! என்தன் மாணிக்கமே! 84

மாலைப் பொழுது கண்டு வருந்திய தலைவி இரங்குதல்

2562 மாணிக்கம் கொண்டு * குரங்கெறி ஒத்து இருளோடு முட்டி *
ஆணிப்பொன் அன்ன சுடர் படு மாலை ** உலகளந்த
மாணிக்கமே! என் மரதகமே! மற்றொப்பாரை இல்லா *
ஆணிப் பொன்னே! * அடியேனடி[99] ஆவி அடைக்கலமே! 85

தலைவனைப் பிரிந்த தலைவி இரங்குதல்

2563 அடைக்கலத்து ஓங்கு கமலத்து அலர் அயன் சென்னி என்னும் *
முடைக் கலத்தூண் முன் அரனுக்கு நீக்கியை ** ஆழி சங்கம்
படைக்கலம் ஏந்தியை வெண்ணெய்க்கு அன்று ஆய்ச்சி வன்தாம்புகளால் *
புடைக்கு அலந்தானை[100] எம்மானை * என் சொல்லிப் புலம்புவனே? 86

[99] அடியேனுடை
[100] அலர்ந்தானை

அன்றிற்கும் ஆழிக்கும் ஆற்றாத தலைவிக்குத் தோழி இரங்குதல்

2564 புலம்பும் கனகுரல்[101] * போழ்வாய அன்றிலும் * பூங்கழி பாய்ந்து
அலம்பும் கனகுரல் * சூழ் திரை ஆழியும் ** ஆங்கு அவை நின்
வலம்புள்ளது நலம் பாடும் இது குற்றமாக * வையம்
சிலம்பும்படி செய்வதே? * திருமால் இத்திருவினையே 87

போலி கண்டு அழிகிற தலைவி ஆற்றாமைக்கு இரங்குதல்

2565 திருமால் உருவொக்கும் மேரு * அம்மேருவில் செஞ்சுடரோன் *
திருமால் திருக்கைத் திருச்சக்கரம் ஒக்கும் ** அன்ன கண்டும்
திருமால் உருவோடு அவன் சின்னமே பிதற்றா நிற்பது ஓர் *
திருமால் தலைக்கொண்ட நங்கட்கு * எங்கே வரும் தீவினையே? 88

தலைவன் கலவிக்கு விரைகிற தலைவி இரங்குதல்

2566 தீவினைக்கு அரு நஞ்சை * நல்வினைக்கு இன்னமுதத்தினை *
பூவினை மேவிய தேவி மணாளனை ** புன்மை எள்காது
ஆவினை மேய்க்கும் வல்லாயனை அன்றுலகு ஈரடியால் *
தாவின ஏற்றை எம்மானை * எஞ்ஞான்று தலைப்பெய்வனே? 89

தலைவனைப் பிரிந்த தலைவி காலநீட்டிப்புக்கு ஆற்றாது உரைத்தல்

2567 தலைப்பெய்து யான் உன் திருவடிச் சூடும் தகைமையினால் *
நிலைப்பெய்த ஆக்கைக்கு நோற்ற இம்மாயமும் ** மாயம் செவ்வே
நிலைப்பெய்திலாத நிலைமையும் காண்தோறு அசுரர் குழாம் *
தொலைப்பெய்த நேமி எந்தாய்! * தொல்லை ஊழி சுருங்கலதே 90

தோழிக்குத் தலைவி தன் கற்புணர்த்தி அறத்தொடு நிற்றல்

2568 சுருங்குறி வெண்ணெய் தொடு உண்ட கள்வனை * வையம் முற்றும்
ஒருங்குற உண்ட * பெரு வயிற்றாளனை ** மாவலி மாட்டு
இருங்குறளாகி இசைய ஓர் மூவடி வேண்டிச் சென்ற *
பெருங்கிறியானை அல்லால் * அடியேன் நெஞ்சம் பேணலதே 91

வேந்தற்குற்றுழிப் பிரிவில் தலைவனைக் குறித்துத் தலைவி இரங்குதல்

2569 பேணலம் இல்லா அரக்கர் முந்நீர பெரும் பதிவாய் *
நீள்நகர் நீளெரி வைத்தருளாய் என்று ** நின்னை விண்ணோர்
தாள் நிலம் தோய்ந்து தொழுவர் நின் மூர்த்தி பல் கூற்றிலொன்று *
காணலுமாங்கொல்? என்றே * வைகல் மாலையும் காலையுமே 92

---
[101] கனைகுரல்

இருள் கண்டு அஞ்சுகிற தலைவி தோழி செவிலியரை வெறுத்தல்

2570 காலை வெய்யோற்கு முன்னோட்டுக் கொடுத்த கங்குல் குறும்பர் *
மாலை வெய்யோன் பட * வையகம் பாவுவர் ** அன்ன கண்டும்
காலை நல்ஞானத் துறை படிந்தாடிக் கண் போது செய்து *
மாலை நல்நாவில் கொள்ளார் * நினையார் அவன் மைப்படியே 93

தலைவியைக் கண்ட பாங்கன் தலைவனை அடுத்து வியந்து கூறுதல்

2571 மைப்படி மேனியும் * செந்தாமரைக் கண்ணும் வைதிகரே *
மெய்ப்படியால் உன் திருவடிச் சூடும் தகைமையினார் **
எப்படி ஊராமிலைக்கக் குருட்டாமிலைக்கும் என்னும் *
அப்படி யானும் சொன்னேன் * அடியேன் மற்று யாதென்பனே? 94

தலைவி அறத்தொடு நிற்கத் துணிதல்

2572 * யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு * அங்கு ஆப்புண்டும் ஆப்பவிழ்ந்தும் *
மூதாவியில் தடுமாறும் உயிர் முன்னமே ** அதனால்
யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல் வீடு செய்யும் *
மாதாவினைப் பிதுவை * திருமாலை வணங்குவனே 95

தலைவி வெறி விலக்குவிக்க நினைத்தல்

2573 வணங்கும் துறைகள் பல பல ஆக்கி * மதி விகற்பால்
பிணங்கும் சமயம் * பல பல ஆக்கி ** அவை அவை தோறு
அணங்கும் பல பல ஆக்கி நின் மூர்த்தி பரப்பி வைத்தாய் *
இணங்கு நின்னோரை இல்லாய்! * நின்கண் வேட்கை எழுவிப்பனே 96

தலைவன் பிரிவில் துயில் கொள்ளாத தலைவி இரங்குதல்

2574 எழுவதும் மீண்டே படுவதும் பட்டு * எனை ஊழிகள் போய்க்
கழிவதும் கண்டு கண்டு எள்கல் அல்லால் ** இமையோர்கள் குழாம்
தொழுவதும் சூழ்வதும் செய் தொல்லை மாலைக் கண்ணாரக் கண்டு *
கழிவதோர் காதல் உற்றார்க்கும் * உண்டோ கண்கள் துஞ்சுதலே? 97

தலைவனது அருமை நினைத்து கவல்கிற தலைவிக்குத் தோழி கூறுதல்

2576 துஞ்சா முனிவரும் * அல்லாதவரும் தொடர நின்ற *
எஞ்சாப் பிறவி இடர் கடிவான் ** இமையோர் தமக்கும்
தன் சார்வு [102] இலாத தனிப்பெரு மூர்த்தி தன் மாயம் செவ்வே *
நெஞ்சால் நினைப்பரிதால் * வெண்ணெய் ஊணென்னும் ஈனச் சொல்லே 98

[102] தஞ்சார்வு/தன் சால்பு

தலைவி தனக்குத் தலைவனிடத்துள்ள அன்புறுதியைத் தோழிக்குக் கூறுதல்

2576 * ஈனச் சொல் ஆயினுமாக * எறி திரை வையம் முற்றும் *
ஏனத்து உருவாய் இடந்த பிரான் ** இருங்கற்பகம் சேர்
வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் *
ஞானப் பிரானை அல்லால் இல்லை * நான் கண்ட நல்லதுவே 99

நூற்பயன்

2577 * நல்லார் நவில் குருகூர் நகரான் * திருமால் திருப்பேர்
வல்லார் * அடிக்கண்ணி சூடிய ** மாறன் விண்ணப்பம் செய்த
சொல்லார் தொடையல் இந்நூறும் வல்லார் அழுந்தார் பிறப்பாம் *
பொல்லா அருவினை * மாயவன் சேற்று அள்ளல் பொய்ந்நிலத்தே 100

தசக அடிவரவு: பொய் அரியன சூட்டு இசை என்றும் மலை வாசகம் ஊழி உறுகின்ற சுருங்கு செக்கர்

நம்மாழ்வார் திருவடிகளே ஷரணம்

நம்மாழ்வார் அருளிச் செய்த
யஜுர் வேத ஸாரமான

திருவாசிரியம்

திருவாசிரியம் தனியன்

அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்தது

காசினியோர் தாம் வாழக் கலியுகத்தே வந்துதித்து *
ஆசிரியப் பாவதனால் அருமறை நூல் விரித்தானைத் *
தேசிகனைப் பராங்குசனைத் திகழ் வகுளத் தாரானை *
மாசடையா மனத்து வைத்து மறவாமல் வாழ்த்துதுமே

நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாசிரியம்

2578 * செக்கர்மா முகில் உடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதி சூடி * அஞ்சுடர் மதியம் பூண்டு *

பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய் *
திகழ் பசுஞ்சோதி மரகதக் குன்றம் *
கடலோன் கைமிசைக் கண் வளர்வது போல் *
பீதகவாடை முடி பூண் முதலா *
மேதகு[103] பல்கலன் அணிந்து * சோதி
வாயவும் கண்ணவும் சிவப்ப * மீதிட்டுப்
பச்சை மேனி மிகப் பகைப்ப *
நச்சு வினைக் கவர் தலை அரவின் அமளி ஏறி *
எறிகடல் நடுவுள் அறிதுயில் அமர்ந்து *
சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர் *
தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த *
தாமரை உந்தி தனிப் பெரும் நாயக! *
மூவுலகளந்த சேவடியோயே! 1

2579 உலகு படைத்துண்ட எந்தை * அறை கழல்
சுடர்ப் பூந்தாமரை சூடுதற்கு * அவாவா
ருயிர் உருகி உக்க * நேரிய காதல்
அன்பில் இன்பு ஈன் தேறல் * அமுத
வெள்ளத்தானாம் சிறப்பு விட்டு * ஒரு பொருட்கு
அசைவோர் அசைக * திருவொடு மருவிய
இயற்கை * மாயாப் பெரு விறல் உலகம்
மூன்றினோடு நல்வீடு பெறினும் *
கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே? 2

2580 குறிப்பில் கொண்டு நெறிப்பட * உலகம்
மூன்றுடன் வணங்கு தோன்று புகழ் ஆணை *
மெய் பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வனாகி * சுடர் விளங்ககலத்து *
வரை புரை திரை பொர[104] பெரு வரை வெருவர[105] *
உருமுரல் ஒலி மலி நளிர் கடல் படவர
வரசு உடல் தட வரை சுழற்றிய * தனிமாத்
தெய்வத்து அடியவர்க்கு இனி நாம் ஆளாகாவே
இசையும் கொல்? * ஊழிதோறூழி ஓவாதே 3

2581 ஊழிதோறூழி ஓவாது * வாழிய
என்று யாம் தொழ இசையும் கொல்? *
யாவகை உலகமும் யாவரும் இல்லா *
மேல் வரும் பெரும் பாழ் காலத்து * இரும் பொருட்
கெல்லாம் அரும்பெறல் தனி வித்து * ஒரு தான்

[103] மெய்தகு
[104] பொரு
[105] வெருவுற

ஆகித் தெய்வ நான்முகக் கொழுமுளை
ஈன்று * முக்கண் ஈசனொடு தேவு பல
நுதலி * மூவுலகம் விளைத்த உந்தி *
மாயக் கடவுள் மாமுதல் அடியே 4

2582 மாமுதல் அடிப் போது ஒன்று கவிழ்த்தலர்த்தி *
மண் முழுதும் அகப்படுத்து * ஒண் சுடர் அடிப் போது
ஒன்று விண் செலீஇ * நான்முகப் புத்தேள்
நாடு வியந்துவப்ப * வானவர் முறை முறை
வழிபட நெறீஇ * தாமரைக் காடு
மலர்க் கண்ணொடு கனி வாய் உடையது
மாய் * இருநாயிறு ஆயிரம் மலர்ந்தன்ன *
கற்பகக் காவு பற்பலவன்ன *
முடி தோள் ஆயிரம் தழைத்த *
நெடியோய்க்கு அல்லதும்[106] அடியதோ உலகே? 5

2583 ஓஓ! உலகினது இயல்வே! * ஈன்றோள் இருக்க
மணை நீராட்டி * படைத்திடந்து உண்டுமிழ்ந்
தளந்து * தேர்ந்து உலகளிக்கும் முதற்பெரும்
கடவுள் நிற்ப * புடைப் பல தான் அறி
தெய்வம் பேணுதல் * தனாது
புல்லறிவு ஆண்மை பொருந்தக் காட்டி *
கொல்வன முதலா அல்லன முயலும் *
இனைய செய்கை இன்ப துன்பளி *
தொல்மா மாயப் பிறவியுள் நீங்கா *
பல்மா மாயத்து அழுந்துமா நளிர்ந்தே 6

2584 * நளிர் மதிச் சடையனும் நான்முகக் கடவுளும் *
தளிர் ஒளி இமையவர் தலைவனும் முதலா *
யாவகை உலகமும் யாவரும் அகப்பட *
நிலம் நீர் தீ கால் சுடர் இருவிசும்பும் *
மலர் சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க *
ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதும்
அகப்படக் கரந்து * ஓர் ஆலிலைச் சேர்ந்த எம்
பெருமா மாயனை அல்லது *
ஒருமா தெய்வம் மற்றுடையமோ யாமே? 7

அடிவரவு: செக்கர் உலகு குறிப்பு ஊழி மாமுதல் ஓஓஉலகு நளிர் முயற்றி

[106] அல்லது

நம்மாழ்வார் அருளிச் செய்த
அதர்வணவேத ஸாரமான

பெரிய திருவந்தாதி

பெரிய திருவந்தாதி தனியன்
(எம்பெருமானார் அருளிச் செய்தது)

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்துரைத்து *
வந்தித்து வாயார வாழ்த்தி[107] * - சந்த
முருகூரும் சோலை சூழ் மொய்பூம் பொருநல் *
குருகூரன் மாறன் பேர் கூறு

நம்மாழ்வார் அருளிச் செய்த
அதர்வணவேத ஸாரமான

பெரிய திருவந்தாதி

2585 ***** முயற்றி சுமந்து எழுந்து * முந்துற்ற நெஞ்சே! *
இயற்றுவாய் எம்மொடு நீ கூடி ** - நயப்புடைய
நாவீன் தொடை[108] கிளவி * உள் பொதிவோம் * நற்பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ் 1

2586 புகழ்வோம் பழிப்போம் * புகழோம் பழியோம் *
இகழ்வோம் மதிப்போம் * மதியோம் - இகழோம் ** மற்று
எங்கள் மால்! செங்கண் மால்! * சீறல் நீ தீவினையோம் *
எங்கள் மால் கண்டாய் இவை 2

2587 இவை அன்றே நல்ல * இவை அன்றே தீய *
இவை என்றிவை அறிவனேலும் ** - இவை எல்லாம்
என்னால் அடைப்பு நீக்க * ஒண்ணாது இறையவனே! *
என்னால் செயற்பாலது என்? 3

2588 என்னின் மிகு புகழார் யாவரே? * பின்னையும் மற்று
எண்ணில் * மிகு புகழேன் யான் அல்லால் ** - என்ன
கருஞ்சோதிக் * கண்ணன் கடல் புரையும் * சீலப்
பெருஞ்சோதிக்கு என் நெஞ்சு ஆள்பெற்று 4

[107] வாழ்த்தியே
[108] தொடைக்

2589 பெற்ற தாய் நீயே * பிறப்பித்த தந்தை நீ *
மற்றையார் ஆவாரும் நீ பேசில் ** - எற்றேயோ!
மாய! மாமாயவளை * மாய முலை வாய் வைத்த *
நீ அம்மா! காட்டும் நெறி 5

2590 நெறி காட்டி நீக்குதியோ? * நின் பால் கருமா
முறிமேனி காட்டுதியோ? ** மேல் நாள் - அறியோமை *
என் செய்வான் எண்ணினாய்? கண்ணனே! * ஈது உரையாய்
என் செய்தால் என் படோம் யாம்? 6

2591 யாமே அருவினையோம் சேயோம் * என் நெஞ்சினார்
தாமே * அணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார் ** - பூமேய
செம்மாதை * நின் மார்வில் சேர்வித்து * பாரிடந்த
அம்மா! நின் பாதத்தருகு 7

2592 அருகும் சுவடும் தெரிவுணரோம் * அன்பே
பெருகும் மிக * இதுவென்? பேசீர் ** - பருகலாம்
பண்புடையீர்! பாரளந்தீர்! * பாவியேம் கண் காண்பரிய *
நுண்புடையீர்! நும்மை நுமக்கு 8

2593 நுமக்கடியோம் என்றென்று * நொந்துரைத்து என்? * மாலார்
தமக்கு அவர் தாம் * சார்வரியரானால்? ** - எமக்கு இனி
யாதானும் * ஆகிடு காண் நெஞ்சே! * அவர் திறத்தே
யாதானும் சிந்தித்திரு 9

2594 இருநால்வர் * ஈரைந்தின் மேல் ஒருவர் * எட்டோ
டொரு நால்வர் * ஓரிருவர் அல்லால் ** - திருமாற்கு
யாமார்? வணக்கமார்? * ஏபாவம் நன்னெஞ்சே! *
நாமா மிக உடையோம் நாழ் 10

2595 நாழாலமர் முயன்ற * வல்லரக்கன் இன்னுயிரை *
வாழா வகை வலிதல் நின் வலியே ** - ஆழாத
பாரும் நீ வானும் நீ * காலும் நீ தீயும் நீ *
நீரும் நீயாய் நின்ற நீ 11

2596 நீ அன்றே ஆழ்துயரில் * வீழ்விப்பான் நின்று உழன்றாய்? *
போயொன்று சொல்லி என்? போ நெஞ்சே! ** - நீ என்றும்
காழ்த்து உபதேசம் தரினும் * கைக்கொள்ளாய் * கண்ணன் தாள்
வாழ்த்துவதே கண்டாய் வழக்கு 12

2597 வழக்கொடு மாறு கொள் அன்று * அடியார் வேண்ட *
இழக்கவும் காண்டும் இறைவ! - இழப்புண்டே? **
எம்மாட்கொண்டாகிலும் * யான் வேண்ட என் கண்கள் *

தம்மால் காட்டு உன் மேனிச்சாய் 13

2598 சாயால் கரியானை * உள்ளறியாராய் நெஞ்சே! *
பேயார் முலை கொடுத்தார் பேயராய் ** - நீ யார்? போய்த்
தேம்பூண் சுவைத்து * ஊன் அறிந்தறிந்தும் * தீவினையாம்
பாம்பார் வாய்க் கைநீட்டல் பார்த்தி 14

2599 பார்த்தோர் எதிரிதா நெஞ்சே! * படு துயரம்
பேர்த்தோதப் * பீடழிவாம் பேச்சில்லை ** - ஆர்த்து ஓதம்
தம் மேனி * தாள் தடவத் தாம் கிடந்து * தம்முடைய
செம்மேனிக் கண் வளர்வார் சீர் 15

2600 சீரால் பிறந்து * சிறப்பால் வளராது *
பேர்வாமனாகாக்கால் பேராளா! ** - மார்பாரப்
புல்கி நீ உண்டு உமிழ்ந்த * பூமி நீர் ஏற்பரிதே? *
சொல்லு நீயாம் அறியச் சூழ்ந்து 16

2601 சூழ்ந்து அடியார் வேண்டினக்கால் * தோன்றாது விட்டாலும் *
வாழ்ந்திடுவர் பின்னும் தம் வாய் திறவார் ** - சூழ்ந்து எங்கும்
வாள் வரைகள் போல் அரக்கன் * வன்தலைகள் தாம் இடிய *
தாள் வரை வில் ஏந்தினார் தாம் 17

2602 தாம்பால் ஆப்புண்டாலும் * அத்தழும்பு தான் இளக *
பாம்பால் ஆப்புண்டு பாடுற்றாலும் ** - சோம்பாது இப்
பல்லுருவை எல்லாம் * படர்வித்த வித்தா! * உன்
தொல்லுருவை யார் அறிவார்? சொல்லு 18

2603 சொல்லில் குறை இல்லை * சூதறியா நெஞ்சமே! *
எல்லி பகல் என்னாது எப்போதும் ** - தொல்லைக் கண்
மாத்தானைக்கெல்லாம் * ஓர் ஐவரையே மாறாக *
காத்தானைக் காண்டும் நீ காண் 19

2604 காணப் புகில் அறிவு * கைக் கொண்ட நல்நெஞ்சம் *
நாணப்படுமன்றே? நாம் பேசில் ** - மாணி
உருவாகிக் கொண்டு * உலகம் நீர் ஏற்ற சீரான் *
திருவாகம் தீண்டிற்றுச் சென்று 20

2605 சென்றங்கு வெந்நரகில் * சேராமல் காப்பதற்கு *
இன்றிங்கு என் நெஞ்சால் இடுக்குண்ட ** - அன்றங்குப்
பாருருவும் பார் வளைத்த * நீருருவும் கண் புதைய *
காருருவன் தான் நிமிர்த்த கால் 21

2606 காலே பொதத் திரிந்து * கத்துவராம் இனநாள்[109] *
மாலார் குடி புகுந்தார் என் மனத்தே ** - மேலால்
தருக்கும் இடம் பாட்டினொடும் * வல்வினையார் தாம் * வீற்
றிருக்கும் இடம் காணாது இளைத்து 22

2607 இளைப்பாய் இளையாப்பாய் * நெஞ்சமே! சொன்னேன் *
இளைக்க நமன் தமர்கள் பற்றி - இளைப்பெய்த **
நாய்தந்து மோதாமல் * நல்குவான் நல்காப்பான் *
தாய் தந்தை எவ்வுயிர்க்கும் தான் 23

2608 தானே தனித் தோன்றல் * தன் அளப்பு ஒன்றில்லாதான் *
தானே பிறர்கட்கும் தற்றோன்றல் ** - தானே
இளைக்கில் பார் கீழ் மேலாம் * மீண்டு[110] அமைப்பானானால் *
அளக்கிற்பார் பாரின் மேல் ஆர்? 24

2609 ஆரானும் * ஆதானும் செய்ய * அகல் இடத்தை
ஆராய்ந்து * அது திருத்தல் ஆவதே? ** - சீரார்
மனத்தலை * வன்துன்பத்தை மாற்றினேன் * வானோர்
இனத் தலைவன் கண்ணனால் யான் 25

2610 யானும் என் நெஞ்சும் * இசைந்தொழிந்தோம் * வல்வினையைக்
கானும் மலையும் புகக் கடிவான் ** - தானோர்
இருள் அன்ன மாமேனி * எம் இறையார் தந்த *
அருள் என்னும் தண்டால் அடித்து 26

2611 அடியால் படி கடந்த முத்தோ? * அதன்றேல்
முடியால் * விசும்பளந்த முத்தோ? ** - நெடியாய்!
செறிகழல்கள்[111] தாள் நிமிர்த்துச் * சென்று உலகம் எல்லாம் *
அறிகிலமால் நீ அளந்த அன்று 27

2612 அன்றே நம் கண் காணும் * ஆழியான் கார் உருவம் *
இன்றே நாம் காணாதிருப்பதுவும் ** - என்றேனும்
கட்கண்ணால் * காணாத அவ்வுருவை * நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணும் உணர்ந்து 28

2613 உணர ஒருவர்க்கு * எளியனே? செவ்வே *
இணரும் துழாய் அலங்கல் எந்தை ** - உணரத்
தனக்கு எளியர் எவ்வளவர் * அவ்வளவன் ஆனால் *
எனக்கெளியன் எம்பெருமான் இங்கு 29

---

[109] இந்நாள்
[110] ஈண்டு
[111] செறிகழல்கொள்

2614 இங்கில்லை * பண்டு போல் வீற்றிருத்தல் * என்னுடைய
செங்கண்மால் * சீர்க்கும் சிறிதுள்ளம் ** - அங்கே
மடி அடக்கி நிற்பதனில் * வல்வினையார் தாம் * மீண்டு[112]
அடி எடுப்பதன்றோ அழகு? 30

2615 அழகும் அறிவோமாய் * வல்வினையைத்[113] தீர்ப்பான் *
நிழலும் அடிதாறுமானோம் ** - சுழலக்
குடங்கள் * தலை மீதெடுத்துக் கொண்டாடி * அன்று அத்
தடங்கடலை மேயார் தமக்கு 31

2616 தமக்கு அடிமை வேண்டுவார் * தாமோதரனார்
தமக்கு * அடிமை செய் என்றால் செய்யாது ** - எமக்கு என்றும்[114]
தாம் செய்யும் தீவினைக்கே * தாழ்வுறுவர் நெஞ்சினார் *
யான் செய்வது இவ்விடத்து இங்கு யாது? 32

2617 யாதானும் ஒன்றறியில் * தன்னுகக்கில் என் கொலோ? *
யாதானும் நேர்ந்து அணுகாவாறு தான்? ** - யாதானும்
தேறுமா செய்யா * அசுரர்களை * நேமியால்
பாறு பாறாக்கினான் பால் 33

2618 பாலாழி * நீ கிடக்கும் பண்பை * யாம் கேட்டேயும் *
காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் ** - நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்! * தொல்வினை எம்பால் கடியும் *
நீதியாய்! நிற்சார்ந்து நின்று 34

2619 நின்றும் இருந்தும் * கிடந்தும் திரிதந்தும் *
ஒன்றுமோ ஆற்றான் என் நெஞ்சகலான் ** - அன்று அங்கை
வன்புடையால் பொன்பெயரோன் * வாய் தகர்த்து மார்விடந்தான் *
அன்புடையன் அன்றே அவன்? 35

2620 அவனாம் இவனாம் உவனாம் * மற்று உம்பர்
அவனாம் * அவன் என்றிராதே ** - அவனாம்
அவனே எனத் தெளிந்து * கண்ணனுக்கே தீர்ந்தால் *
அவனே எவனேலுமாம் 36

2621 ஆமாறு அறிவுடையார் * ஆவது அரிதன்றே? *
நாமே அது உடையோம் நன்னெஞ்சே! ** - பூமேய்
மதுகரமே * தண்துழாய் மாலாரை * வாழ்த்தாம்
அதுகரமே அன்பால் அமை 37

[112] ஈண்டு
[113] வல்வினையும்
[114] என்று

2622 அமைக்கும் பொழுதுண்டே? * ஆராயில் நெஞ்சே! *
இமைக்கும் பொழுதும் இடைச்சி - குமைத்திறங்கள் **
ஏசியே ஆயினும் * ஈந்துழாய் மாயனையே *
பேசியே போக்காய் பிழை 38

2623 பிழைக்க முயன்றோமோ? * நெஞ்சமே! பேசாய் *
தழைக்கும் துழாய் மார்வன் தன்னை ** - அழைத்து ஒருகால்
போய் உபகாரம் * பொலியக் கொள்ளாது * அவன் புகழே
வாய் உபகாரம் கொண்ட வாய்ப்பு 39

2624 வாய்ப்போ இது ஒப்ப * மற்றில்லை வா நெஞ்சே! *
போய்ப் போஒய் வெந்நரகில் பூவியேல் ** - தீப்பால
பேய்த் தாய் * உயிர்கலாய்ப் பால் உண்டு * அவள் உயிரை
மாய்த்தானை வாழ்த்தே வலி 40

2625 வலியமென நினைந்து * வந்தெதிர்ந்த மல்லர் *
வலிய முடி இடிய வாங்கி ** - வலிய நின்
பொன்னாழிக் கையால் * புடைத்திடுதி கீளாதே *
பல்நாளும் நிற்கும் இப்பார் 41

2626 பார் உண்டான் பார் உமிழ்ந்தான் * பார் இடந்தான் பார் அளந்தான் *
பாரிடம் முன்படைத்தான் என்பரால் ** - பாரிடம்
ஆவானும் * தானானால் ஆரிடமே? * மற்றொருவர்க்கு
ஆவான் புகாவால் அவை 42

2627 அவயமென நினைந்து * வந்த சுரர் பாலே *
நவையை நளிர்விப்பான் தன்னை ** - கவையில்
மனத்துயர வைத்திருந்து * வாழ்த்தாதார்க்கு உண்டோ? *
மனத்துயரை மாய்க்கும் வகை 43

2628 வகை சேர்ந்த நல்நெஞ்சும் * நாவுடைய வாயும் *
மிக வாய்ந்து வீழா எனிலும் ** - மிக வாய்ந்து
மாலைத் தாம் * வாழ்த்தாது இருப்பர் இது அன்றே? *
மேலைத் தாம் செய்யும் வினை 44

2629 வினையார் தர முயலும் * வெம்மையை அஞ்சி *
தினையாம் சிறிதளவும் செல்ல - நினையாது **
வாசகத்தால் ஏத்தினேன் * வானோர் தொழுது இறைஞ்சும் *
நாயகத்தான் பொன்னடிக்கள் நான் 45

2630 நான் கூறும் * கூற்றாவது இத்தனையே * நாள்நாளும்
தேங்கோத * நீருருவன் செங்கண்மால் ** - நீங்காத
மாகதியாம் வெந்நரகில் * சேராமல் காப்பதற்கு *

நீகதியா நெஞ்சே! நினை 46
2631 நினைத்து இறைஞ்சி மானிடவர் * ஒன்றிரப்பர் என்றே *
நினைத்திடவும் வேண்டா நீ நேரே ** - நினைத்து இறைஞ்ச
எவ்வளவர் * எவ்விடத்தோர் மாலே! * அது தானும்
எவ்வளவும் உண்டோ? எமக்கு 47

2632 எமக்கு யாம் விண்ணாட்டுக்கு * உச்சமதாம் வீட்டை *
அமைத்து இருந்தோம் அஃதன்றே யாமாறு? ** - அமைப்பொலிந்த
மென்தோளி காரணமா * வெங்கோட்டு ஏறு ஏழுடனே *
கொன்றானையே மனத்துக் கொண்டு 48

2633 கொண்டல் தான் மால் வரை தான் * மாகடல் தான் கூர் இருள் தான் *
வண்டறாப் பூவை தான் மற்றுத் தான் ** - கண்ட நாள்
கார் உருவம் * காண் தோறும் நெஞ்சு ஓடும் * கண்ணனார்
பேருரு என்றெம்மைப் பிரிந்து 49

2634 பிரிந்தொன்று நோக்காது * தம்முடைய பின்னே *
திரிந்துழலும் சிந்தனையார் தம்மை ** - புரிந்து ஒருகால்
ஆவா! என இரங்கார் * அந்தோ! வலிதே கொல்? *
மாவாய் பிளந்தார் மனம் 50

2635 மனம் ஆளும் ஓர் ஐவர் * வன்குறும்பர் தம்மை *
சினம் ஆள்வித்து ஓர் இடத்தே சேர்த்து ** - புனமேய
தண்துழாயான் அடியைத் * தான் காணும் அஃதன்றே *
வண்துழாம் சீரார்க்கு மாண்பு 51

2636 மாண்பாவித்து அந்நான்று * மண் இரந்தான் * மாயவள் நஞ்சு
ஊண் பாவித்து * உண்டானது ஓர் உருவம் ** - காண்பான் நங்
கண்ணவா * மற்றொன்று காணுறா * சீர் பரவாது
உண்ண வாய் தான் உறுமோ ஒன்று? 52

2637 ஒன்றுண்டு செங்கண்மால்! யான் உரைப்பது * உன் அடியார்க்கு
என் செய்வன் என்றே இருத்தி நீ ** - நின் புகழில்
வைகும் * தம் சிந்தையிலும் மற்றினிதோ? * நீ அவர்க்கு
வைகுந்தம் என்றருளும் வான் 53

2638 வானோ? மறிகடலோ? * மாருதமோ? தீயகமோ? *
கானோ? ஒருங்கிற்றும் கண்டிலம் ஆல் ** - ஆனீன்ற
கன்றுயரத் தாம் எறிந்து * காய் உதிர்த்தார் தாள் பணிந்தோம் *
வன்துயரை யாவா! மருங்கு 54

2639 மருங்கோதம் மோதும் * மணி நாகணையார் *
மருங்கே வர அரியரேலும் ** - ஒருங்கே

எமக்கு அவரைக் காணலாம் * எப்போதும் உள்ளால் *
மனக் கவலை தீர்ப்பார் வரவு 55

2640 வரவாறொன்றில்லையால் * வாழ்வினிதால் * எல்லே!
ஒருவாறு * ஒருவன் புகாவாறு ** - உருமாறும்
ஆயவர் தாம் சேயவர் தாம் * அன்று உலகம் தாயவர் தாம் *
மாயவர் தாம் காட்டும் வழி 56

2641 வழித் தங்கு வல்வினையை * மாற்றானோ? நெஞ்சே! *
தழீஇக்கொண்டு போர் அவுணன் தன்னை ** - சுழித்து எங்கும்
தாழ்விடங்கள் பற்றிப் * புலால் வெள்ளம் தான் உகள *
வாழ்வடங்க மார்விடந்த மால்? 57

2642 மாலே! படிச் சோதி மாற்றேல் * இனி உனது
பாலே போல் * சீரில் பழுத்தொழிந்தேன் ** - மேலால்
பிறப்பின்மை பெற்று * அடிக் கீழ்க் குற்றேவல் அன்று *
மறப்பின்மை யான் வேண்டும் மாடு 58

2643 மாடே வரப் பெறுவராம் என்றே * வல்வினையார்
காடானும் * ஆதானும் கைக்கொள்ளார் ** - ஊடே போய்ப்
பேரோதம் சிந்து * திரைக்கண் வளரும் * பேராளன்
பேரோதச் சிந்திக்கப் பேர்ந்து 59

2644 பேர்ந்தொன்று நோக்காது * பின்னிற்பாய் நில்லாப்பாய் *
ஈன்துழாய் மாயனையே என் நெஞ்சே! ** - பேர்ந்தெங்கும்
தொல்லைமா வெந்நரகில் * சேராமல் காப்பதற்கு *
இல்லை காண் மற்றோர் இறை 60

2645 இறை முறையான் சேவடி மேல் * மண் அளந்த அந்நாள் *
மறை முறையால் வானாடர் கூடி ** - முறை முறையின்
தாதிலகு * பூத்தெளித்தால் ஒவ்வாதே? * தாழ் விசும்பின்
மீதிலகித் தான் கிடக்கும் மீன் 61

2646 மீனென்னுங் கம்பில் * வெறியென்னும் வெள்ளி வேய் *
வானென்னும் கேடிலா வான்குடைக்கு ** - தானோர்
மணிக் காம்பு போல் நிமிர்ந்து * மண் அளந்தான் * நங்கள்
பிணிக்காம் பெருமருந்து பின் 62

2647 பின் துரக்கும் காற்றிழந்த[115] * சூற்கொண்டல் பேர்ந்தும் போய் *
வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே ** - அன்று
திருச்செய்ய நேமியான் * தீ அரக்கி மூக்கும் *

[115] காற்றிழிந்த

பருச்செவியும் ஈர்ந்த பரன் 63

2648 பரனாம் அவனாதல் * பாவிப்பராகில் *
உரனால் ஒரு மூன்று போதும் ** - மரம் ஏழு அன்று
எய்தானைப் * புள்ளின் வாய் கீண்டானையே * அமரர்
கை தான் தொழாவே கலந்து? 64

2649 கலந்து நலியும் * கடுந்துயரை நெஞ்சே! *
மலங்க அடித்து மடிப்பான் ** - விலங்கல் போல்
தொல்மாலைக் கேசவனை * நாரணனை மாதவனை *
சொல்மாலை எப்பொழுதும் சூட்டு 65

2650 சூட்டாய நேமியான் * தொல்லரக்கன் இன்னுயிரை *
மாட்டே துயர் இழைத்த மாயவனை ** - ஈட்ட
வெறி கொண்ட * தண்துழாய் வேதியனை * நெஞ்சே!
அறி கண்டாய் சொன்னேன் அது 66

2651 அதுவோ நன்றென்று * அங்கு அமருலகோ வேண்டில் *
அதுவோர்[116] பொருள் இல்லை அன்றே ** - அதுவொழிந்து
மண் இன்று ஆள்வேன் எனிலும் * கூடும் மடநெஞ்சே! *
கண்ணன் தாள் வாழ்த்துவதே கல் 67

2652 கல்லும் கனைகடலும் * வைகுந்த வானாடும் *
புல்லென்று ஒழிந்தன கொல்? ஏபாவம்! ** - வெல்ல
நெடியான் நிறம் கரியான் * உள்புகுந்து நீங்கான் *
அடியேனது உள்ளத்தகம் 68

2653 அகம் சிவந்த கண்ணினராய் * வல்வினையர் ஆவார் *
முகம் சிதைவராம் அன்றே முக்கி ** - மிகும் திருமால்
சீர்க்கடலை உள் பொதிந்த * சிந்தனையேன் தன்னை *
ஆர்க்கு அடலாம் செவ்வே அடர்த்து? 69

2654 அடர்பொன் முடியானை * ஆயிரம் பேரானை *
சுடர்கொள் சுடர் ஆழியானை ** - இடர் கடியும்
மாதா பிதுவாக * வைத்தேன் எனதுள்ளே *
யாதாகில் யாதே இனி? 70

2655 இனி நின்று நின் பெருமை * யான் உரைப்பது என்னே? *
தனி நின்ற சார்விலா மூர்த்தி! ** - பனி நீர்
அகத்துலவு * செஞ்சடையான் ஆகத்தான் * நான்கு
முகத்தான் நின் உந்தி முதல் 71

---

[116] அதுவோ

2656 முதலாம் திருவுருவம் * மூன்று என்பர் * ஒன்றே
முதலாகும் * மூன்றுக்கும் என்பர் - முதல்வா! **
நிகரிலகு காருருவா! * நின் அகத்ததன்றே? *
புகரிலகு தாமரையின் பூ 72

2657 பூவையும் காயாவும் * நீலமும் பூக்கின்ற *
காவி மலர் என்றும் காண்தோறும் ** - பாவியேன்
மெல்லாவி * மெய் மிகவே பூரிக்கும் * அவ்வவை
எல்லாம் பிரான் உருவே என்று 73

2658 என்றும் ஒரு நாள் * ஒழியாமை யான் இரந்தால் *
ஒன்றும் இரங்கார் உருக்காட்டார் ** - குன்று
குடையாக * ஆகாத்த கோவலனார் * நெஞ்சே!
புடை தான் பெரிதே புவி 74

2659 புவியும் இருவிசும்பும் நின்னகத்த * நீ என்
செவியின் வழி புகுந்து என் உள்ளாய் ** - அவிவின்றி
யான் பெரியன் நீ பெரியை * என்பதனை யார் அறிவார்? *
ஊன் பருகு நேமியாய்! உள்ளு 75

2660 உள்ளிலும் உள்ளம் தடிக்கும் * வினைப் படலம் *
விள்ள விழித்து உன்னை மெய்யுற்றால் ** - உள்ள
உலகளவும் * யானும் உளனாவன் என் கொலோ? *
உலகளந்த மூர்த்தி! உரை 76

2661 உரைக்கிலோர் சுற்றத்தார் * உற்றார் என்று ஆரே? *
இரைக்கும் கடல் கிடந்த எந்தாய்! ** - உரைப்பெல்லாம்
நின்னன்றி * மற்றிலேன் கண்டாய்! * எனது உயிர்க்கு ஓர்
சொல் நன்றியாகும் துணை 77

2662 துணை நாள் பெரும் கிளையும் * தொல்குலமும் * சுற்றத்
திணை நாளும் * இன்புடைத்தாமேலும் * - கணை நாணில்
ஓவாத் தொழில் சார்ங்கன் * தொல்சீரை நல்நெஞ்சே! *
ஓவாத ஊணாக உண் 78

2663 உள்நாட்டுத் தேசன்றே! * ஊழ்வினையை அஞ்சுமே? *
விண்ணாட்டை ஒன்றாக மெச்சுமே? ** - மண்ணாட்டில்
ஆராகி * எவ்விழி விற்றானாலும் * ஆழி அங்கைப்
பேராயற்கு ஆளாம் பிறப்பு 79

2664 பிறப்பு இறப்பு மூப்புப் * பிணி துறந்து * பின்னும்
இறக்கவும் இன்புடைத்தாமேலும் ** - மறப்பெல்லாம்
ஏதமே * என்றல்லால் எண்ணுவனே? * மண் அளந்தான்

பாதமே ஏத்தாப் பகல் 80

2665 பகல் இரா என்பதுவும் * பாவியாது * எம்மை
இகல் செய்து * இருபொழுதும் ஆள்வர் ** - தகவாத்
தொழும்பர் இவர் சீர்க்கும் * துணை இலர் என்றோரார் *
செழும்பரவை மேயார் தெரிந்து 81

2666 தெரிந்து உணர்வொன்று இன்மையால் * தீவினையேன் * வாளா
இருந்து ஒழிந்தேன் * கீழ்நாள்கள் எல்லாம் ** - கரந்துருவின்
அம்மானை * அந்நான்று பின் தொடர்ந்த * ஆழி அங்கை
அம்மானை ஏத்தாது அயர்த்து 82

2667 அயர்ப்பாய் அயராப்பாய் * நெஞ்சமே! சொன்னேன் *
உயப்போம் நெறி இதுவே கண்டாய் ** - செயற்பால
வல்லவே செய்கிறுதி * நெஞ்சமே! அஞ்சினேன் *
மல்லர் நாள் வவ்வினனை வாழ்த்து 83

2668 வாழ்த்தி அவன் அடியைப் பூப்புனைந்து * நின் தலையைத்
தாழ்த்து * இருகை கூப்பு என்றால் கூப்பாத - பாழ்த்த விதி! **
எங்குற்றாய் என்றவனை * ஏத்தாது என் நெஞ்சமே! *
தங்கத்தானாமேலும் தங்கு 84

2669 தங்கா முயற்றிய வாய்த் * தாழ் விசும்பின் மீது பாய்ந்து *
எங்கே புக்கு எத்தவம் செய்திட்டன கொல்? ** - பொங்கோதத்
தண்ணம்பால் * வேலை வாய்க் கண் வளரும் * என்னுடைய
கண்ணன் பால் நல்நிறம் கொள்கார் 85

2670 * கார் கலந்த மேனியான் * கை கலந்த ஆழியான் *
பார் கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் ** - சீர் கலந்த
சொல் நினைந்து போக்காரேல் * சூழ் வினையின் ஆழ்துயரை *
என் நினைந்து போக்குவர் இப்போது? 86

2671 * இப்போதும் இன்னும் * இனிச் சிறிது நின்றாலும் *
எப்போதும் ஈதே சொல் என் நெஞ்சே! ** - எப்போதும்
கை கழலா நேமியான் * நம் மேல் வினை கடிவான் *
மொய்கழலே ஏத்த முயல் 87

தசக அடிவரவு: முயற்றி நாழ் சென்று அழகு வலியம் மனமாளும்
இறைமுறையான் இனி பகல் ஒருபேர்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
திருவெழுகூற்றிருக்கை

திருவெழுகூற்றிருக்கை தனியன்கள்

எம்பெருமானார் அருளிச் செய்தவை

வாழி பரகாலன் வாழி கலிகன்றி *
வாழி குறையலூர் வாழ் வேந்தன் * - வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன் *
தூயோன் சுடர்மான வேல்

[117]சீரார் திருவெழுகூற்றிருக்கை என்னும் செந்தமிழால் *
ஆராவமுதன் குடந்தைப் பிரான் தன் அடியிணைக் கீழ் *
ஏரார் மறைப் பொருள் எல்லாம் எடுத்து இவ்வுலகு உய்யவே *
சோராமல் சொன்ன அருள்மாரி பாதம் துணை நமக்கே

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
திருவெழுகூற்றிருக்கை

2672 * ஒரு பேர் உந்தி இருமலர்த் தவிசில் *
ஒரு முறை அயனை ஈன்றனை * ஒரு முறை
இருசுடர் மீதினில் இயங்கா * மும்மதிள்
இலங்கை இருகால் வளைய * ஒரு சிலை
ஒன்றிய ஈரெயிற்று அழல் வாய் வாளியின்
அட்டனை * மூவடி நானிலம் வேண்டி *
முப்புரி நூலொடு மானுரி இலங்கு
மார்வினின் * இருபிறப்பு ஒரு மாணாகி *
ஒரு முறை ஈரடி மூவுலகு அளந்தனை *
நால் திசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி * நால் வாய் மும்மதத்து இரு செவி
ஒரு தனி வேழத்து அரந்தையை * ஒரு நாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை * முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி * அறுதொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை * ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து * நான்குடன் அடக்கி
முக்குணத்து இரண்டவை அகற்றி * ஒன்றினில்
ஒன்றி நின்று * ஆங்கு இருபிறப்பு அறுப்போர்
அறியும் தன்மையை * முக்கண் நால்தோள்

[117] இத்தனியன் மிகுதியாக வழங்குவதில்லை

ஐவாய் அரவோடு * ஆறுபொதி சடையோன்
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை *
ஏழுலகு எயிற்றினில் கொண்டனை * கூறிய
அறுசுவைப் பயனும் ஆயினை * சுடர் விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை * சுந்தர
நால்தோள் முந்நீர் வண்ண! * நின் ஈரடி
ஒன்றிய மனத்தால் * ஒரு மதி முகத்து
மங்கையர் இருவரும் மலரன2[118] * அங்கையின்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை *
நெறி முறை நால்வகை வருணமும் ஆயினை *
மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே *
அறுபதம் முரலும் கூந்தல் காரணம் *
ஏழ் விடை அடங்கச் செற்றனை * அறுவகைச்
சமயமும் அறிவரு நிலையினை * ஐம்பால்
ஓதியை ஆகத்து இருத்தினை * அறம் முதல்
நான்கவையாய் மூர்த்தி மூன்றாய் *
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை * குன்றா மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை * வருபுனல் பொன்னி
மாமணி அலைக்கும் * செந்நெல் ஒண்கழனித்
திகழ் வனம் உடுத்த * கற்போர் புரிசைக்
கனக மாளிகை * நிமிர் கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் * ***** செல்வம் மல்கு தென்
திருக்குடந்தை * அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க * ஆடரவு அமளியில் அறிதுயில்
அமர்ந்த பரம! * நின் அடியிணை பணிவன்
வரும் இடர் அகல மாற்றோ வினையே

[119]இடங்கொண்ட நெஞ்சத்து இணங்கிக் கிடப்பன * என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்த தண் பூங்குடந்தை *
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கண் தழலுமிழ் வாய் *
படங்கொண்ட பாம்பணைப் பள்ளி கொண்டான் திருப்பாதங்களே

அடிவரவு: ஒருபேர் காரார்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

---

[118] மலரென
[119] இப்பாட்டு கம்பநாட்டாழ்வார் செய்ததென்பர்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
சிறிய திருமடல்

சிறிய திருமடல் தனியன்

பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச் செய்தது

முள்ளிச் செழுமலரோ[120] தாரான் முளை மதியம் *
கொள்ளிக்கு என் உள்ளம் கொதியாமே * - வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி *
மருவாளன் தந்தான் மடல்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
சிறிய திருமடல்

* காரார் வரைக் கொங்கை கண்ணார் கடல் உடுக்கை *
சீரர் சுடர் சுட்டி செங்கலுழிப் பேராற்று *
பேராார மார்பின் பெருமா மழைக் கூந்தல் *
நீரார வேலி நில மங்கை என்னும் * இப்
பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே * - அம்மூன்றும்
ஆராயில் தானே அறம் பொருள் இன்பம் என்று *
ஆரார் இவற்றின் இடை அதனை எய்துவார் *
சீரார் இரு கலையும் எய்துவர் * - சிக்கென மற்று
ஆரானும் உண்டென்பார் என்பது தான் அதுவும் *
ஒராமை அன்றே? உலகத்தார் சொல்லும் சொல் *
ஒராமை ஆமாறு அது உரைக்கேன் கேளாமே[121] *
காரார் புரவி ஏழ் பூண்ட தனி ஆழி *
தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு *
ஆரா அமுதம் அங்கெய்தி * - அதில் நின்றும்
வாரதொழிவதொன்றுண்டே? அது நிற்க *
ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே? *
எரார் இள முலையீர் என்தனக்கு உற்றது தான் *
காரார் குழல் எடுத்துக் கட்டி * - கதிர் முலையை
வாரார வீக்கி மணிமேகலை திருத்தி *
ஆரார் அயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து *
சீரார் செழும் பந்து கொண்டடியா நின்றேன் நான் *
நீரார் கமலம் போல் செங்கண் மால் என்றொருவன் *
பாரோர்கள் எல்லாம் மகிழப் பறை கறங்க *

[120] மலரோர் / மலரோன்
[121] கேளாமோ

சீரார் குடம் இரண்டேந்தி * - செழுந்தெருவே
ஆரார் எனச் சொல்லி ஆடும் அது கண்டு *
ஏரார் இளமுலையார் என்னையரும் எல்லாரும் *
வாராயோ என்றார்க்குச் சென்றேன் என் வல்வினையால் *
காரார் மணி நிறமும் கைவளையும் காணேன் நான் *
ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன் * - அறிவழிந்து
தீரா உடம்பொடு பேதுறுவேன் கண்டிரங்கி *
ஏரார் கிளிக் கிளவி எம்மனை தான் வந்தென்னை *
சீரார் செழும் புழுதிக் காப்பிட்டு * - செங்குறிஞ்சித்
தாரார் நறுமாலை சாத்தற்கு * தான் பின்னும்
நேராதன ஒன்று நேர்ந்தாள் * - அதனாலும்
தீராது என் சிந்தை நோய் தீராது என் பேதுறவு *
வாராது மாமை அது கண்டு மற்றாங்கே *
ஆரானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார் *
பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல் *
ஆரானும் மெய்ப்படுவன் என்றார் * - அது கேட்டுக்
காரார் குழற் கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறி *
சீரார் சுளகில் சில நெல் பிடித்தெறியா *
வேரா விதிர் விதிரா மெய் சிலிராக் கை மோவா *
பேர் ஆயிரம் உடையான் என்றாள் * - பேர்த்தேயும்
காரார் திருமேனி காட்டினாள் * கை அதுவும்
சீரார் வலம்புரியே என்றாள் * - திருத்துழாய்த்
தாரார் நறுமாலை கட்டுரைத்தாள் கட்டுரையா *
நீரேதும் அஞ்சேன்மின் நும்மகளை நோய் செய்தான் *
ஆரானும் அல்லன் அறிந்தேன் அவனை நான் *
கூரார் வேற்கண்ணீர்! உமக்கறியக் கூறுகேனோ? *
ஆரால் இவ்வையம் அடி அளப்புண்டது தான்? *
ஆரால் இலங்கை பொடி பொடியா வீழ்ந்தது? * - மற்று
ஆராலே கன்மாரி காத்தது தான்? * - ஆழி நீர்
ஆரால் கடைந்திடப்பட்டது? * - அவன் காண்மின்
ஊராநிரை மேய்த்து உலகெல்லாம் உண்டுமிழ்ந்தும் *
ஆராத தன்மையனாய் ஆங்கொரு நாள் ஆய்ப்பாடி *
சீரார் கலை அல்குல் சீரடிச் செந்துவர் வாய் *
வாரார் வன முலையாள் மத்தாரப் பற்றிக் கொண்டு *
ஏரார் இடை நோவ எத்தனையோர் போதுமாய் *
சீரார் தயிர் கடைந்து வெண்ணை திரண்டதனை *
வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு *
நாரார் உறி ஏற்றி நன்கமைய வைத்ததனை *
போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம் *
ஓராதவன் போல் உறங்கி அறிவுற்று *
தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கை நீட்டி *
ஆராத வெண்ணெய் விழுங்கி * - அருகிருந்த
மோரார் குடம் உருட்டி முன் கிடந்த தானத்தே *

ஓராதவன் போல் கிடந்தானைக் கண்டவளும் *
வாராத் தான் வைத்தது காணாள் * - வயிறடித்து இங்கு
ஆரார் புகுதுவார்? ஐயர் இவர் அல்லால் *
நீராம் இது செய்தீர் என்றோர் நெடுங்கயிற்றால் *
ஊரார்கள் எல்லாரும் காண உரலோடே *
தீரா வெகுளியளாய்ச் சிக்கென வார்த்தடிப்ப *
ஆரா வயிற்றினோடு ஆற்றாதான் * - அன்றியும்
நீரார் நெடுங்கயத்தை சென்றலைக்க நின்றுரப்பி *
ஓராயிரம் பண வெங்கோவியல் நாகத்தை *
வாராய் எனக்கென்று மற்றதன் மத்தகத்து *
சீரார் திருவடியால் பாய்ந்தான் * - தன் சீதைக்கு
நேராவன் என்றோர் நிசாசரி தான் வந்தாளை *
கூரார்ந்த வாளால் கொடி மூக்கும் காதிரண்டும் *
ஈரா விடுத்து அவட்கு மூத்தோனை * - வெந்நரகம்
சேரா வகையே சிலை குனித்தான் * செந்துவர் வாய்
வாரார் வன முலையாள் வைதேவி காரணமா *
எரார் தடந்தோள் இராவணனை * - ஈரைந்து
சீரார் சிரம் அறுத்துச் செற்றுகந்த செங்கண்மால் *
போரார் நெடுவேலோன் பொன்பெயரோன் ஆகத்தை *
கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு * - குடல் மாலை
சீரார் திருமார்பின் மேல் கட்டி * செங்குருதி
சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி *
ஆர எழுந்தான் அரி உருவாய் * - அன்றியும்
பேர் வாமனனாகிய[122] காலத்து * மூவடி மண்
தாராய் எனக்கென்று வேண்டிச் சலத்தினால் *
நீரேற்று உலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை *
ஆராத போரில் அசுரர்களும் தானுமாய் *
காரார் வரை நட்டு நாகம் கயிறாக *
பேராமல் தாங்கிக் கடைந்தான் * - திருத்துழாய்
தாரார்ந்த மார்வன் தட மால் வரை போலும் *
போரானை பொய்கை வாய் கோட்பட்டு நின்றலறி *
நீரார் மலர்க் கமலம் கொண்டோர் நெடுங்கையால் *
நாராயணா! ஓ! மணிவண்ணா! நாகணையாய்! *
வாராய் என் ஆரிடரை நீக்காய் * - என வெகுண்டு
தீராத சீற்றத்தால் சென்றிரண்டு கூறாக *
ஈரா அதனை இடர் கடிந்தான் எம்பெருமான் *
பேர் ஆயிரம் உடையான் பேய்ப் பெண்டீர்! நும் மகளை *
தீரா நோய் செய்தான் என உரைத்தாள் * - சிக்கென மற்று
ஆரானும் அல்லாமை கேட்டெங்கள் அம்மனையும் *
போரார் வேற்கண்ணீர்! அவனாகில் பூந்துழாய் *
தாராதொழியுமே? தன் அடிச்சி அல்லளே? * - மற்று

[122] வாமனாகிய / வாமனனாய

ஆரானும் அல்லனே என்றொழிந்தாள் * - நான் அவனைக்
காரார் திருமேனி கண்டதுவே காரணமா *
பேராப் பிதற்றாத் திரிதருவன் * - பின்னையும்
ஈராப் புகுதலும் இவ்வுடலைத் தண் வாடை *
சோரா மறுக்கும் வகை அறியேன் * - சூழ் குழலார்
ஆரானும் ஏசுவர் என்னுமதன் பழியை *
வாராமல் காப்பதற்கு வாளா இருந்தொழிந்தேன் *
வாராய் மட நெஞ்சே! வந்து * - மணி வண்ணன்
சீரார் திருத் துழாய் மாலை நமக்கருளி *
தாரான் தரும் என்று இரண்டத்தில் ஒன்றதனை *
ஆரானும் ஒன்னாதார் கேளாமே சொன்னக்கால் *
ஆராயுமேலும் பணி கேட்டு அதன்றெனிலும் *
போராதொழியாதே போந்திடு நீ என்றேற்கு *
காரார் கடல் வண்ணன் பின் போன நெஞ்சமும் *
வாராதே என்னை மறந்தது தான் * - வல்வினையேன்
ஊரார் உகப்பதே ஆயினேன் * - மற்றெனக்கிங்கு
ஆராய்வார் இல்லை அழல் வாய் மெழுகு போல் *
நீராய் உருகும் என் ஆவி * - நெடுங் கண்கள்
ஊரார் உறங்கிலும் தான் உறங்கா * - உத்தமன் தன்
பேராயினவே பிதற்றுவன் * - பின்னையும்
காரார் கடல் போலும் காமத்தர் ஆயினார் *
ஆரே பொல்லாமை அறிவார்? அது நிற்க *
ஆரானும் ஆதானும் அல்லள் அவள் காணீர் *
வாரார் வனமுலை வாசவதத்தை என்று *
ஆரானும் சொல்லப்படுவாள் * - அவளும் தன்
பேராயம் எல்லாம் ஒழியப் பெருந்தெருவே *
தாரார் தடந்தோள் தளைக் காலன் பின் போனாள் *
ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே? * - மற்றெனக்கிங்கு
ஆரானும் கற்பிப்பார் நாயகரே? * - நான் அவனைக்
காரார் திருமேனி காணும் அளவும் போய் *
* சீரார் திருவேங்கடமே திருக்கோவ
லூரே * - மதிட்கச்சி ஊரகமே பேரகமே *
பேரா மறுதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே *
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் *
* ஆராமம் சூழ்ந்த அரங்கம் * - கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் *
சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர் *
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை *
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை *
சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர் *
பாரோர் புகழும் வதரி வட மதுரை *
ஊராயவெல்லாம் ஒழியாமே நான் அவனை *

ஓரானை கொம்பொசித்து ஓரானை கோள் விடுத்த
சீரானை * - செங்கண் நெடியானைத் தேன் துழாய்த்
தாரானை * - தாமரை போல் கண்ணானை * எண்ணருஞ்சீர்
பேர் ஆயிரமும் பிதற்றி * - * பெருந்தெருவே
ஊரார் இகழிலும் ஊராதொழியேன் நான் *
வாரார் பூம் பெண்ணை மடல்

[123]ஊராதொழியேன் உலகறிய ஒண்ணுதலீர்! *
சீரார் முலைத் தடங்கள் சேரளவும் * - பாரெல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர் *
மன்றோங்க ஊர்வன் மடல்

அடிவரவு: காரார் மன்னிய

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமடல்

பெரிய திருமடல் தனியன்

பிள்ளைத் திருநறையூர் அரையர் அருளிச் செய்தது

பொன்னுலகில் வானவரும் பூமகளும்[124] போற்றி செய்யும் *
நன்னுதலீர்! நம்பி நறையூரர் * - மன்னுலகில்
என் நிலைமை கண்டும் இரங்காரேயாம் ஆகில் *
மன்னு மடல் ஊர்வன் வந்து

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
பெரிய திருமடல்

2674 * மன்னிய பல்பொறி சேர் ஆயிர வாய் வாளரவின் *
சென்னி மணிக் குடுமித் தெய்வச் சுடர் நடுவுள் *
மன்னிய நாகத்தணை மேல் ஓர் மாமலை போல் *
மின்னும் மணி மகர குண்டலங்கள் வில் வீச *

[123] இது கம்பர் பாடியதென்பர்
[124] பூமகனும்

துன்னிய தாரகையின் பேரொளி சேர் ஆகாசம் *
என்னும் விதானத்தின் கீழால் * - இருசுடரை
மன்னும் விளக்காக ஏற்றி * மறிகடலும்
பன்னு திரைக் கவரி வீச * - நிலமங்கை
தன்னை முன நாள் அளவிட்ட தாமரை போல் *
மன்னிய சேவடியை வான் இயங்கு தாரகை மீன் *
என்னும் மலர்ப்பிணையல் ஏய்ந்த * - மழைக் கூந்தல்
தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும் *
என்னும் இவையே முலையா வடிவமைந்த *
அன்ன நடைய அணங்கே(ய்) * - அடி இணையைத்
தன்னுடைய அங்கைகளால் தான் தடவத் தான் கிடந்து * ஓர்
உன்னிய யோகத்து உறக்கம் தலைக்கொண்ட
பின்னை * தன் நாபி வலயத்துப் பேரொளி சேர் *
மன்னிய தாமரை மாமலர் பூத்து * அம்மலர் மேல்
முன்னம் திசைமுகனைத் தான் படைக்க * மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள் * - அம்மறை தான்
மன்னும் அறம் பொருள் இன்பம் வீடு என்று உலகில் *
நன்னெறி மேம்பட்டன நான்கன்றே * - நான்கினிலும்
பின்னையது பின்னைப் பெயர் தரும் என்பது ஓர் *
தொன்னெறியை வேண்டுவார் வீழ் கனியும் ஊழிலையும் *
என்னும் இவையே நுகர்ந்து உடலம் தாம் வருந்தி *
துன்னும் இலைக்குரம்பைத் துஞ்சியும் * - வெஞ்சுடரோன்
மன்னும் அழல் நுகர்ந்தும் வண்தடத்தின் உட்கிடந்தும் *
இன்னதோர் தன்மையராய் ஈங்கு உடலம் விட்டெழுந்து *
தொன்னெறிக்கண் சென்றார் எனப்படும் சொல்லல்லால் *
இன்னதோர் காலத்து இனையார் இது பெற்றார் *
என்னவும் கேட்டு அறிவதில்லை * - உளதென்னில்
மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் *
அன்னதோரில்லியினூடு போய் * - வீடென்னும்
தொன்னெறிக்கண் சென்றாரைச் சொல்லுமின்கள் சொல்லாதே *
அன்னதே பேசும் அறிவில் சிறுமனத்து * ஆங்கு
அன்னவரைக் கற்பிப்போம் யாமே * - அது நிற்க
முன்னம் நான் சொன்ன அறத்தின் வழி முயன்ற *
அன்னவர் தாம் கண்டீர்கள் ஆயிரக்கண் வானவர் கோன் *
பொன்னகரம் புக்கு அமரர் போற்றி செப்ப[125] * - பொங்கொளி சேர்
கொல்நவிலும் கோளரிமாத் தான் சுமந்த கோலம் சேர் *
மன்னிய சிங்காசனத்தின் மேல் * - வாள் நெடுங்கண்
கன்னியரால் இட்ட கவரிப் பொதி அவிழ்ந்து * ஆங்கு
இன்னிளம் பூந்தென்றல் இயங்க * - மருங்கிருந்த
மின்னனைய நுண்மருங்குல் மெல்லியலார் வெண்முறுவல் *
முன்னம் முகிழ்த்த முகிழ் நிலா வந்தரும்ப *

[125] போற்றிசைப்ப

அன்னவர் தம் மானோக்க முண்டாங்கணிமலர் சேர் *
பொன்னியல் கற்பகத்தின் காடுடுத்த மாடெல்லாம் *
மன்னிய மந்தாரம் பூத்த மதுத்திவலை *
இன்னிசை வண்டமரும் சோலை வாய் மாலை சேர் *
மன்னிய மாமயில் போல் கூந்தல் * - மழைத் தடங்கண்
மின்னிடையாரோடும் விளையாடி வேண்டிடத்து *
மன்னும் மணித்தலத்து மாணிக்க மஞ்சரியின் *
மின்னின் ஒளி சேர் பளிங்கு விளிம்படுத்த *
மன்னும் பவளக்கால் செம்பொன்செய் மண்டபத்துள் *
அன்ன நடைய அரம்பையர் தம் கை வளர்த்த *
இன்னிசை யாழ்[126] பாடல் கேட்டு இன்புற்று * - இருவிசும்பில்
மன்னும் மழை தவழும் வாணிலா நீள்மதி தோய் *
மின்னின் ஒளி சேர் விசும்பூரும் மாளிகை மேல் *
மன்னும் மணி விளக்கை மாட்டி * - மழைக் கண்ணார்
பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளி மேல் *
துன்னிய சாலேகம் சூழ் கதவம் தாள் திறப்ப *
அன்னம் உழக்க நெறிந்துக்க வாள் நீலச் *
சின்ன நறுந்தாது சூடி * - ஓர் மந்தாரம்
துன்னும் நறுமலரால் தோள் கொட்டி * கற்பகத்தின்
மன்னு மலர் வாய் மணி வண்டு பின் தொடர *
இன்னிளம் பூந்தென்றல் புகுந்து ஈங்கிள முலை மேல் *
நன்னரும் சந்தனச்சேறுள் புலர்த்த * - தாங்கருஞ்சீர்
மின்னிடை மேல் கை வைத்திருந்து ஏந்திள முலை மேல் *
பொன்னரும்பாரம் புலம்ப * - அகம் குழைந்து ஆங்கு
இன்ன உருவின் இமையாத் தடங்கண்ணார் *
அன்னவர் தம் மானோக்கம் உண்டு ஆங்கு அணிமுறுவல் *
இன்னமுதம் மாந்தி இருப்பர் * - இதுவன்றே
அன்ன அறத்தின் பயனாவது * ஒண்பொருளும்
அன்ன திறத்ததே ஆதலால் * - காமத்தின்
மன்னும் வழி முறையே நிற்றும் நாம் * மானோக்கின்
அன்ன நடையார் அலரேச ஆடவர் மேல் *
மன்னு மடல் ஊரார் என்பதோர் வாசகமும் *
தென்னுறையில் கேட்டு அறிவதுண்டு * - அதனை யாம் தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம் * வேண்டாதார்
தென்னன் பொதியில் செழும் சந்தனக் குழம்பின் *
அன்னதோர் தன்மை அறியாதார் * - ஆயன் வேய்
இன்னிசை ஓசைக்கு இரங்காதார் * மால் விடையின்
மன்னு மணி புலம்ப வாடாதார் * - பெண்ணை மேல்
பின்னும் அவ்வன்றில் பேடை[127] வாய்ச் சிறு குரலுக்கு *
உன்னி உடல் உருகி நையாதார் * - உம்பர் வாய்த்

[126] இன்னிசையாய்ப்
[127] பெடை

துன்னி மதி உகுத்த தூநிலா நீள் நெருப்பில் *
தம் உடலம் வேவத் தளராதார் * - காம வேள்
மன்னும் சிலை வாய் மலர் வாளி கோத்தெய்ய *
பொன்னெடு வீதி புகாதார் * - தம் பூவணை மேல்
சின்ன மலர்க் குழலும் அல்குலும் மென்முலையும் *
இன்னிள வாடை தடவத் தாம் கண் துயிலும் *
பொன்னனையார் பின்னும் திருவுறுக * - போர் வேந்தன்
தன்னுடைய தாதை பணியால் அரசொழிந்து *
பொன்னகரம் பின்னே புலம்ப வலம் கொண்டு *
மன்னும் வளநாடு கைவிட்டு * - மாதிரங்கள்
மின்னுருவில் விண்தேர்[128] திரிந்து வெளிப்பட்டு *
கன்னிரைந்து[129] தீய்ந்து கழை உடைந்து கால் சுழன்று *
பின்னும் திரை வயிற்றுப் பேயே திரிந்துலவா *
கொன்னவிலும் வெங்கானத்தூடு * - கொடுங்கதிரோன்
துன்னு வெயில் வறுத்த வெம்பரல் மேல் பஞ்சடியால் *
மன்னன் இராமன் பின் வைதேவி என்றுரைக்கும் *
அன்ன நடைய அணங்கு நடந்திலளே? *
பின்னும் கருநெடுங்கண் செவ்வாய்ப் பிணைநோக்கின் *
மின்னனைய நுண்மருங்குல் வேகவதி என்றுரைக்கும்
கன்னி * தன் இன்னுயிராம் காதலனைக் காணாது *
தன்னுடைய முன்தோன்றல் கொண்டேகத் தான் சென்று * ஆங்கு
அன்னவனை நோக்காது அழித்துரப்பி * - வாளமருள்
கல்நவில் தோள் காளையைக் கைப்பிடித்து மீண்டும் போய் *
பொன்னவிலும் ஆகம் புணர்ந்திலளே? * பூங்கங்கை
முன்னம் புனல் பரக்கும் நன்னாடன் மின்னாடும் *
கொன்னவிலும் நீள்வேல் குருக்கள் குலமதலை *
தன்னிகர் ஒன்றில்லாத வென்றித் தனஞ்சயனை *
பன்னாகராயன் மடப்பாவை * - பாவை தன்
மன்னிய நாணச்சம் மடம் என்றிவை அகல *
தன்னுடைய கொங்கை முகம் நெரிய * - தான் அவன் தன்
பொன்வரை[130] ஆகம் தழீஇக்கொண்டு போய் * தனது
நன்னகரம் புக்கு நயந்து இனிது வாழ்ந்ததுவும் *
முன்னுரையில் கேட்டு அறிவதில்லையே? * - சூழ்கடலுள்
பொன்னகரம் செற்ற புரந்தரனோடு ஏரொக்கும் *
மன்னவன் வாணன் அவுணர்க்கு வாள் வேந்தன் *
தன்னுடைய பாவை உலகத்துத் தன்னொக்கும் *
கன்னியரை இல்லாத காட்சியாள் * - தன்னுடைய
இன்னுயிர்த் தோழியால் எம்பெருமான் ஈன்துழாய் *
மன்னும் மணிவரைத் தோள் மாயவன் * - பாவியேன்

---

[128] வெண்தேர்
[129] கல் நிறைந்து
[130] பொன்னவரை

என்னை இது விளைத்த ஈரிரண்டு மால் வரைத்தோள் *
மன்னவன் தன் காதலனை மாயத்தால் கொண்டு போய் *
கன்னி தன் பால் வைக்க மற்றவனோடு எத்தனையோ *
மன்னிய பேரின்பம் எய்தினாள் * - மற்றிவை தான்
என்னாலே கேட்டீரே? ஏழைகாள்! என்னுரைக்கேன்? *
மன்னும் மலையரையன் பொற்பாவை * - வாள்நிலா
மின்னு மணிமுறுவல் செவ்வாய் உமையென்னும் *
அன்ன நடைய அணங்கு நுடங்கிடை சேர் *
பொன்னுடம்பு வாடப் புலன் ஐந்தும் நொந்தகல *
தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து * ஆங்கு
அன்ன அருந்தவத்தினூடு போய் * - ஆயிரந்தோள்
மன்னு கரதலங்கள் மட்டித்து * மாதிரங்கள்
மின்னி எரி வீச மேல் எடுத்த சூழ் கழற்கால் *
பொன்னுலகம் ஏழும் கடந்து உம்பர் மேல் சிலும்ப *
மன்னு குலவரையும் மாருதமும் தாரகையும் *
தன்னின் உடனே சுழலச் சுழன்றாடும் *
கொல்நவிலும் மூவிலை வேல் கூத்தன் பொடியாடி *
அன்னவன் தன் பொன்னகலம் சென்றாங்கு அணைந்திலளே? *
பன்னி உரைக்குங்கால் பாரதமாம் * - பாவியேற்கு
என்னுறு நோய் யான் உரைப்பக் கேண்மின் * இரும்பொழில் சூழ்
மன்னு மறையோர் திருநறையூர் மாமலை போல் *
பொன்னியலும் மாடக் கவாடம் கடந்து புக்கு *
என்னுடைய கண் களிப்ப நோக்கினேன் * - நோக்குதலும்
மன்னன் திருமார்பும் வாயும் அடி இணையும் *
பன்னு கரதலமும் கண்களும் * - பங்கயத்தின்
பொன்னியல் காடு ஓர் மணிவரை மேல் பூத்தது போல் *
மின்னி ஒளி படைப்ப வீழ் நாணும் தோள் வளையும் *
மன்னிய குண்டலமும் ஆரமும் நீள் முடியும் *
துன்னு வெயில் விரித்த சூளாமணி இமைப்ப *
மன்னு மரதகக் குன்றின் மருங்கே * - ஓர்
இன்னிள வஞ்சிக்கொடி ஒன்று நின்றது தான் *
அன்னமாய் மானாய் அணிமயிலாய் ஆங்கிடையே *
மின்னாய் இளவேய் இரண்டாய் இணைச்செப்பாய் *
முன்னாய தொண்டையாய்க் கெண்டைக் குலம் இரண்டாய் *
அன்ன திருவுருவம் நின்றது அறியாதே *
என்னுடைய நெஞ்சும் அறிவும் இனவளையும் *
பொன்னியலும் மேகலையும் ஆங்கொழியப் போந்தேற்கு *
மன்னும் மறிகடலும் ஆர்க்கும் * - மதி உகுத்த
இன்னிலாவின் கதிரும் என்தனக்கே வெய்தாகும் *
தன்னுடைய தன்மை தவிரத் தான் என் கொலோ? *
தென்னன் பொதியில் செழுஞ்சந்தின் தாதளைந்து *
மன்னிவ்வுலகை மனம் களிப்ப வந்து இயங்கும் *
இன்னிளம் பூந்தென்றலும் வீசும் எரி எனக்கே *

முன்னிய பெண்ணை மேல் முள்முளரிக் கூட்டகத்து *
பின்னும் அவ்வன்றில் பேடை[131] வாய்ச் சிறுகுரலும் *
என்னுடைய நெஞ்சுக்கு ஓரீர் வாளாம் என் செய்கேன்? *
கல்நவில் தோள் காமன் கருப்புச் சிலை வளைய *
கொல்நவிலும் பூங்கணைகள் கோத்துப் பொதவணைந்து *
தன்னுடைய தோள் கழிய வாங்கி * - தமியேன் மேல்
என்னுடைய நெஞ்சே இலக்காக எய்கின்றான் *
பின் இதனைக் காப்பீர்[132] தாம் இல்லையே * - பேதையேன்
கல்நவிலும் காட்டகத்து ஓர் வல்லிக் கடிமலரின் *
நல்நறு வாசம் மற்றாரானும் எய்தாமே *
மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்தது போல் *
என்னுடைய பெண்மையும் என் நலனும் என் முலையும் *
மன்னு மலர் மங்கை மைந்தன் * கணபுரத்துப்
பொன்மலை போல் நின்றவன் தன் பொன்னகலம் தோயாவேல் *
என்னிவை தான்? வாளா எனக்கே பொறையாகி *
முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் *
மன்னும் மருந்தறிவீர் இல்லையே? * - மால் விடையின்
துன்னு பிடரெருத்துத் தூக்குண்டு * வன்தொடரால்
கன்னியர் கண் மிளிரக் கட்டுண்டு * மாலை வாய்த்
தன்னுடைய நா ஒழியாது ஆடும் தனிமணியின் *
இன்னிசை ஓசையும் வந்து என் செவி தனக்கே *
கொல்நவிலும் எஃகில் கொடிதாய் நெடிதாகும் *
என்னிதனைக் காக்குமா? சொல்லீர் * - இது விளைத்த
மன்னன் நறுந்துழாய் வாழ் மார்பன் * - மாமதி கோள்
முன்னம் விடுத்த முகில் வண்ணன் * காயாவின்
சின்ன நறும்பூன் திகழ் வண்ணன் * வண்ணம் போல்
அன்ன கடலை மலை இட்டு அணை கட்டி *
மன்னன் இராவணனை மாமண்டு வெஞ்சமத்து *
பொன் முடிகள் பத்தும் புரளச் சரம் துரந்து *
தென்னுலகம் ஏற்றுவித்த சேவகனை * - ஆயிரக் கண்
மன்னவன் வானமும் வானவர் தம் பொன்னுலகும் *
தன்னுடைய தோள் வலியால் கைக்கொண்ட தானவனை *
பின்னோர் அரி உருவமாகி எரி விழித்து *
கொல்நவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே * - வல்லாளன்
மன்னு மணிக்குஞ்சி பற்றி வரவீர்த்து *
தன்னுடைய தாள் மேல் கிடாத்தி * - அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து புகழ் படைத்த *
மின்னிலங்கும் ஆழிப் படைத் தடக்கை வீரனை *
மன்னு இவ்வகலிடத்தை மாமுது நீர் தான் விழுங்க *
பின்னுமோர் ஏனமாய்ப் புக்கு வளைமருப்பில் *

[131] பெடை
[132] காப்பார்

கொல்நவிலும் கூர்நுதி மேல் வைத்தெடுத்த கூத்தனை *
மன்னும் வட மலையை மத்தாக மாசுணத்தால் *
மின்னும் இருசுடரும் விண்ணும் பிறங்கொளியும் *
தன்னினுடனே சுழல மலை திரித்து * ஆங்கு
இன்னமுதம் வானவரை ஊட்டி * அவருடைய
மன்னும் துயர் கடிந்த வள்ளலை * - மற்றன்றியும்
தன்னுருவம் ஆரும் அறியாமல் தானங்கோர் *
மன்னும் குறள் உருவின் மாணியாய் * - மாவலி தன்
பொன்னியலும் வேள்விக்கண் புக்கிருந்து * போர் வேந்தர்
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி *
என்னுடைய பாதத்தால் யான் அளப்ப மூவடி மண் *
மன்னா! தருகென்று வாய் திறப்ப * - மற்றவனும்
என்னால் தரப்பட்டது என்றலுமே * அத்துணைக்கண்
மின்னார் மணிமுடி போய் விண் தடவ * - மேல் எடுத்த
பொன்னார் கனைகழற்கால் ஏழுலகும் போய்க் கடந்து * அங்கு
ஒன்னா அசுரர் துளங்கச் செல நீட்டி *
மன்னு இவ்வகலிடத்தை மாவலியை வஞ்சித்து *
தன்னுலகம் ஆக்குவித்த தாளானை * - தாமரை மேல்
மின்னிடையாள் நாயகனை விண்ணகருள் பொன்மலையை *
பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர் விடையை *
தென்னன் குறுங்குடியுள் செம்பவளக் குன்றினை *
மன்னிய தண் சேறை வள்ளலை * - மாமலர் மேல்
அன்னம் துயிலும் அணிநீர் வயலாலி *
என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெருமலையை *
கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை *
மின்னை இருசுடரை வெள்ளறையுள் கல்லறை மேல்
பொன்னை * மரதகத்தைப் புட்குழி எம் போரேற்றை *
* மன்னும் அரங்கத்து எம் மாமணியை * - வல்லவாழ்ப்
பின்னை மணாளனை பேரில் பிறப்பிலியை *
தொன்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை *
என் மனத்து மாலை இடவெந்தை ஈசனை *
மன்னும் கடல்மல்லை மாயவனை * - வானவர் தம்
சென்னி மணிச் சுடரைத் தண்கால் திறல் வலியை *
தன்னைப் பிறர் அறியாத் தத்துவத்தை முத்தினை *
அன்னத்தை மீனை அரியை அருமறையை *
முன்னிவ்வுலகுண்ட மூர்த்தியை * - கோவலூர்
மன்னும் இடைகழி எம் மாயவனை * பேய் அலறப்
பின்னும் முலை உண்ட பிள்ளையை * - அள்ளல்வாய்
அன்னம் இரை தேர் அழுந்தூர் எழும் சுடரை *
தென்தில்லைச் சித்திர கூடத்து என் செல்வனை * -
மின்னி மழை தவழும் வேங்கடத்து எம் வித்தகனை *
மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை *

கொல்நவிலும் ஆழிப் படையானை * - கோட்டியூர்
அன்ன உருவின் அரியை * திருமெய்யத்து
இன்னமுத வெள்ளத்தை இந்தளூர் அந்தணனை *
மன்னும் மதிள் கச்சி வேளுக்கை ஆளரியை *
மன்னிய பாடகத்து எம் மைந்தனை * - வெஃகாவில்
உன்னிய யோகத்து உறக்கத்தை * ஊரகத்துள்
அன்னவனை அட்டபுயகரத்து எம்மானேற்றை *
என்னை மனம் கவர்ந்த ஈசனை * - வானவர் தம்
முன்னவனை மூழிக் களத்து விளக்கினை[133] *
அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை *
நென்னலை இன்றினை நாளையை * - நீர்மலை மேல்
மன்னும் மறை நான்கும் ஆனானை * புல்லாணித்
தென்னன் தமிழை வடமொழியை * நாங்கூரில்
மன்னும் மணிமாடக் கோயில் மணாளனை *
நன்னீர்த் தலைச்சங்க நாண்மதியை * - நான் வணங்கும்
கண்ணனைக் கண்ணபுரத்தானை * தென்னறையூர்
மன்னு மணிமாடக் கோயில் மணாளனை *
கல்நவில் தோள் காளையைக் கண்டாங்குக் கை தொழுது *
என்னிலைமை எல்லாம் அறிவித்தால் எம்பெருமான் *
தன் அருளும் ஆகமும் தாரானேல் * - தன்னை நான்
மின்னிடையார் சேரியிலும் வேதியர்கள் வாழ்விடத்தும் *
தன்னடியார் முன்பும் தரணி முழுதாளும் *
கொல்நவிலும் வேல் வேந்தர் கூட்டத்தும் நாட்டகத்தும் *
தன் நிலைமை எல்லாம் அறிவிப்பன் * - தான் முன நாள்
மின்னிடை ஆய்ச்சியர் தம் சேரிக் களவின்கண் *
துன்னு படல் திறந்து புக்கு * - தயிர் வெண்ணெய்
தன் வயிறார விழுங்க * கொழுங்கயற்கண்
மன்னும் மடவோர்கள் பற்றியோர் வான்கயிற்றால் *
பின்னும் உரலோடு கட்டுண்ட பெற்றிமையும் *
அன்னதோர் பூதமாய் ஆயர் விழவின்கண் *
துன்னு சகடத்தால் புக்க பெருஞ்சோற்றை *
முன்னிருந்து முற்றத்தான் துற்றிய தெற்றெனவும் *
மன்னர் பெரும் சவையுள் வாழ் வேந்தர் தூதனாய் *
தன்னை இகழ்ந்துரைப்பத் தான் முன நாள் சென்றதுவும் *
மன்னு பறை கறங்க மங்கையர் தம் கண் களிப்ப *
கொன்னவிலும் கூத்தனாய்ப் பெயர்த்தும் குடமாடி *
என்னிவன்? என்னப்படுகின்ற ஈடறவும் *
தென்னிலங்கை ஆட்டி அரக்கர் குலப் பாவை *
மன்னன் இராவணன் தன் நல்தங்கை * - வாள் எயிற்றுத்
துன்னு சுடு சினத்துச் சூர்பணகாச் சோர்வெய்தி *
பொன்னிறம் கொண்டு புலர்ந்தெழுந்த காமத்தால் *

---

[133] வளத்தினை

தன்னை நயந்தாளைத் தான் முனிந்து மூக்கரிந்து *
மன்னிய திண்ணெனவும் வாய்த்த மலை போலும் *
தன்னிகர் ஒன்றில்லாத தாடகையை * - * மாமுனிக்காத்
தென்னுலகம் ஏற்றுவித்த திண் திறலும் * மற்றிவை தான்
உன்னி உலவா உலகறிய ஊர்வன் நான் *
முன்னி முளைத்தெழுந்து ஓங்கி ஒளி பரந்த *
மன்னிய பூம் பெண்ணை மடல்

[134]என்னிலைமை எல்லாம் அறிவித்தால் எம்பெருமான் *
தன்னருளும் ஆகமும் தாரானேல் * - பின்னைப் போய்
ஒண்டுறை[135] நீர் வேலை உலகறிய ஊர்வன் நான் *
வண்டறை பூம் பெண்ணை மடல்

[136]மண்ணிற்பொடி பூசி வண்டிரைக்கும் பூச்சூடி *
பெண்ணை மடல் பிடித்துப் பின்னே[137] * - அண்ணல்
திருநறையூர் நின்ற பிரான் தேர் போகும் வீதி *
பொரு முறையால்[138] செல்வம் புரிந்து[139]

திருமங்கையாழ்வார் திருவடிகளே ஷரணம்

---

[134] இப்பாட்டு கம்பர் பாடியது என்பர்
[135] ஒண்டிரை
[136] இது மிகுதியாக வழங்குவதில்லை
[137] பின்பின்னே
[138] மறையாய்
[139] பொலிந்து